# உதயன்

www.onlineuthayan.com

32: பக்கங்கள் சுடர் 27 கதிர் 307 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 12 வெள்ளிகிழமை (28/09/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00




27

## இந்திய ஏவுகணை இலங்கையைக் குறிவைக்காது

கொழும்பு,செப் 28

இலங்கையின் கேந்திர நிலைகளை இந்திய ஏவுகணைகள் குறிவைத்துள்ளதாக வெளியான தகவல்களை, நீண்டநாள்கள் கழித்து இந்தியா நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தியா நீண்டகால உள்

பார்க்க பக்கம் 4

# அரசின் நில ஆக்கிரமிப்பை எதிர்த்து கிளிநொச்சியில் திரண்டனர் மக்கள்

கிளிநொச்சி, செப் 28

தமிழர் தாயகப் பிரதேசங்களில் அரசின் நில அபகரிப்பை எதிர்த்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டு வந்து அரசின் இந்த அடக்குமுறைக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

நேற்று முற்பகல் 11மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் முன்பாகக் கூடிய மக்கள் தமது நிலங்களை ஆக்கிரமித்துள்ள படையினர் அங்கிருந்து வெளியேறவேண்டும் எனப் பதாகைகளைத் தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் உணர்ச்சிபூர்வமாகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் போராட்டம் சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றது. இதில் காணாமல் போனோர் மற்றும் சிறைகளிலுள்ளோரின் உறவினரும் கலந்து கொண்டு தங்கள் உறவினர்களை மீட்டுத்தருமாறு கண்ணீர் மல்க கோரிக்கை

பார்க்க பக்கம் 4



# நில ஆக்கிரமிப்பை தடுக்க தலையிட வேண்டும் ஐ.நா.



## கிளிநொச்சியில் மக்கள் பான் கீ– மூனுக்கு மனு

கிளிநொச்சி, செப்.28

தமிழ் இனத்தினதும் சர்வதேச சமூகத்தினதும் எதிர்பார்ப்புகளான நல்லிணக்கம், பகை மறப்பு, மீளுருவாக்கம், மனித உரிமைகள் காப்பு, அதிகாரப் பகிர்வு என்பவற்றைப் புறந்தள்ளி தேசிய இனமான தமிழ் இனத்தை ஒடுக்குவதற்காக தமிழர்களின் நிலத்தையும் அரசு அபகரித்து வைத்திருக்கிறது.

எனவே ஐ.நாவும் சர்வதேசமும் உடனடியாகச் செயற்பட்டு இந்த நில அபகரிப்பைத் தடுத்து நிறுத்துவதுடன் தமிழ் மக்களின் அமைதியான, சுதந்திரமான, மனித உரிமைகள் தழுவிய வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும்.

பார்க்க பக்கம் 4


8 கூடங்குளம் அணு உலைக்கு எதிராகப் பொது மக்களுடன் ம.தி.மு.க. தலைவர் வைகோவும் நேற்று முன்தினம் மண்ணுக் குள் புதைந்தபடி போராட்டம்.

9 ஐ.நா.பாதுகாப்புச் சபையை மாற்றியமைக்க வேண்டும் என்று இந்தியா, பிரேசில், ஜேர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அடங்கிய ஜி4 நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

10 மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட்டை தீவுச் சிறையில் வைக்குமாறு அந்தநாட்டு நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

17 அரசுக்கு பெரும்பான்மை பலம் உள்ளது. எனவே, தீர்வை வழங்க முடியும். இதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு தேவையில்லை என்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல


## 'திவிநெகும' வடக்கில் என்னாகுமோ தெரியாது – கெஹலிய

கொழும்பு,செப்.28

மாகாண சபைகளினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய 'திவிநெகும' சட்டம் வட மாகாணத்தில் எவ்வாறு அங்கீகரிக்கப்படும்? அதனைத் தனிப்பட்ட முறையில் வடக்கு மாகாண ஆளுநர் அங்கீகரிக்க முடியுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு தன்னால் எதுவும் கூறமுடியாது என கைவிரித்தார் அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடக மற்றும் தகவல் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

நேற்று அமைச்சில் நடை

பார்க்க பக்கம் 4

## வடக்கு மாகாண வரைபடத்தில் பல தமிழ்க் கிராமங்கள் அழிப்பு

### மனோ கணேசன் குற்றச்சாட்டு

கிளிநொச்சி,செப் 28

இந்த அரசு தற்போது வடமாகாணத்திலிருந்து பல தமிழ்க் கிராமங்களை அழித்துக் கொண்டிருப்பதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

காணி சுவீகரிப்புக்கு எதிராக நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் உரையாற்

பார்க்க பக்கம் 4

## அரசின் 2013 செலவினம் 2,520 பில்லியன் ரூபா

கொழும்பு,செப்.28

மஹிந்த ராஜபக்ஷ அரசின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டு அறிக்கை ஒக்ரோபர் 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். 2013 ஆம் ஆண்டுக்கான உத்தேச மதிப்பீட்டு செலவினம் 2520 பில்லி யன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது

பார்க்க பக்கம் 4



காணாமற்போன தனது மகனை எப்படியாவது கண்டுபிடித்துத் தாருங்கள் என நேற்றுக் கிளிநொச்சியில் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனிடம் கண்ணீர் மல்கக் கெஞ்சிக் கேட்கிறார் இந்தத் தாய். (த-6)

## திவி நெகும சட்டவரைபை கூட்டமைப்பு எதிர்க்கும்

திருகோணமுலை,செப் 28

உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் மாகாண சபைகளின் அங்கீகாரம் பெறுவதற்காகச் சமர்ப்பிக்

பார்க்க பக்கம் 4

## பல்கலைக்கழக மாணவர் இருவர் நேற்று அதிகாலை விபத்தில் சாவு

### கொலை என மாணவர் ஒன்றியம் சந்தேகம்

கொழும்பு,செப் 28

கொழும்பு கண்டி வீதி, இம்புல்கொட பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களது இறப்பு கொலையாக இருக்கலாம் என அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சஞ்ஜீவ பண்டார தெரிவித்தார்.

மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்களான மேற்படி மாணவர்கள் இருவரும் தற்

பார்க்க பக்கம் 4

## கேப்பாபிலவு மக்களைச் சந்திக்க உதயன் செய்தியாளருக்குத் தடை

முல்லைத்தீவு, செப்.28

நந்திக் கடல் அருகே சூரியபுரம் காட்டுப் பகுதியில் அநாதரவாக விடப்பட்டுள்ள கேப்பாபிலவைச் சேர்ந்த 110 குடும்பங்களின் நிலை குறித்து நேரடியாக அறிந்துகொள்ள நேற்று மாலை அங்கு சென்ற உதயன் செய்தியாளர் படைத்தரப்பினரால் திருப்பி அனுப்பப்பட்டார். மக்களை நேரில் சந்திப்பதற்கு அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

நேற்றுமாலை 5 மணியளவில் சூரியபுரத்துக்குச் சென்ற உதயன் செய்தியாளர் மக்களைப் பார்வையிடப் படையினர் அனுமதிக்க

பார்க்க பக்கம் 4

## காற்றுக்கும் மழைக்கும் மத்தியில் அல்லல்படும் கேப்பாபிலவு மக்கள்

முல்லைத்தீவு, செப்.28

வீசும் காற்றுக்கும் மழைக்கும் ஈடுகொடுக்க முடியாத தறப்பாளுடன் தமது உடைமைகளைப் பாதுகாக்கப் போராடியவாறு கேப்பாபிலவு மக்களின் அவலம் தொடர்ந்தவண்ணம் உள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சொந்த இடத்தில் மீள் குடியமர்வு எனக் கூறிக் கடந்த செவ்வாய்க்கிழமை நந்திக்கடல் அருகே சூரியபுரம் காட்டுப் பகுதியில் படையினரால் இறக்கிவிடப்பட்ட சுமார் 110 குடும்பங்களுக்கான அடிப்படை வசதிகள் இதுவரை உரிய தரப்பி

பார்க்க பக்கம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையில் தலையிடும் அவசியம் எனக்கு இல்லை!

## ஆணைக்குழுவைப் பேச்சுக்கு அழைத்தது அழுத்தம் வழங்க அல்ல என்கிறார் ஜனாதிபதி



நீதித்துறையில் எதுவித தலையீட்டையும் நான் இதுவரை செய்யவில்லை; செய்யப்போவதுமில்லை. அப்படி செய்வதற்கான எந்தத் தேவையும் எனக்கில்லை. நீதிச்சேவை ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்துவதற்கான கோரிக்கைக் கடிதத்தை எனது செயலாளர் அனுப்பியமை பற்றி எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், அப்படியான கடிதத்தை அனுப்பவேண்டாம் என்றுதான் கூறியிருப்பேன். நீதிச்சேவைகள் ஆணைக்குழு தொடர்பிலான பல முறைப்பாடுகள், குற்றச்சாட்டுகள் என்னிடம் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. நான் அவற்றை ஆராயாமல் இருப்பது நீதித்துறைக்குள் தலையிடக்கூடாது என்பதற்காகத்தான்.

- இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பத்திரிகை ஆசிரியர்களை நேற்றுக்காலை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட ஜனாதிபதி, பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்து மேலும் கூறியதாவது,

நீதிச்சேவைக்குள் எனது நிர்ப்பந்தம் எப்போதாவது இருந்திருக்கிறதா என்று எவரிடமாவது கேளுங்கள். நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்துவதற்கான அழைப்புக் கடிதம் எனது செயலாளரால் அனுப்பப்பட்டது. நீதிவான், நீதிபதிமாருக்கு வெளிநாட்டில் பயிற்சிகளை வழங்குதல், வரவு - செலவுத் திட்டத்தில் நீதித்துறைக்கு ஒதுக்கப்படவேண்டிய மானியங்கள் போன்ற பொதுவான விடயங்களைப் பற்றிப் பேசவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டது.

யாரோ நீதிவான் ஒருவர் இடமாற்றப்பட்டதாகவும், அதுபற்றி பேசுவதற்காகத்தான் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் வந்த செய்திகள் தவறானவை. பிரதம நீதியரசர் மற்றும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவுடன் நாங்கள் எத்தனையோ தடவைகள் பேச்சுகளை நடத்தியுள்ளோம். எத்தனையோ கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளோம். இந்தப் பின்னணியில் அவர்கள் ஏன் இந்த அழைப்பைத் தப்பாகப் புரிந்துகொண்டனர் என்றுதான் தெரியவில்லை.

சுமார் 19 வருடங்களாக நானும் சட்டத்தரணியாகப் பணிபுரிந்துள்ளேன். நீதித்துறையின் தனித்துவம் பற்றி எனக்கு நன்கு தெரியும். இதனால்தான் நான் அமைதிகாத்து வருகிறேன். நான் எந்த அறிக்கைகளையும் விடவில்லை. நீதித்துறை மீது நம்பிக்கை இல்லாதபட்சத்தில் அது நாட்டுக்கு நல்லதல்ல. நீதித்துறையும், நீதிமன்றங்களும் நியாயமாக நடப்பதாக மக்களுக்குத் தெரியவேண்டும்.

நான் 42 வருடகாலம் அரசியலில் இருக்கிறேன். நீதித்துறையை எப்படிக் கையாளவேண்டும் என்பது பற்றி எனக்குத் தெரியும். வழக்கு ஒன்றுக்குக்கூட சட்டத்தரணியொருவர் ஊடாகத்தான் நாம் விடயங்களைக் கையாள்வோம். நீதிமன்றத் தீர்ப்பு சரியோ, பிழையோ நீதித்துறை தொடர்பாக ஒரு மரியாதை உள்ளது.

நீதிச்சேவைகள் ஆணைக் குழுவுக்கு நான் பல விடயங்களைச் செய்துகொடுத்துள்ளேன். பல கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளேன். சில விடயங்களை இங்கு நான் கூறமாட்டேன். தவறான விதத்தில் நீங்கள் செய்திகளை வெளியிட்டால் பின்னர் எனக்குத்தான் பிரச்சினை. எனது செயலாளர் அனுப்பிய கடிதம் பற்றி எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால், அனுப்பவேண்டாம் என்றுதான் கூறியிருப்பேன்.

நீதிச்சேவைகள் ஆணைக் குழுவுக்கு சிரேஷ்ட ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது தொடர்பிலும் என்னிடம் முறைப்பாடுகள் வந்தன. மூப்பு அடிப்படையிலான பட்டியலில் முப்பதாவது இடத்தில் இருந்த ஒருவர் எப்படி செயலாளரானார் என்றும் என்னிடம் முறையிடப்பட்டது. இப்படியான முறைப்பாடுகள் இருப்பதாக நான் ஆரம்பத்திலேயே அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். என்றாலும் அந்த விடயத்தில் நான் தலையிடவில்லை. செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட முன்னர்தான் இதனைக் கூறினேன். செயலாளர் நியமனத்தின் பின்னர் எதையுமே கூறவில்லை.

நீதித்துறையில் அநீதியான இடமாற்றங்கள், பழிவாங்கல்கள் போன்ற விடயங்கள் குறித்து என்னிடம் ஏராளமான முறைப்பாடுகள் வந்தபோதிலும் நான் அவற்றில் தலையிட்டதே இல்லை. நீதித்துறையில் நான் எந்தத் தலையீடும் செய்ததில்லை. அதற்கான தேவையும் கிடையாது - என்றார் ஜனாதிபதி.

(த-சி)

### பஸ் குடைசாய்ந்து 10 பேர் காயம்

வவுனியாவில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஓமந்தையில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் 10 ற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று மாலை ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றது. ஓமந்தைப் பகுதியில் வந்து கொண்டிருந்த பஸ் முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை முந்த முயற்சித்த போதே தடம் புரண்டு குடைசாய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(16-6-400-402)

### விபத்தில் குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம், செப். 28

இராணுவத்தினரது வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பஸ்தர் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து பலாலி வீதி, கோண்டாவில் சந்தியை அண்மித்து நேற்று இடம்பெற்றது. சம்பவத்தில் உரும்பிராயைச் சேர்ந்த வி.ஜெகநாதன் (வயது-26) என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(த-4)

## மின்சாரம் தாக்கி இளைஞர் சாவு

யாழ்ப்பாணம், செப்.28

மின்மோட்டர் மூலமாக தண்ணீர் பாய்ச்சி வாகனத்தைக் கழுவிய இளைஞர் மின் ஒழுக்குக் காரணமாக மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

இச் சம்பவம் வட்டுக்கோட்டை சங்கரத்தையில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் மல்லாவி, அனிஞ்சியன் குளம் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி திருக்குமரன் (வயது 30) என்ற இளைஞரே உயிரிழந்தார். இவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பின்னர் புனர்வாழ்வு பெற்று சுமார் 8 மாதங்களுக்கு முன்னர் விடுதலையாகியிருந்தார்.

தொழில் நிமிர்த்தம் சங்கரத்தையில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்த இவர் மோட்டர் மூலமாக வாகனத்தைக் கழுவிக்கொண்டிருந்த போது மின் வயரிலிருந்த இணைப்பினூடாக மின் ஒழுக்கு ஏற்பட்டு மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகிச் சம்பவ இடத்திலேயே விழுந்தார் என்று ஆரம்ப விசாரணையில் கூறப்பட்டது. உடனடியாக அவரை யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்ற போது அவர் உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். மல்லாகம் நீதிவான் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(த-4)

### வடக்குத் தேர்தல் குறித்து கெஹலிய மழுப்பல் பதில்

வருடா வருடம் நாம் தேர்தல்களை நடத்துகின்றோம். அதன்படி வடக்கு மாகாண சபைக்கான தேர்தலும் நடத்தப்படும் என மழுப்பினார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

2013 ஆம் ஆண்டில் வடமாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என்று அரசு கூறி உள்ளது. அப்படியானால் அடுத்த ஆண்டில் வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுமா என அமைச்சரிடம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அமைச்சர் நேரடியாக எந்தப் பதிலையும் கூறாமல் நாம்தாம் வருடார்ந்தம் தேர்தல்களை நடத்திவருகின்றோம். அதன்படி வடமாகாண சபைக்கான தேர்தலும் நடத்தப்படும் என மழுப்பிவிட்டார். (த-2)



சூரியபுரம் காட்டுப் பகுதியில் எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படாமல் மழைக்கு ஒதுங்கக் கூட இடமில்லாமல் தற்காலிக கொட்டகைகளை அமைத்து மக்கள் வசித்து வருகின்றனர். (400)

## கண் பார்வையற்ற பெற்றோரின் வாழ்க்கையில் ஒளியேற்றிய மகள்

### 185 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலிடம்

வரக்காப்பொலை, மியெதுருபொலவிலுள்ள கண் தெரியாத பெற்றோர்களின் மகளான ரஷாரா திலினிகா மதுஷானி, 5ஆம் தரப்புலமைப்பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகளுடன் கேகாலை மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவரின் தாய், தந்தை இருவருக்கும் கண்பார்வை இல்லை. டபிள்யு.ஹேரத் என்ற இவரது தந்தை அபிவிருத்தி அதிர்ஷ்ட டிக்கட்டுக்களை விற்றே தனது குடும்பத்தை நடத்தி வருகிறார்.

தம் இருவருக்கும் கண் தெரியாவிட்டாலும் இந்தப் பெற்றோர்கள் தமது மகளை மிகவும் கஷ்டப்பட்டு படிக்கவைத்து வருகின்றனர்.

தான் கல்வி கற்பதற்காகக் கண்பார்வை இல்லாத நிலையிலும் தனது பெற்றோர்கள் படும் துன்பத்தைக் கண்டு இலட்சியத்துடன் படித்த ரஷாரா திலினியா மதுஷானி 185 புள்ளிகளைப் பெற்று கேகாலை மாவட்ட மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

# கிழக்கில் சுழற்சி முறை முதல்வரா? 2½ வருடங்களின் பின்னர் பேசலாம்

கிழக்கு மாகாணத்தில் 'சுழற்சி முறையிலான முதல்வர்' விவகாரம் பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துவரும் நிலையில், கிழக்கு மாகாண முதல்வர் விவகாரம் தொடர்பில் இன்னும் இரண்டரை வருடங்களுக்குப் பின்னர் பேசலாம் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஊடகவியலாளரொருவர், ''கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியை இரண்டரை வருடங்களுக்கு ஒரு தடவை பகிர்ந்தளிக்கும் முறையில் இடமில்லை என்று கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சர் கூறியுள்ளார். ஆனால், இரண்டரை வருடங்களுக்குப் பின்னர் தனது உறுப்பினரொருவருக்குக் கிழக்கு முதலமைச்சர் பதவி கிடைக்குமென முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துவருகின்றது. இந்த விடயம் தொடர்பில் அரசுக்கும், மு.காவுக்குமிடையில் ஏதாவது இணக்கப்பாடு உள்ளதா?" என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவிடம் கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு உள்ளது. எனவே, அந்த விடயத்தில் அரசமைப்பு தாக்கம் செலுத்தாது. எது எப்படியிருந்தபோதிலும், இன்னும் இரண்டரை வருடங்கள் இருக்கின்றனவே? அதன் பின்னர் இது குறித்துப் பேசலாம் எனப் புன்னகையுடன் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டயலொக் நிறுவனத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண கல்வித் திணைக்களத்துடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு சித்திரப் போட்டியும் கண்காட்சியும் யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் தரம்-4,5,6,7 மாணவர்களுக்கு இந்தப் போட்டி நடத்தப்பட்டது. இறுதியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ம-13)

## யாழ்.மருத்துவபீடத்துக்கு மூன்று மாடிக் கட்டம் திறப்பு

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கென குவைத் அரசின் 65 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட இணை மருத்துவ விஞ்ஞான அலகுக்கான மூன்று மாடிக் கட்டடத்தொகுதி இன்று காலை 9 மணிக்கு உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கவால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குவைத் அரசின் சுனாமித் திட்டத்துக்கென வழங்கப்பட்ட நிதியில் எஞ்சிய தொகையான 65 மில்லியன் ரூபாவில் இந்த மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கான இணை மருத்துவ விஞ்ஞான அலகு பயிற்சிநெறிகள் இதுவரை பல்கலைக்கழகத்துக்கு வெளியே இடம்பெற்று வந்தன. இந்த நிலையில் அதற்கென நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் இன்று திறந்து வைக்கப்படுகின்றது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக உயர் கல்வி பிரதி அமைச்சர் நந்தமித்திர ஏக்க நாயக்கவும் மற்றும் உயர் கல்வி அமைச்சர்செயலாளர்கலாநிதி ஜெயந்த நவரட்ணஉட்படபலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-4)

## யாழ். இந்துவின் தமிழ்மொழித் தின விழா

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ் மொழித்தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் குமாரசாமி மண்டபத்தில் சங்கத் தலைவர் ப.பிரதீஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவனும் வவுனியா மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரும் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் உறுப்பினருமாகிய தமிழருவி த.சிவகுமாரன் கலந்து கொள்வார்.

வரவேற்புரையை ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீயும் ஆசியுரையைக் கல்லூரியின் முதல்வர் வீ.கணேசராசாவும் ஆசிரியர் உரையை நா.விமலநாதனும் நிகழ்த்துவர். பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து பரிசில்களைப் பிரதம விருந்தினர் வழங்குவார்.தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ம-400 )

## நீர்வெறுப்புநோய் தின நிகழ்வுகள் தென்மராட்சியில்

தென்மராட்சி, செப்.28

உலக நீர்வெறுப்பு நோய் தினத்தையொட்டி இன்று சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் பல்வேறு விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

சாவகச்சேரி நகர சபையுடன் இணைந்து இன்று காலை 9 மணிக்கு நகர சபை கேட்போர் கூடத்தில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில் மன்ற உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் நகர்ப் பகுதி பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்வுள்ளனர் என்று செயலாளர் சு.புத்திசிகாமணி தெரிவித்தார்.

இதேவேளை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பல பிரிவுகளில் விழிப்புணர்வு செயற்பாடுகள் மேற்கொள்ளவுள்ளதாகச் சுகாதாரப் பகுதியினர் கூறினர். (ம-9)

### நீண்ட கொடும் வறட்சியின் பின் அதிகாலை

# கொட்டித்தீர்த்தது மழை குளிர்ந்தது குடாநாடு

யாழ்ப்பாணம், செப்.28

*யாழ்.குடாநாட்டில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் நேற்று அதிகாலை கொட்டித்தீர்த்த கனமழையால் இதுவரை காலமும் நிலவி வந்த கடும் வறட்சி நிலை சற்று குறைவடைந்தது. விவசாய நிலங்கள் குளிச்சியடைந்தன. நேற்று அதிகாலை 1.30 மணியளவில் கடும் காற்றுடன் கூடிய மழை குடாநாட்டின் பல பாகங்களிலும் கொட்டித் தீர்த்தது. சுமார் 5 மணிநேரம் தொடர்ந்து பெய்த இந்த மழையால் குளிர்ச்சி ஏற்பட்டுள்ளது.*

இயற்கையின் மாறுபட்ட செயற்பாட்டால் இவ் வருடம் குடாநாட்டில் மழை இல்லாது கடும் வறட்சி நிலை தொடர்ந்து நிலவியது.

சித்திரைச் சிறு மழையென கூறப்படும் அந்தப் பருவ காலத்து மழை கூட இந்த வருடம் குடாநாட்டுக்குக் கிடைக்கவில்லை. அது தவிர தற்போது பெரும் மழைக்கால நிலையில் மழை பெய்யாது இருந்தமையால் பெரும்வறட்சிகாணப்பட்டது.

குளங்கள் வற்றியது மட்டுமன்றி கிணறுகளும் நீர்மட்டம் அடியோடு இல்லாத நிலையும் ஏற்பட்டுக் காணப்பட்டது. இந்த நிலையில் கால்நடைகள் தண்ணீர் இன்றி அலைந்து திரிந்து பெரும் எண்ணிக்கையில் இறந்தன. தீவகப் பகுதிகளிலேயே கால்நடைகள் பெரும்பாலும் இறந்துள்ளன.

அத்துடன் மக்களும் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு இருந்தனர். நீண்ட தூரத்துக்கு நடந்து சென்று தண்ணீரைப் பெற்று வரவேண்டிய நிலைக்கும் மக்கள் தள்ளப்பட்டிருந்தன. பெரும்பாலும் தீவுப் பகுதி மக்களே தண்ணீர் இல்லாது பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். தென்மராட்சிப் பகுதிகளிலும் குறிப்பிட்ட ஒரு சில இடங்களில் கிணறுகளில் முற்றாகவே தண்ணீர் இல்லாத நிலைமையும் காணப்பட்டது.

இந்த இயற்கையின் மாற்றத்தால் பயிர் நிலங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டன. பெரும்பாலானபயிர்நிலங்கள் தண்ணீர் இன்றி கருகி நாசமடைந்தமையும்குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் மரக்கறிகளின் விலைகளும் உச்சம் பெற்றன. நெற்செய்கை மேற்கொண்டிருந்த விவசாயிகளில் ஒரு சிலர் பவுசர்கள் மூலம் வேறு இடங்களிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து வயல்களுக்கு ஊற்றும் நிலைமையும் இந்தக் காலத்தில் ஏற்பட்டிருந்தது.

இந்தக் கடும் வறட்சி மற்றும் வெப்ப காலநிலையால் வெப்ப நோய்களுக்கும் குறைவில்லாத நிலைமையே காணப்பட்டது. காய்ச்சல், சளி, சுவாச நோய்கள் போன்ற பல்வேறு வெப்ப நோய்களால் பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை பெய்த மழை மக்களிடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. யாழ்.குடாநாட்டில் பெய்த இந்த கனமழை 38.3 மில்லிமீற்றர் என்று பதிவாகியுள்ளதாக யாழ். வானிலை ஆராய்ச்சி நிலையத்தின்பொறுப்பதிகாரி எஸ்.எச்.எம். ஹேரத் தெரிவித்தார்.(ம-4-7-8-9-17-135)

## பெரும்போகச் செய்கைக்கான ஆயத்தப் பணியில் விவசாயிகள்

**மழை பெய்ததை அடுத்து**

யாழ்.குடாநாட்டில் பெரும் போக நெற்செய்கைக்கான ஆயத்தப் பணிகளில் விவசாயிகள் நேற்றுத் தடல்புடலாக ஈடுபட்டனர்.

நேற்று அதிகாலை பெய்த மழையை அடுத்து விவசாயிகள் தமது வயல் நிலங்களை உழுது சீர்செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டனர்.

கடும் வறட்சியால் பெரும் போக நெற் செய்கையை ஆரம்பிக்க முடியாது திண்டாடிய விவசாயிகளுக்கு இந்த மழை பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது.

முன்னர் மழை பெய்யாததை அடுத்துச் சில விவசாயிகள் தமது வயல் கிணறுகளில் இருந்து நீரைப் பாய்ச்சி வயல்களை உழுது சீர்செய்தும் பசளையிட்டும் வந்தனர்.

நேற்று அதிகாலை பரவலாக நல்ல மழை பெய்ததை அடுத்து மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் வயல்களை உழுது பண்படுத்துவதில் நேற்றுக்காலை முதல் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

பெரும்போகநெற்செய்கைக்கான காலம் பிந்தி கொண்டு செல்வதால் உடனே வயல்களைச் சீர்செய்து புழுதி விதைப்பையாவதுமேற்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்துடன் விவசாயிகள் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (த-17)

## மின் விளக்குகள் பொருத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.28

கொடிகாமம் பிரதேசத்தின் பிரதான நாற்சந்திப் பகுதியில் குறிப்பாக பழைய பஸ் தரிப்பிடப் பகுதியில் மின்விளக்குகள் பொருத்தப்படாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

**மின் விளக்குகள் பொருத்த வேண்டியதன் அவசியத்தை ஏன் புரிந்து கொள்ளவில்லை.**

இந்தப்பகுதியால்பலஇடங்களையும் சேர்ந்த மக்கள் சென்றுவரும் நிலையில் இருளில்நெருக்கடிநிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் மின் விளக்குகள் பொருத்த வேண்டியதன் அவசியத்தை உரிய அதிகாரிகள் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் இருளில் பயணிக்கும் மக்கள் குறிப்பாக வாகனங்களில் செல்வோர் எதிரே வருவோர் குறித்துத் தெளிவாக அறிய முடியவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் இச்சந்திப் பகுதிக்கும் வீதி மின் விளக்குகளை பொருத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் "சிறுவர் நலனைப் பேணலும் பெற்றோரின் மனப்பாங்கும்" எனும் தலைப்பிலான கலந்துரையாடல் முற்பகல் 10 மணிக்கு இல.90 பாங்ஷால் வீதி மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு மாவட்ட நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

* * *

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் மற்றும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் 'சி' பிரிவு என்பன இணைந்து நடத்தும் 'வாய், மார்பக மற்றும் கர்ப்பப்பைக் கழுத்து புற்றுநோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் மாலை 5 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் புற்றுநோய் திரையிடல் குழுத் தலைவர் மருத்துவக் கலாநிதி ரங்கசுவாமி சங்கரநாராயணன் கருத்துரை நிகழ்த்துவார். (ம-14)

**குறும்பட விழா**

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் "ஈழத்தவர் குறும்பட விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வு காலை 9.30 மணிக்கு ஜும்மா மொஸ்க் லேனின் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் விமல்சுவாமிநாதன் மற்றும் கலாநிதி க.ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'கைத்தொலைபேசி குறும்படம்' எனும் தலைப்பில் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் இயக்குநர் தே.தேவானந்தும் "மக்கள் தொடர்பாடல் ஊடகமாக குறும்படங்கள்" எனும் தலைப்பில் கவிஞர் சோ.பத்மநாதனும் கருத்துரை நிகழ்த்துவர். (ம-14)

**கண்காட்சி**

ஐ.ரி.எஸ்.கணினிப் பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் "காலத்தின் கைகளில்" எனும் தலைப்பிலான தகவல் தொழில்நுட்ப தேடல் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை இளவாலை பிரதான வீதியில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (ம-14)

**ஆண்டு நிறைவு**

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றுக்கும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

னரால் செய்துகொடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இரவில் மின்சார வசதி எதுவுமின்றி மிருகங்களின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்தவாறு வாழும் இந்த மக்களுக்கு அருமருந்தாக இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் மட்டுமே வழங்கப்பட்டதாக அந்த மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு உணவுப் பொதி வழங்கப்பட்டதாகவும் எனினும் நேற்று எந்த உணவுப் பொருள்களோ அல்லது நிவாரணப் பொருள்களோ வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் தமது சொந்த முயற்சியில் தறப்பாள்கள், மரங்களைப் பயன்படுத்தி தற்காலிகக் கொட்டகைகளை அமைத்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது எனவும் கூறப்பட்டது.

பெண்கள், சிறுவர்கள் குளிப்பதற்குரிய பாதுகாப்பான இடங்கள் இல்லாத நிலையே அங்கு தொடர்கிறது.

இதேவேளை, மக்களைச் சுற்றிப் பெருமளவான படையினரும், படைப் புலனாய்வாளர்களும் சீருடைகளில் சுற்றித் திரிவதாகவும் கூறப்படுகிறது. (த-16-400)

## இந்திய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நாட்டு ஏவுகணை அபிவிருத்தித் திட்டத்தைக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம், தற்காப்பு நோக்கத்தைக் கொண்டதேயன்றி, எந்தவொரு நாட்டுக்கும் எதிரானது அல்ல.

இந்திய ஏவுகணைகள் இலங்கையின் கேந்திர நிலைகளை குறிவைத்துள்ளதாகச் சில இணையங்களிலும், அச்சு ஊடகங்களிலும் செய்திகள் வெளியானதை அவதானிக்க முடிந்தது.

இந்தச் செய்தி முற்றிலும் அடிப்படையற்றது. திரித்துக் கூறப்பட்டது.

முக்கியப் பிரச்சினைகளில் இருந்து திசை திருப்பும் நோக்கில் வெளியிடப்பட்டதாக ஊகிக்கப்படும் இந்தச் செய்திகளால், பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்களில் இந்தியாவும், இலங்கையும் கொண்டுள்ள நெருக்கமான உறவுகள் பாதிக்கப்படாது என்று கூறப்பட்டுள்ளது. (த)

## 'திவிநெகும' வடக்கில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இப்படிக் கூறினார்.

சர்ச்சைக்குரிய 'திவிநெகும' சட்டவரைபு மாகாண சபைகளினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆனால் இப்பொழுது வடமாகாண சபை என்று ஒன்று இல்லை. அங்கு ஆளுநரின் ஆட்சியே நடைபெறுகின்றது.

அப்படியானால் தனிப்பட்ட முறையில் ஒரு ஆளுநரினால் இந்த சட்டத்தை அங்கீகரிக்க முடியுமா? ஆளுநருக்கு அந்த அதிகாரம் உண்டா? என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தக் கேள்வியை கேட்ட போது அமைச்சர் இந்த விடயம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது எனக் கைவிரித்து விட்டார். (த-2)

## அரசின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விடுத்திருந்தனர். சர்வதேசமே இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன எமது பிள்ளைகளை மீட்டுத்தர நடவடிக்கை எடு என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட உறவுகளை இழந்த தாய்மார் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

காணாமல் போனவர்களின் புகைப்படங்களை வைத்துக் கொண்டு கண்ணீர் மல்க நெஞ்சை உருக்கும் வகையில் அவர்கள் ஒன்றாக சர்வதேசத்திடம் நீதி கோரினார்கள்.

இந்தப் போராட்டத்தில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, வினோ நோகராதலிங்கம், சி.சிறிதரன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னிணியின் சார்பில் அதன் செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோரும், கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

போராட்டத்தின் முடிவில் நில அபகரிப்பைத் தடுத்து நிறுத்துமாறு ஐ.நாவிடம் கோரும் மனு ஒன்று ஐ.நாவுக்கான வதிவிடப்பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது. (த-6)

## வடக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மருதநகர், கிருஸ்ணபுரம், இரணைத்தீவு ஆகிய கிராமங்கள் திட்டமிட்ட முறையில் வடக்கு மாகாண வரைபடத்திலிருந்து அகற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தற்போது கேப்பாபிலவு கிராமம் கூட வரைபடத்திலிருந்து அகற்றப்பட்டுக்கொண்டிருப்பதும் அனைவருக்கும் தெரிந்ததே. இவ்வாறு தமிழ்க் கிராமங்கள் அகற்றப்படுகின்றதென்றால் தமிழர்களின் இருப்பு, வரலாறு, பாரம்பரியம், கலாசாரம் ஆகியனவும் அகற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றதென்பதே பொருள்.

சுவரின்றிச் சித்திரம் வரையமுடியாது. அந்த வகையில் எமது சுவர் எமது மண். எனவே மண்ணிருந்தால்தான் நாம் ஒரே இனமாக வாழமுடியும். நாம் ஒரே இனமாக வாழக் கூடாது, வாழமுடியாதென்ற அகங்காரம் காரணமாகத்தான் மஹிந்த அரசு தமிழர்களை அவர்களது கிராமத்துக்குச் செல்ல முடியாது தடுத்துக்கொண்டிருக்கின்றது.

யுத்தம் முடிந்து 3 ஆண்டுகளாகின்றன என அரசு தெரிவிக்கின்றது. அதுவும் அண்மையில் கிளிநொச்சியில் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார். தெற்கிலுள்ள மக்கள் அனுபவிக்கின்ற சுதந்திரத்தை வடக்கு மக்களும் அனுபவிப்பதாக. ஆனால் தெற்கிலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்கள் பெற்றுள்ள சுதந்திரம் வடக்கிலுள்ள மக்கள் அனுபவிக்கவில்லையென்பதை கண்கூடாகக் காணமுடிகின்றது.

தமிழர்கள் சொந்த மண்ணுக்கு செல்லமுடியவில்லை. சொந்த மண்ணில் விவசாயம் செய்யமுடியவில்லை இவை சுதந்திரமுமில்லை, உரிமையுமில்லை. தெற்கு மக்களுக்குள்ள அனைத்துச் சுதந்திரமும் வடக்கில் அழிக்கப்படுகின்றது. இதற்காகதான் நாம் ஜனநாயக ரீதியாக போராடுகின்றோம். தமிழர்களை பொறுத்தவரை, எமக்குள்ள ஒரே வழி ஜனநாயக ரீதியாக எமது உரிமைக்குரலை ஒலிக்கச்செய்வதே-என்றார். (த)

## நில ஆக்கிரமிப்பை..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இவ்வாறு வலியுறுத்தி ஐ.நா. செயலர் பான் கீ-மூனுக்குக் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அவசர மனு ஒன்றை நேற்று வியாழக்கிழமை அனுப்பி வைத்துள்ளனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தில் வன்னிக்கான வதிவிடப் பிரதிநிதி விக்ரோரியாவிடம் நேற்று இந்த மனு கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ள பரவிப் பாஞ்சான், மருதநகர், கிருஷ்ணபுரம், இரணைதீவு, இயக்கச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து இந்த மனுவைக் கையளித்துள்ளனர்.

இந்த மனுவின் பிரதி ஒன்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக நில ஆக்கிரமிப்புக்கும் இன ஒடுக்குமுறைக்கும் உள்ளாகியிருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்த நிலை 2009ஆம் ஆண்டு அரசு - புலிகள் இறுதிப் போரின் பின்னர் அதி தீவிரத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலப்பறிப்பும், நில ஆக்கிரமிப்பும் திட்டமிட்ட முறையில் அரசால் மேற்கொள்ளப்படுகிறது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு முழுமையும் இந்த நடவடிக்கைகள் அரசால் மிகச் செறிவாக மேற்கொள்ளப்படுகிறது. குடிமக்களுக்குச் சொந்தமாக வாழ்விடங்கள் அபகரிக்கப்படுவதுடன் சொந்தக் காணிகளில் மீளக்குடியேற முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிராமங்களில் மக்களின் மீள்குடியேற்றத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளின் நிமித்தம் பாதிக்கப்பட்ட மக்கள் 2012.09.27 வியாழக்கிழமை அன்று கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடிய நாம் எமது மக்களின் ஜனநாயக எதிர்பார்ப்புகளை, கவலைகளை, கண்டனங்களை, மீளக்குடியேறுவதற்கான எமது உரிமையை இந்த மனுவின் ஊடாகத் தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

சரித்திரபூர்வமாகத் தமிழர்கள் வாழ்ந்த நிலங்களும், அவர்களுடைய வளங்களும் அரசாலும், அரச படைகளாலும் பலவந்தமாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற குடிசன எண்ணிக்கைக்குப் பொருத்தமற்ற விகிதாசாரத்தில் அதிகரித்த இராணுவப் படையணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய படைச் செறிவு அதிகரிப்பு எமது மக்களின் நாளாந்த வாழ்க்கையை அச்சுறுத்துவதாக அமைவதுடன் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தின் தலையீட்டுக்கும் வழிகோலியுள்ளது. தேசிய பாதுகாப்பு, அபிவிருத்தி என்கின்ற கருத்து நிலைப்பாடுகளுக்கூடாக படைத்துறைப் பரவலாக்கலையும், நில அபகரிப்பையும் அரசு நியாயப்படுத்தி வருகிறது.

தமிழ்ச் சமூகத்தினதும் சர்வதேச சமூகத்தினதும் எதிர்பார்ப்புகளான நல்லிணக்கம், பகைமறப்பு, மீளுருவாக்கம், மனித உரிமைகள் காப்பு, அதிகாரப் பகிர்வு என்பவற்றைப் புறந்தள்ளியவாறு தேசிய இனம் ஒன்றை ஒடுக்குவதற்கான நவீன தந்திரோபாயங்களுடன் தமிழ் இனத்தையும் அவர்களின் நிலத்தையும் அரசு அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது.

தமிழ்ச் சமூகம் நம்பிக்கையோடு ஏற்றிருக்கின்ற ஜெனீவாத் தீர்மானத்தை மதிப்பதில்லை என்ற அதிகார மமதையோடும் அரசியல் மற்றும் சிவில் சமூகங்களின் மீதான அச்சுறுத்தல்களை அதிகரித்தவாறும் அடிப்படை உரிமைகளையும், மனித உரிமைகளையும் பேணாநிலை தொடர்ந்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே கிளிநொச்சி மாவட்டத்தின் பின்வரும் இடங்களில் எங்களுடைய காணிகளில் மீளக்குடியேறுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீளக்குடியேறுவதற்கு எமக்குள்ள உரிமையை உறுதிப்படுத்தும் அதேவேளை தமிழ் மக்களுடைய அமைதியானதும், சுதந்திரமானதும், மனித உரிமைகள் தழுவியதுமான வாழ்வியல் ஒன்றைக் கட்டமைப்பதற்கு சர்வதேச சமூகம் தனது சர்வதேச கடப்பாடுகளை வலுவான முறையில் செயற்படுத்துமாறு வலியுறுத்தி அந்த மனுவைத் தங்களுக்கு முன்னளிக்கின்றோம்.- என்றுள்ளது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேற்றப்படாது தடுக்கப்பட்டுள்ள நிலங்களின் விவரம் வருமாறு:-

| பிரதேச செயலர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | நில அளவு (ஏக்கர்) | குடும்ப எண்ணிக்கை | ஆக்கிரமித்துள்ள படையணி |
|---|---|---|---|---|
| கரைச்சி | பரவிப்பாஞ்சான் | 227 | 167 | 57, 58 ஆவது படையணி |
| கரைச்சி | மருதநகர் | 48 | 19 | 57, 58 ஆவது படையணி |
| கரைச்சி | கிருஷ்ணபுரம் | 40 | 24 | AIPA பயிற்சிப் படையணி |
| கரைச்சி | கிளிநகரம் | 11 | 22 | இராணுவ சிவில் நிர்வாகப்பிரிவு |
| கரைச்சி | கண்ணகைபுரம் | 140 | வயல்நிலம் | 53ஆவது படையணி |
| பூநகரி | இரணைதீவு | | 287 | இலங்கை [illegible]படைப்பிரிவு |
| பச்சிலைப்பள்ளி | இயக்கச்சி | 13 | 11 | 53ஆவது படையணி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேப்பாபிலவு..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வில்லை. அந்தப் பகுதிக்கு யாரும் செல்லாதவாறு கடும் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. உதயன் செய்தியாளர் தான் சூரியபுரத்தில் தங்க வைக்கப்படவுள்ள மக்களைப் பார்வையிட உள்ளதாகவும் அவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான உரிமை தனக்கு இருப்பதாகவும் படைத்தரப்பிடம் கூறினார். அத்துடன் தகவல் திணைக்களத்தினால் தனக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையையும் அங்கிருந்த படையினரிடம் காண்பித்து தனது பணியைத் தடையின்றிச் செய்ய அனுமதிக்க வேண்டும் எனவும் அதுபற்றி தகவல் திணைக்களத்தின் அடையாள அட்டையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார். எனினும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஊடகவியலாளர்களை அனுமதிக்கக் கூடாது எனத் தமக்கு மேலிடத்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகப் படையினர் ஊடகவியலாளரிடம் தெரிவித்தனர். யார் அந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்பது பற்றி அறிந்துகொள்ள முடியுமா என ஊடகவியலாளர் படையினரிடம் திருப்பிக் கேட்டபோதும் அது பற்றித் தெரிவிக்க முடியாது என அவர்கள் மறுத்துவிட்டனர்.

அந்தப் பகுதிக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் மார்க் என்பரே அந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக படைப் புலனாய்வாளர் ஒருவர் ஊடகவியலாளரிடம் தெரிவித்தார். (த)

## அரசின் 2013...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நிதியமைச்சர் என்ற வகையில் நிதி ஒதுக்கீடு தொடர்பான அறிக்கைகளை அமைச்சரவையில் சமர்ப்பித்தார் ஜனாதிபதி.

அடுத்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவினம் 2520 பில்லியன் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சுக்கள் திறைசேரி மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள், பொருளாதார ஆய்வாளர்கள் எனப் பல மட்டத்தினருடனும் ஆலோசனைகளைப் பெற்ற பின்னரே இந்த நிதி ஒதுக்கீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அங்கு கூறினார்.

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு அறிக்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டின் பொருளாதார வளர்ச்சியை 7 வீதத்தால் அதிகரிக்கவும் பணவீக்கத்தை 7 வீதத்தால் மட்டுப்படுத்தவும் கூடியவகையில் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் என அவர் அங்கு கூறினார்.

நிதி ஒதுக்கீட்டு அறிக்கையின் முதலாவது வாசிப்பு ஒக்ரோபர் 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறும் . இரண்டாம் வாசிப்பு நவம்பர் 8 ஆம் திகதி நடைபெறும் என அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல், ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கூறினார். (த-2)

## பல்கலைக்கழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போது நாடு முழுவதும் இடம்பெற்று வரும் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில், நேற்று அதிகாலை 3.30 மணியளவில் துண்டுப் பிரசுரங்கள் சிலவற்றை எடுத்து வருவதற்காகச் சென்ற வேளையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து திட்டமிடப்பட்ட கொலையாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாக சஞ்ஜீவ பண்டார மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இம்புல்கொட பகுதியினூடாகப் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று மின்கம்பமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த இருவரும் உயிரிழந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் கொழும்பு மற்றும் மாத்தளைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் றுகுணு பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்பவர்கள் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாகப் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (த)

## திவிநெகும சட்ட...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கப்படும் திவிநெகும சட்டவரைபைக் கிழக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்த்து வாக்களிக்கும் என கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களை மத்திய அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்வதற்கு திவிநெகும சட்டம் அனுமதிக்கின்றது.

மாகாண சபைகளுக்கு 13 ஆவது திருத்தத்தின் படி வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களைப் பெறுவதற்காக போராடுவோம் என்று கூறும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர்கள் கிழக்கு மாகாண சபையில் திவிநெகும சட்டவரைபை எதிர்த்து வாக்களிப்பார்களா?'' எனவும் சம்பந்தன் கேள்வி எழுப்பினார்.

கிழக்கு மாகாண சபையின் அங்குரார்ப்பண அமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது. (த)

# எள்ளுப்பிட்டி கிராமத்துக்கு இந்திய வீட்டுத் திட்டம்

## மாந்தை கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

*மன்னார், செப். 28*

*மன்னார் எள்ளுப்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் அனைத்துக்கும் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் வீடுகளை வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.*

*இது தொடர்பாக மாந்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் விடுத்துள்ள அறிக்கையில்;*

மன்னார் பிரதேச செயலர் பிரிவிலுள்ள திருக் கேதீஸ்வரம் கிராமஅலுவலர் பிரிவிற்குட்பட்ட எள்ளுப் பிட்டி என்ற எமது கிராம மக்கள் நாட்டில் ஏற்பட்டிருந்த போர்ச் சூழல் காரணமாக 1990 ஆம் ஆண்டு ஆனி மாதத்தில் கிராமத்தை விட்டு முற்றாகஇடம்பெயர்ந்து மடுக் கோயிலிலும் வேறு சில கிராமங்களிலும் தற்காலிகமாக வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் 2010 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி மீளக் குடியமர்த்தப்பட்டனர். அன்றிலிருந்து வாழ்வாதார முன்னேற்பாடுகளில் பெரிய பின்னடைவுகளை எதிர்நோக்கியவர்களாகவே உள்ளனர். நெற்செய்கை, தோட்டச்செய்கைகள் போன்ற நடவடிக்கைகளில் அடியெடுத்து வைக்க முடியாத நிலையிலேயே இவர்கள் இன்னமும் உள்ளனர்.

இவ்வேளையில் இந்திய வீட்டுத்திட்டம் மூலம் இந்தக் கிராமத்திற்கு முன்னுரிமை கொடுப்பதாக மன்னார் பிரதேச செயலகம் உறுதியளித்த போதிலும், மீளக் குடியமர்ந்த 102 குடும்பங்களில் 47 குடும்பங்களுக்கு மாத்திரமே இந்திய வீட்டுத் திட்டத்திற்கென 'ஜனாதிபதி படையணியின்' அனுமதி பெறுவதற்கான சிபார்சுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு அதற்கான அனுமதியும் பெறப்பட்டிருப்பதாக தெரிகின்றது. இவ்வாறான நிலையில் ஏன் ஏனைய குடும்பங்கள் விலக்கப்பட்டன என்பது கூட தெரியாத நிலையே காணப்படுகின்றது.

அதுமட்டுமன்றி அனுமதி பெறப்பட்ட பட்டியலில் ஐந்து குடும்பங்கள் எமது கிராமத்தைச் சேராதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. எமது கிராம அலுவலர் பிரிவில் திருக்கேதீஸ்வரம் கிராமத்தில் குடியிருக்கும் பல குடும்பங்களையும் எள்ளுப்பிட்டி கிராமம் என்ற தலைப்பில் இணைத்து வீட்டுத்திட்டத்தில் நடைமுறைப்படுத்துவது எம் இரு கிராம மக்களிடையே பெரிய கருத்து மோதல்களை ஏற்படுத்தியுள்ளது. அவர்களுக்கென தனியான பட்டியலின் கீழ் எவ்வித உதவிகளையும் செய்வதற்கு நாம் என்றும் எதிர்ப்பானவர்களாக இருக்க மாட்டோம் என்பதையும் கூறிக்கொள்வதோடு, இச்செயற்பாடுகள் யாவும் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறன என்பதும் புரியாத புதிராகவுள்ளது.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 2010ஆம் ஆண்டு 20 வருடங்களின் பின் மீள் குடியமர்த்தப்பட்டாலும், எமது அழிந்து போன வீடுகள், உடமைகள் ஏனைய சொத்துக்களுக்கான இழப்பீடுகள் எவையேனும் இன்று வரையில் அரசாங்கத்தாலோ அல்லது எந்த ஒரு நிறுவனத்தாலோ வழங்கப்படவில்லை என்பதும் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயமாகும். இதே காலப்பகுதியில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்ட பல கிராமங்கள் முழுமையான வீட்டுத்திட்டத்தைப் பெற்றிருக்கின்றன என்பதும் வெளிப்படையான உண்மையாகும்.

ஆகவே இவ்வீட்டுத் திட்டத்தின் மூலம் எமது கிராமத்தில் சகல குடும்பங்களும் வீடுகளைப் பெறுவதற்கு தகுதியானவர்களே என்பதைத் தெரிவிப்பதோடு அனைவரும் இதனால் நன்மை பெற ஆவன செய்ய வேண்டுமெனவும் பணிவுடன் வேண்டுகின்றோம் என்றுள்ளது.

(க- 12)

# கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் வைரவிழாவும் மலர் வெளியீடும்

கிளிநொச்சி, செப். 28

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் வைர விழாவும், அதனைக் குறிக்கும் வகையிலான மலர் வெளியீடும் இன்று 28 ஆம் திகதி காலை 9 மணியளவில் இடம் பெறவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் பிரதானமண்டபத்தில் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளரான மருத்துவர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

பிரதம விருந்தினராக ஓய்வு நிலை மூத்த அதிபர் கா.நாகலிங்கம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், ஓய்வு நிலை கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர்.

கல்லூரியின் பரிசளிப்பு விழா பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி அதிபர் சி.பாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறும்

இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.சத்தியபாலன் ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் கி.சின்னராசா, ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ம.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-405)

# கணித வினாத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா



கோட்டை கட்டியகுளம் அ.த.க. பாடசாலையின் கணிதபாட ஆசிரியர் எஸ். வி. பாலமுரளியின் க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம் பெற்றது.

துணுக்காய் கல்விவலயத்தின் திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி. ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் துணுக்காய் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் திருமதி லூட்ஸ் மாலினி வெனிற்றன் நூலினை வெளியிட்டு வைத்தார். முதல் பிரதியை கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கு.விஜயபாலா பெற்றுக்கொண்டார்.

நூல் தொடர்பான மதிப்பீட்டுரையினை, கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி வொலன்ரைன் அதிசய மலரும், ஏற்புரையினை நூலாசிரியர் எஸ். வி. பால முரளியும் நிகழ்த்தினர்.

மூன்று வருட காலமாக நிரந்தர கணித ஆசிரியர் இல்லாதிருந்த அதிகஷ்டப் பிரதேச பாடசாலையான கோட்டைகட்டிய குளம் அ.த.க. பாடசாலைக்கு கணித பாட ஆசிரியர் நியமிக்கப்பட்டமையும், அவரின் நூல் வெளியீட்டு விழாவை கல்வி வலயமே பொறுப்பேற்று நடத்தியமையும் பாராட்டத்தக்க அம்சங்களாகுமென இங்குள்ள கல்வியாளர்கள் பாராட்டியுள்ளனர். (க-18)

### வறண்ட நிலங்கள் குளிர்ந்தன

அக்கராயன், செப். 28

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் நேற்று பரவலாக மழைபெய்ததால் வறட்சியால் ஏற்பட்ட மக்களின் துன்பம் ஓரளவு குறைந்துள்ளதாகத் துணுக்காய் பிரதேச செயலர் வி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

கடும் வறட்சியால் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 20 கிராமங்களும் பாதிக்கப்பட்டிருந்தன. குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு நீர்த்தாங்கிகள் மூலமாக நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ஒரே தடவையில் 7 குளங்கள் புனரமைப்புக்காக திறந்து விடப்பட்டமையும் கூடுதல் வறட்சியை உருவாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது மழைபெய்யத் தொடங்கியிருப்பதனால் மக்கள் அதிக மகிழ்ச்சி அடைந்திருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (க-18)

## வறட்சிக்கு முடிவு வருமா?



*நேற்றைய தினம் மழை பெய்த போதிலும் இரணைமடுக் குளத்துக்கு நீரை வழங்கும் முக்கிய ஆறான கனகராயன் ஆறு தொடர்ந்தும் நீரின்றி வறண்டு காணப்படுகின்றது. (க-18)*

# இந்திய வீடமைப்புத் திட்ட பயனாளிகள் தெரிவில் குளறுபடி

### பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிப்பு

நெடுங்கேணிப் பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் குளறுபடிகள் ஏற்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக போர்க் காலத்தில் இங்கு தங்கியிருந்த குடும்பங்கள் அரச அலுவலர்களால் புறமொதுக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் போர்க் காலத்தில் வெளியிடங்களில் வசித்தவர்கள் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இங்குள்ள அதிகாரிகளிடம் மக்கள் கேட்டபோது பயனாளிகள் பட்டியல் தெரிவு செய்யப்பட்ட விதம் தமக்கு தெரியாது என்ற பதிலே கிடைத்ததாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அதிருப்தி அடைந்த பாதிக்கப்பட்டவர்கள் இது தொடர்பாக முறையிடுவதற்கு வவுனியா மாவட்டச் செயலகத்திற்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான உண்மை நிலையை அறியும் பொருட்டு நெடுங்கேணி பிரதேச செயலருடன் தொடர்புகளை மேற்கொள்ள எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-435)

### புதிய நிர்வாகிகள் தெரிவு

அக்கராயன்,செப்.28

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக சி.வரதராசனும், உபதலைவராக க.பரமலிங்கமும், செயலாளராக த. சிறிபிரகாசும், உப செயலாளராக த. சபாரத்தினமும், பொருளாளராக க.குலேந்திரராசாவும், தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நிர்வாக உறுப்பினர்களாக சிவநாதபிள்ளை, க.விவேக், ம.கனகாம்பிகை, கி.கிருஸ்ணநேசன், ம.தவராசன், க.திவ்வியகுமார், க.வைத்தியலிங்கம், ம.செல்வராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-18)

# சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி வவுனியாவில் விழிப்புணர்வு நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.28

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சிறுவர் உரிமை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்புப் பெறல் தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் வவுனியா மாவட்டம் பூராவும் ஒக்ரோபர் மாதத்தில் பல்வேறு இடங்களிலும் நடத்தப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி த.செல்வக்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒக்ரோபர் முதலாம் திகதியான எதிர்வரும் திங்கட்கிழமை சர்வதேச சிறுவர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனையொட்டியதாகச் சிறுவர் தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஒக்டோபர் மாதம் முழுவதும் வவுனியா மாவட்டத்தின் பல இடங்களிலும் நடைபெறவுள்ளன.

வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, வவுனியா மாவட்ட அரச சார்பற்ற நிறுவன ஒன்றியம் என்பன இணைந்து இந்த விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளன.

வவுனியா மாவட்டத்தின் பல கிராமங்களிலும் பொதுநோக்கு மண்டபம், மக்கள் கூடும் இடம் போன்றவற்றில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. முதற்கட்டமாக எதிர்வரும் திங்கட்கிழமை வவுனியா பொது வைத்தியசாலையில் விழிப்புணர்வு நிகழ்வு ஆரம்பமாகவுள்ளது.

சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள் அவற்றிலிருந்து அவர்களைக் காத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்து நிறுத்துதல் தொடர்பான விழிப்புணர்வுகள் இவ்வாறு நடத்தப்படவுள்ளன. வீடியோக் காட்சிகள் மூலமாகவும், ஒலிநாடா, சுவரொட்டிகள் என்பன மூலமாகவும் இந்த விழிப்புணர்வுகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா விஞ்ஞாபனம் - 28.09.2012



சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலின் இவ்வாண்டுக்கான மஹோற்சவ வரிசையில் இன்று 28.09.2012 வெள்ளிக்கிழமை எல்லாம் வல்ல கருணாகரப்பிள்ளையாரின் தேர்த்திருவிழா வெகு சிறப்பாக இடம் பெறவுள்ளது.

**இன்று காலை 8.00 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப்பூசையை அடுத்து எம்பெருமான் சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா வந்து அடியார்களுக்கு நல்லருள் பாலிக்கவுள்ளார்.**

**இன்றைய தேர் உற்சவத்தில் ஈழத்தின் புகழ் பூத்த பல தவில் நாதஸ்வரக்கோஷ்டியினர் கலந்து கொண்டு எம்பெருமானுக்கு இசை ஆராதனை செய்வார்கள்.**

**கருணாகரப் பெருமானின் அடியவர்கள் தேர் உற்சவத்தில் கலந்து கொண்டு எம்பெருமானின் திருவருட்கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.**

**தேர்த்திருவிழா உபயகாரர்கள்**

(சி/3677) (சி/3677) (15-14)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## 2012 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவச் செல்வங்களாகிய



**தேவகுமார் டெறின்**
**164 புள்ளிகள்**



**ஜெயக்குமார் நிதுஷன்**
**162 புள்ளிகள்**



**இராஜசேகரக்குருக்கள் மயூரன்**
**148 புள்ளிகள்**

ஆகிய மூவரையும் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

**01. த.சந்துஜன் - 142**
**02. க. ரமேஸ் - 138**
**03. சி.யதுபிகா - 123**
**04. சி. குமரன் - 104**
**05. த.கிருசாந்தினி - 102**

ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களான திருமதி ஜெயந்திமாலா தனரஞ்சன், திரு. விஜயராஜா இளையராஜா ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/கெருடாவில் இ.த.க. பாடசாலை**

(25614)(9.14)

# சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

## திரு. கதிர்காமத்தம்பி ஆனந்தராஜா

*(முகாமையாளர், இலங்கை வங்கி நெல்லியடி)*



**இலங்கை வங்கியின் ஏற்றமிகு உயர்வுக்காக**
**பாங்குடனே முப்பத்துநான்கு வருடங்கள்**
**மாபெரும் பணி செய்தவரே !**
**இடர் மிகுந்த காலங்களில்**
**இன்னலுற்ற வன்னி மக்களுக்காக**
**அளப்பெரும் சேவை செய்த நாயகனே!**
**அகவை ஐம்பத்தொன்பதை அடையும் நன்நாளில்**
**நாம் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.**

வங்கிச் சேவைக்காக தன்னையே அர்ப்பணித்த எமது முகாமையாளர் திரு. கதிர்காமத்தம்பி ஆனந்தராஜா அவர்கள் இன்றுடன் (28.09.2012) ஓய்வுபெறுவதையிட்டு அவரது ஓய்வூதியக்காலம் சிறப்புடன் அமைய இறையருள் வேண்டி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்..
**முகாமையாளர்களும்**
**ஊழியர்களும்,**
**இலங்கை வங்கி,**
**நெல்லியடி**
**பருத்தித்துறை**
**வல்வெட்டித்துறை**
**கரணவாய்**
**மந்திகை**
**மருதங்கேணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காலம் பதில் சொல்லும் வரை காத்திருப்பது பொருந்தாதே!

*இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, தனக்கு வழங்கிய ஆணையை மீறிச் செயற்பட்டுள்ளதாக அரச அமைச்சர்கள் பலர் கருத்து வெளியிட்டு வருகிறார்கள். அதனால் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையின் ஒரு சில பகுதிகளை மட்டுமே நடைமுறைப் படுத்த நம்பத்தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

*நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள், மிகக் கனதியாக இராணுவ மயமாக்கப்பட்டுள்ளன.

*போர் முடிவுற்று மூன்று வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், வடக்கிற்குள் நுழைவதற்கு முன்னர் இராணுவத்தின் மிகப் பெரிய சோதனை நிலையத்தைத் தாண்ட வேண்டியுள்ளது. அதனை அடுத்து வடமாநிலம் முழுவதிலும் சோதனை நிலையங்கள் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றன.

*மற்றொரு வேடிக்கை என்னவெனில், இவ்வருடம் ஜூலை மாதத்தில் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட ''நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய செயற்றிட்டம்'' ஆணைக்குழுவின் குறிப்பிட்ட சில சிபார்சுகளை கவனத்தில் கொள்வதற்கென புதிது புதிதாகக் குழுக்களை நியமிக்க வகை செய்துள்ளது.

*கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இலகுவில் நிறைவேற்றத்தக்க சிபார்சுகளை நடைமுறைப் படுத்த வகை செய்யப்படவில்லை. நிறைவேற்றுவதற்கு காலவரையறை தானும் விதிக்கப்படவும் இல்லை.

*அமெரிக்க அரசு தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுக்க வில்லையெனில், இலங்கை அரசின் தாமதப்படுத்தும் கலை - போக்கு - தொடரவே செய்யும் என்று நாம் அஞ்சுகிறோம்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்ரனுக்கு, அந்நாட்டின் 32 செனெற்சபை உறுப்பினர்கள் அனுப்பிய அறிக்கையில், மகஜரில் இலங்கை அரசாங்கத்தின் போட்டுக்கோட்டை மேற்கண்ட வகையில் போட்டு உடைத்துள்ளார்கள்.

இதேவேளை, இலங்கை நிலைமைகளைக் கண்டறிவதற்காக இங்கு வந்து திரும்பிய கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் அங்கம் வகித்த கிரிஸ் அலெக்ஸ்சாண்டர் வெளிப்படுத்தி உள்ள கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

▪இலங்கையில் மிகக் குறிப்பாக நாட்டின் வடக்கு,கிழக்கில் இராணுவப் பிரசன்னம் நிறைந்து காணப்படுகிறது. அதனை எம்மால் அவதானிக்க முடிந்தது.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள ஒரு நாட்டில் அத்தகைய இராணுவப் பிரசன்னத்தை நியாயப்படுத்த முடியாது.

▪இந்த நிலைமையில் அந்நாட்டு அரசு மாற்றத்தை ஏற்படுத்தாவிடின், அது கடுமையான எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

▪இலங்கையில் மனித உரிமைகள் பெரியளவில் மதிக்கப்படுவதில்லை. அத்தகைய ஒரு நாட்டில் சமாதானம் சாத்தியப்படாது.

▪நீதியற்ற சமாதானம் ஒருபோதும் நீண்ட கால அமைதியைக் கொண்டுவராது. உலக நாடுகள் பலவற்றினதும் அனுபவப்பாடம் இது.

மேற்சொன்ன கருத்துக்கள், நிலைப்பாடுகளுக்குப் புறம்பாக --

▪இங்கு பொலிஸ் மற்றும் உள்ளூர் சிவில் சட்டமைப்புகள் பலவீனமுற்றுள்ளன.-

▪வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் வேண்டாத தாமதம் காட்டப்படுகிறது.

▪மனித உரிமை மீறல்கள் குறித்துத் தொடர்ந்தும் குற்றச்சாட்டுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

▪ பொது மக்கள் காணாமற் போகும் சம்பவங்களும் தொடர்கின்றன.

▪அதிகாரத் தரப்புகளால் பொதுமக்கள் துன்புறுத்தல்களை எதிர்நோக்க நேரிடுகிறது.

▪நீண்ட காலப் போரின் போது பல்லாயிரக் கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழந்தனர். இறுதிப் போரின் போது கொல்லப்பட்ட தமிழர்களின் குடும்பங்கள், காணாமற்போனோர், காயமுற்றோர் குறித்த விவரங்களைக் கண்டறிவதற்கு அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை - என்றும் தமது அவதானிப்புகளை வெளிப்படுத்தி உள்ளார் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் கிறிஸ் அலெக்சாண்டர்.

அமெரிக்கா என்ன, கனடா என்ன, எந்த நாடும் எதனையும் சொல்லட்டும். எங்களுக்குப் புத்திமதி கூறுவதற்கு, இதனைச் செய்யவேண்டும், அதனைச் செய்யக் கூடாது, மாற்றங்களை உண்டாக்க வேண்டும் என்று சொல்வதற்கு இவர்கள் யார் என்ற அகங்காரப் போக்கிலேயே இலங்கை அரசு தொடர்ந்து நடைபோடுகிறது.

சுயாதிபத்தியமும் இறைமையும் உள்ள எங்களுக்கு, எமது நாட்டு விவகாரங்களை எவ்வாறு, எப்படி, என்னென்ன வகையில், வழியில் கையாளவேண்டும் என்பது தெரியும்.

அனைத்துலகத்துக்கே வழிகாட்டக் கூடிய அரசியல் ஞானமும் அறிவும் எம்மிடம் உண்டு. எங்களைக் கேணையர்கள் என்று நினைத்து அச்சுறுத்தவும், எமது விவகாரங்களில் பாத்தியதை எதுவும் இன்றித் தலையிடவும் எவரும், எந்த நாடும் முனையலாகாது என்று எச்சரிக்கும் தொனிகளில் அரச பிரதானிகள் ஆளுக்காள் சண்டப்பிரசண்டம் நடத்தி வருகிறார்கள்.

ஒட்டுமொத்தத்தில், இலங்கை அரசினதும் அதன் பிரதானிகளினதும் செயற்பாடுகளும் அவை சார்ந்த நடவடிக்கைகளும், இனி வரும் காலத்தில் இவ்விவகாரம் அனைத்துலக சமூகத்தின் பங்களிப்புடனான விசேடத் தன்மை கொண்டிலங்குமா என்ற சந்தேகத்தை உண்டாக்குவதாகவே உள்ளது.

இலங்கையில் இரண்டு தரப்புக்களாலும் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள், மற்றும் மனிதாபிமானத்துக்கு (Humanity) எதிரான குற்றங்கள் தொடர்பில் சுயேச்சையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதில் அமெரிக்க அரச தரப்பு கண்டும் காணாதது போல் (Oversight) இருந்தால், இலங்கைத் தரப்பு தனக்குரிய கடமையை, பணியை நிறைவேற்றுவதில் அது ஏற்படுத்தும், உண்டாக்கும் பின்னடைவுகள் தாமதங்களை நியாயப்படுத்த இடமளித்தாகிவிடும் என்ற கருத்து, அச்சம் இப்போது அனைத்துலக மட்டத்தில் மிகுந்து நிலவுகிறது.

எதுவாயினும் இலங்கை அரச பிரதானிகள் மற்றும் அதிகாரிகளின் போக்கையும், பின்னடிப்புகளையும் அனைத்துலகம் அச்சொட்டாகக் கண்டறிந்து வைத்துள்ளது என்பது புலனாகிறது.

எதற்கும், மனித உரிமைகள், மனிதாபிமான உரிமைகள் குறித்து இலங்கை அரசு எந்த வேளையில், எந்தக் கோணத்தில் அசையும் என்பதனை எவராலும் அறிந்து கொள்ளவோ அனுமானிக்கவோ இயலாது. அதன்பொருட்டு, காலந்தான் பதில்சொல்லும் என்று அனைத்துலகம் காத்திருக்கவும் முடியாதே.

# அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இயங்கும் முல்லைத்தீவு பாடசாலைகள்

### கூரை இல்லாத கட்டடங்களில் இனி எவ்வாறு கல்வியைத் தொடருவது?

யாழ்ப்பாணம்,செப்.28

அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத நிலையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் மாணவர்கள் மழை ஆரம்பித்துள்ள நிலையில் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

எனவே அடிப்படை வசதிகளை யாவது செய்து கொடுக்க வடமாகாண ஆளுநர், கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், பொக்கணை, கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு பகுதிகளிலுள்ள பாடசாலைகள் எதுவித அடிப்படை வசதிகளும் இல்லாது உள்ளன.

இந்த நிலையில் அண்மையில் நடந்த கலந்துரையாடலில் அந்தப் பகுதி பாடசாலைகளைச் சீரமைத்து விரைவில் இயக்க வைக்க வேண்டும் என்று மேலதிகாரிகளால் வடமாகாண ஆளுநர் மற்றும் கல்வி அதிகாரிகளுக்குக் கூறப் பட்டது.

ஆனால் எதுவித திருத்தங்கள், சீரமைப்பு எதுவும் இல்லாது அநேகமான பாடசாலைகள் ஆரம்பிக்க பட்டுவிட்டன. இன்னும் சில பாடசாலைகள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதனால் அங்கு மாணவர்கள் நிம்மதியாக கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகிறது. அவர்களுக்கு உரிய தளபாட வசதிகள் போதுமானதாகச் செய்து கொடுக்கப்படவில்லை. கூரை இல்லாத கட்டடங்களில் மழை காலமான தற்போது மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலை மாணவர்களை தமது கல்விச் செயற்பாடுகளைச் சீராக முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளது. இது அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பலவகையில் நெருக்கடிகளையும், கடமையைச் செய்ய முடியாத நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. மாணவர்களது நலன் எதனையும் கவனத்தில் கொள்ளாது உடனடியாகப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவே தவிர அடிப்படை வசதிகள் செய்யப்படவில்லை.

எனவே அவற்றை விரைந்து செய்து மாணவர்கள் இடையூறு இன்றிக் கல்வி கற்பதற்கான நிலையை ஏற்படுத்த வேண்டும்- என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

(ம-4)

## ஓய்வுபெறும் பணியாளர்களின் கொடுப்பனவை உரியவாறு வழங்குக

### கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.28

கூட்டுறவுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் பணியாளர்களின் கொடுப்பனவுகள் யாவும் உரிய முறைப்படி வழங்க வேண்டும் என்று கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆணைக் குழுவினால் சுற்றறிக்கை ஒன்று சகல கூட்டுறவு நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு துறையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் பணியாளர்களின் சேவையைக் கௌரவிக்கும் வகையிலும், அவர்கள் மனநிறைவுடன் பணியில் இருந்து விலகிச் செல்வதையும் சங்கங்கள் உறுதிப்படுத்த வேண்டும் என அந்தச் சுற்றறிக்கையில் கோரப் பட்டுள்ளது.

அத்துடன் அவர்களுக்கான சகல கொடுப்பனவுகளும் உரிய நேரத்துக்குள் வழங்கப்பட வேண்டும் எனவும், காலம் தாழ்த்துவதை நிறுத்த வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு காலம் தாழ்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டால் அதற்குரிய வட்டியுடன் அவற்றை வழங்க வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(த-17)

## சேவை மூப்பு அடிப்படையில் 108 அதிபர்களுக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம்,செப்.28

சேவை மூப்பு அடிப்படையில் நாடளாவிய ரீதியில் 108 அதிபர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டு கல்வி நிர்வாக சேவை தரம் iii இற்கு நியமிக்கப்படவுள்ளனர். வடக்கில் இவ்வாறு 29 பேருக்கு பதவியுயர்வு வழங்கப்படவுள்ளது என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடளாவிய ரீதியில் அதிபர் தரம் ஒன்றைச் சேர்ந்த பலர் உள்ளனர். அவர்களில் சேவை மூப்பு அடிப்படையில் 108 அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டு கல்வி நிர்வாக சேவை தரம் iii பதவி உயர்வுடன் நியமனம் வழங்கப்படவுள்ளது. வடமாகாணத்தில் இவ்வாறு 29 அதிபர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனங்கள் அலரிமாளிகையில் ஜனாதிபதியால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளன. வடமாகாணத்தில் அவர்களுக்கான பிரிவுகளை மாகாண கல்வி அமைச்சு தீர்மானிக்கும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.(ம-4)

## 12 ஆயிரம் படையினர் சட்டபூர்வமாக நீக்கம்

கொழும்பு,செப்.28

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ள மற்றும் சரணடைந்துள்ள 41 ஆயிரம் சிப்பாய்களுள் 12 ஆயிரம் பேர் சட்டபூர்வமாக இராணுவ சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத்தின் ஊடகப்பேச்சாளரான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

எஞ்சியிருக்கும் 29 ஆயிரம் பேரையும் சட்டபூர்வமாக இராணுவ சேவையிலிருந்து நீக்கிவிடுவது தொடர்பாகத் தற்போது ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடியுள்ள சிப்பாய்களின் மொத்த எண்ணிக்கை 57 ஆயிரத்து 538 ஆகும். இவர்களுள் 20 ஆயிரம் பேர் வரையில் இன்னமும் சுதந்திரமாக உலாவிவருவதோடு இவர்களுள் சிலர் பாரதூரமான குற்றச் செயல்களிலும் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அந்தந்த தரப்பினரையும் கைது செய்வது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டது. (ம-22)

## கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் 42 பேருக்கு நியமனங்கள்

யாழ்ப்பாணம்,செப்.28

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில பாடங்களுக்கு 220 ஆசிரியர்கள் தேவையாக உள்ள போதும், 42 ஆசிரியர்களே நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனங்கள் அலரி மாளிகையில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியால் வழங்கப்படவுள்ளன என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இங்குள்ள அநேகமான பாடசாலைகளிலும் இத்தகைய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது.

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு மாத்திரம் 220 ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

கணித, விஞ்ஞான பாடங்களுக்கு 120 ஆசிரியர்களுக்கும், ஆங்கில பாடத்துக்கு 100 ஆசிரியர்களுக்கும் தேவை ஏற்பட்டுள்ளது.

ஆனால் கணித, விஞ்ஞான பாடங்களுக்கு 37 ஆசிரியர்களும் ஆங்கில பாடத்துக்கு 4 ஆசிரியர்களுமே நியமனம் செய்யப்படவுள்ளனர். ஏனைய ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான நியமனங்கள் அலரிமாளிகையில் ஜனாதிபதியால் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, விஞ்ஞான பட்டதாரி மாணவர்கள் உட்பட ஆசிரியர்கள் கற்பிப்பதற்கு முன்வருவது குறைவாகவே காணப்படுகிறது. தெரிவுப் பரீட்சையில் சித்தியடையாமை ஒரு காரணமாகத் தெரிவிக்கப்படுகிறது.

தவிர தகுதியில்லாது இருப்பதும், இதில் ஆர்வம் இன்றி இருக்கின்றமையும் ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதற்குக் காரணங்கள் என்று அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

(ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 543 ஆவது படைப்பிரிவின் கௌரவிப்பு நிகழ்வு



மன்னார், செப். 28

தேசிய மட்டத்தில் 19வயதுப் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியின் போது முதலாம் இடத்தைப் பெற்ற மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் போது விருந்தினர்களாக இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவு அதிகாரி ராமநாயக்க, இராணுவத்தின் 43 ஆவது படைப்பிரிவு அதிகாரி மைத்திரி டயேஸ், மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எம். சியான், பாடசாலையின் முதல்வர் அருட்சகோதரர் ஒகஸ்ரின் உட்பட குறித்த மாணவர்களது பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது குறித்த மாணவர்களும், பயிற்சி ஆசிரியரும் கௌரவிக்கப்பட்டனர். பின்னர் இராணுவத்தின் 543 ஆவது படைப்பிரிவு ஏற்பாடு செய்திருந்த மதிய போசன விருந்துபசாரமும் இடம்பெற்றது. (எ-12)

# அதிகாரிகளின் தப்பிக்கும் தந்திரத்தில் சிக்கிக் கொண்ட கல்விப் பணிப்பாளர்

## சாடுகிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

கிளிநொச்சி, செப். 28

நடைபெறாத ஒன்றை ஜனாதிபதிக்குக் காட்ட முயன்ற உயர் அதிகாரிகளின் தப்பித்துக் கொள்ளும் தந்திரத்திற்கு கடமையுணர்வு மிக்க முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் பழிவாங்கப் பட்டமையை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

**நடைபெறாத ஒன்றை ஜனாதிபதிக்கு காட்ட முனைந்த உயர் அதிகாரிகளின் தப்பித்து கொள்ளும் தந்திரத்திற்குக் கடமையுணர்வு மிக்க முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் பழி வாங்கப்பட்டமையை வன்மையாக கண்டிக்கின்றோம்.**

இது தொடர்பில் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

போரினால் பாதிக்கப் பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியமர்வும், பாடசாலைகளை மீளத் தொடங்குதலும் சம காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்தச் சூழ்நிலையில் முல்லைத் தீவில் கடமையாற்றிய கல்விப்பணிப்பாளர் சுகயீனம் காரணமாக அங்கு கடமையாற்ற முடியவில்லை.

இந்த கல்வி வலயத்தில் நிலையில் முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட கோ.வரதராஜமூர்த்தி அர்ப்பணிப்போடு அங்கேயே தங்கியிருந்து சிறப்பாகக் கடமையாற்றினார். பல பாடசாலைகள் மீளவும் திறக்கப்பட வேண்டுமென்ற உயரிய சிந்தனையோடு செயற்பட்டார். அப்படியான ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதானது வேதனையான விடயம்.

நடைபெறாத ஒன்றை ஜனாதிபதிக்குக் காட்ட முனைந்த உயர் அதிகாரிகளின் தப்பித்துக் கொள்ளும் தந்திரத்திற்குக் கடமையுணர்வு மிக்க கல்விப் பணிப்பாளர் பழிவாங்கப் பட்டமையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இந்த விடயம் தொடர்பிலான முழு ஆதாரங்களுடனும் உண்மையை ஜனாதிபதிக்கு நாம் வெளிப்படுத்த முன்னார் கல்விப்பணிப்பாளர் வரதராஜ மூர்த்தியே முன்னைய இடத்துக்கு - அதே பதவிக்கு மீளவும் நியமிக்க வேண்டும்.

இதனைவிட உண்மை நிலையை வடமாகாண ஆளுநரும் தெரிந்து கொள்ள வேண்டும். இதன் சூத்திரதாரிகளை சரியாக இனங் கண்டு அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-5)

## பூப்புனித நீராட்டு விழாவின் போது விஷப்பாம்பு தீண்டியது தாயை

### மக்களுக்கு தண்ணீர் வார்த்த வேளையில்

தென்மராட்சி, செப்.28

மகளின் பூப்புனித நீராட்டு விழாவின் போது கல்லொன்றின் மீது ஏறி நின்று நீர் ஊற்றிய தாய் விஷப்பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் பூநகரி தம்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இதே இடத்தைச் சேர்ந்த 43 வயதான குடும்பப் பெண்ணொருவரே பாம்பினால் கடியுண்டுள்ளார்.

தண்ணீரை வளர்ப்பதற்கென உயரமான இடத்தில் வைக்கப்பட்டிருந்த கல்மீது ஏறி நின்று இவர் நீரை வார்த்த போது கல்லுக்கு அடியிலிருந்த பாம்பு இவரைக் கடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் உடனடியாகப் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அவசர சிகிச்சைக் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மகளின் பூப்புனித நீராட்டு விழாவின் போது தாய்க்குப் பாம்பு கடித்தமையானது குடும்பத்தவர்களிடையே பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது. (க- 9)

## இந்திய வீடமைப்புத் திட்டம்; அங்குரார்ப்பண நிகழ்வு

கிளிநொச்சி, செப். 28

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் வீடமைக்கும் திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் அடுத்த மாதம் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மலையாளபுரத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றிருக்கும் இந்த நிகழ்வில் அமைச்சர்கள், உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொள்வரென எதிர் பார்க்கப்படுகின்றது.

பயனாளிகளிடம் 5 லட்சம் ரூபா நிதியைக் கட்டம் கட்டமாக வழங்கி வீடமைக்கும் புதிய திட்டத்தின் ஆரம்ப நிகழ்வே இதுவாகும்.

நீண்டகாலத் தாமதத்தின் பின்னர் இந்திய வீடமைப்புத் திட்டம் புதியமுறையில் இப்போது புதியமுறையில் துரிதமாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## கரைதுறைப்பற்று பிரதேச செயலக புதிய கட்டடம் திறந்து வைப்பு

நெடுங்கேணி, செப். 28

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் கடந்த 24 ஆம் திகதி ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் சுமார் 3 கோடி 64 லட்சம் ரூபா செலவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி முல்லைத்தீவுக்கு வருகை தந்த ஜனாதிபதி அன்றைய தினம் பிற்பகல் 4 மணியளவில் இந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான றிசாட் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ஷ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் எனபலரும் நிகழ்வில் பங்கு பற்றினர். (க-435)

## கடன்களை அறவிடுவதில் கடுமையான போக்கு

### விவசாயிகள் பாடு திண்டாட்டம்

கிளிநொச்சி, செப். 28

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளால் பெறப்பட்ட வங்கிக் கடன்களை அறவிடுவதை வங்கிகள் ஒத்திவைத்துள்ள போதிலும் சில நிறுவனங்கள் தம்மால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை அறவிடுவதில் கடுமையாக நடந்து கொள்வதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் உத்தரவின் பிரகாரம் தற்போது நிலவி வரும் கடும் வறட்சியினால் பயிர் நட்டத்தை எதிர் கொண்ட விவசாயிகளிடமிருந்து அவர்கள் பெற்றுக் கொண்ட கடன்களை அறவிடுவதை வங்கிகள் ஒத்திவைத்துள்ளன.

ஆனால் சில நிறுவனங்களால் அபிவிருத்தி என்ற பெயரில் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுவதில் அந்த நிறுவனங்கள் கடுமையாக நடந்து கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடன்களை வழங்கிய நிறுவனங்களின் பணியாளர்கள் கடன்களைப் பெற்றவர்களை அணுகி அவர்கள் பெற்ற கடன்களை உடனடியாகச் செலுத்த வேண்டுமென வற்புறுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு கடன்களைச் செலுத்தாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அவர்கள் கூறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி வறட்சியினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாகும். இங்குள்ள விவசாயிகள் பெரும் பயிரழிவுகளையும், நட்டத்தையும் எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் பெற்றுக் கொண்ட கடன்களைச் சில நிறுவனங்கள் வசூலிப்பதில் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கின்றமை மக்களிடையே பெரும் விசனத்தையும், கவலையையும் ஏற்படுதியுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது. (க-435)

## 14 மாணவர்கள் சித்தி

நடைபெற்றுமுடிந்த தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் துணுக்காய்க் கல்வி வலயத்தில் 648 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி அதில் 14 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

இதில் துணுக்காய்க் கல்வி வலயத்திற்கு உட்பட்ட மாந்தை கிழக்குக்கல்விக் கோட்டத்தில் 03 மாணவர்களும், ஒட்டுசுட்டான் கல்விக்கோட்டத்தில் 03மாணவர்களும், துணுக்காய் கல்விக் கோட்டத்தில்08 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

பாலிநகர் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி நர்மதா 180 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## முல்லைத்தீவில் முதலிடம்



*தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 183 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்ற செம்மலை மகாவித்தியாலய மாணவி செல்வி ஜெயராசா மிருஷுசா.* (க-410)



கிளிநொச்சி மாகாவித்தியாலயத்திலிருந்த 2012 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி மாவட்ட ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்ற தேவராசா சபேசன் மற்றும் சித்தியடைந்த ஏனைய மாணவர்கள் பாடசாலை அதிபர், பிரதி [illegible] ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்குப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணி

## 'ஹலோ ட்ரஸ்ட்' நிறவனமே மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம்,செப்.28
வலி.கிழக்கின் வளலாய் மற்றும் இடைக்காடுப் பகுதிகளில் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனமே மிதிவெடி அகற்றல் பணிகளை இயந்திரம் மூலமாக மேற்கொள்கின்றது.

அத்துடன் இந்தப் பணிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் முடிவடையக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன என்று யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.

வளலாய் மற்றும் இடைக்காடுப் பகுதிகளில் கடந்த நவம்பர் மாதம் மக்கள் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்டனர். பின்னர் அந்தப் பகுதிகளில் மிதிவெடி அகற்றப்படாமை காரணமாக மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதன் பின்னர் டனிஷ் கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் குறித்த பகுதிகளில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்களும் கடந்த ஜூன் மாதத்துடன் நிதிப் பற்றாக்குறை காரணமாக யாழ்.மாவட்டத்தில் தமது செயற்பாடுகளை நிறுத்தி வெளியேறியிருந்தனர்.

தொடர்ந்து 'மக்' நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வருவதாக தெரிவிக்கப்பட்டது. அந்த நிறுவனமே வளலாய் மற்றும் இடைக்காடுப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆய்வுகளைச் செய்தது. ஆனால் குறித்த நிறுவனம் பின்னர் தமது எல்லைப் பரப்புக்கு அப்பாற்பட்டதென்று தெரிவித்து ஒதுங்கிக் கொண்டது.

இந்த நிலையில் குறித்த வளலாய் மற்றும் இடைக் காட்டுப் பகுதிகளை கண்ணிவெடி அகற்றும் பொறுப்பு 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு பணிகள் கடந்த வாரமளவில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டு கண்ணிவெடி அகற்றும் இயந்திரங்களின் உதவியுடன் குறித்த பணிகளை 'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனம் முன்னெடுத்து வருகிறது என்றும், மழையால் பாதிப்புகள் ஏற்படாதவிடத்து இந்த வருட இறுதிக்குள் கண்ணிவெடி அகற்றல் முழுமையடையும் என்றும் முருகதாஸ் தெரிவித்தார். (ம-5)

## கிணற்றில் தவறி வீழ்ந்தவர் மரணம்

யாழ்ப்பாணம்,செப்.28
அதிகாலை நேரம் கிணற்றினுள் தவறிவிழுந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கீரிமலை வீதி, சித்தன்கேணியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கதிரவேலு ராசேந்தர் (வயது-54) என்பவரே உயிரிழந்தவராவார்.

வீட்டு முற்றத்தின் ஓரமாக வளவின் வாசலை அண்மித்து கிணறு உள்ளது. அதிகாலை 4.45 அளவில் பஸ்ஸை வெளியே கொண்டு செல்ல முற்பட்டு வாயில் கேற்றைத் திறந்த போது தவறி கிணற்றில் விழுந்துள்ளார் என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. கிணற்றில் தண்ணீர் குறைவாக உள்ளது. விழுந்து தலை அடிபட்டுள்ளது. கிணற்றிலிருந்து தூக்கி யாழ்.போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு கிகிச்சை மேற்கொண்ட போதும் அது பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-4)

## முதியோருக்கு ஆயிரம் ரூபா முதலாம் திகதி கிடைக்கும்

தென்மராட்சி,செப்.28
தென்மராட்சி பிரதேசத்தில் ஆயிரம் ரூபா மாதாந்த உதவித் தொகை பெறத் தகுதி பெற்ற 70 வயதுக்கு மேற்பட்டோருக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 401 பேருக்குமான கொடுப்பனவு பாஸ் புத்தகங்கள் அந்தந்த கிராம அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பாஸ்புத்தகங்களைப் பெற்று எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் அஞ்சல் அலுவலகங்களில் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாமெனஅறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## இரவு வேளைகளில் பனைமரங்கள் திருட்டு

அச்சுவேலி, செப். 28
அச்சுவேலி கிழக்குப் பகுதியில் உள்ள நாச்சிமார் கோயில் மற்றும் ஆட்டுப்பட்டி பகுதியில் உள்ள பனைமரங்கள் இரவுவேளையில் திட்மிட்ட முறையில் களவாக தறித்து வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

வடமராட்சி பகுதியில் இருந்து வரும் திருட்டுக் குழு இந்தச் செயலில் ஈடுபடுகின்றது என உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவுவேளையில் வாகனங்களுடன் வரும் குழுவினர் இரவோடு இரவாக பனைமரங்களைத் தறித்து ஏற்றிச் சென்று விடுகின்றனர். இதனை அவதானித்த பனைமரச் சொந்தக்காரர்கள் காவல் இருந்த போதிலும் திருடர்குழு அவர்களையும் எச்சரிக்கை செய்வதாகவும் கூறுகின்றனர்.

பனைமரங்களைத் தறிப்பதற்கு சட்டபூர்வமாக பல நிபந்தனைகளை பூர்த்தி செய்து அனுமதி பெற வேண்டியிருந்த போதிலும் பெறுமதி மிக்க பனைமரங்களை இரவு வேளையில் சட்டவிரோதமாக தறித்து எடுத்துச் சென்றுவிற்பனை செய்யப்படுவதாக கூறப்பட்டது.

மக்கள் குடியிருப்பு இல்லாத பெருவெளியில் அமைந்துள்ள நாச்சிமார் கோயில் மற்றும் ஆட்டுப்பட்டி பகுதியில் திருட்டுத்தனமாக பனைமரங்களை தறிக்கும் கும்பல் வடமராட்சியிலிருந்து கப்பூது அந்தணன் திடல் பாதை வழியாக வந்து அதே பாதை வழியாகத் திரும்பிச் சென்று விடுகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (ம-11)



மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு நேற்று வித்தியாலய அரங்கில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் வே.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முகாமைத்துவப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கமும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கமும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். (ம-9)

## விஷகடிக்கு ஆளாவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.28
யாழ்.குடா மற்றும் இதர பகுதிகளில் விஷகடிக்கு ஆளாகி சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிக மாக உள்ளது.

பாம்பு, புலிமுகச் சிலந்தி, தேள் மற்றும் விஷ ஜந்துக்களின் கடிக்கு கடந்த காலங்களை விட தற்போது அதிகமானோர் ஆளாகி வருகின்றனர். (ம-50)



நேற்று அதிகாலை பெய்த மழையினால் பலாலி வீதியில் புனரமைப்புக்காக வெட்டப்பட்ட பகுதிகள் சேறும் சகதியுமாகக் காணப்பட்டன. அந்தப் பகுதியூடாக பயணம் செய்த கனரக வாகனம் ஒன்று கோண்டாவில் டிப்போவுக்கு அருகே விபத்துக்குள்ளானது. வாகனம் மதிலுடன் சாய்ந்த போதும் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (த-17)

## வீதிகள் திருத்த நிதி

சாவகச்சேரி நகர சபை எல்லைக் குட்பட்ட கோவில் குடி யிருப்பு, சாவகச்சேரிநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக் குடியேறிய முஸ்லிம் மக்களின் நலன்கருதி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இரு வீதி அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு பிரிவில் உள்ள கட்டுக்காணி வீதி, நகர்ப் பிரிவில் உள்ள சண்முகம் வீதி ஆகியவற்றின் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த வீதிவேலைகளுடன் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினர் சபை நிதியிலிருந்து ஒன்பதாம் வட்டாரத்தில் கண்டுவில் முதலாம் ஒழுங்கை, ஐந்தாம் வட்டாரத்தின் யாழ். வீதி முதலாம் ஒழுங்கை ஆகியவையும் புனரமைக்கப்படவுள்ளதாக நகர சபைத்தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை தெரிவித்தார். (ம- 9)

## புங்குடுதீவு பிரதேசத்தில் ஆதனங்கள் மீள் பதிவு

யாழ்ப்பாணம்,செப்.28
வேலணை பிரதேச சபைக்குட்பட்ட புங்குடு தீவில் ஆதனங்கள் மீள் பதிவு செய்யப்படவுள்ளன.

வேலணை பிரதேச சபை தலைவர், செயலாளர் ஆகியோர் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

கடந்த 35 வருடங்களின் பின்னர் இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை முதலாம், இரண்டாம், மூன்றாம் வட்டாரங்களும் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை 4ஆம், 5ஆம், 6ஆம் வட்டாரங்களிலும்,

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை 7ஆம், 8ஆம், 9ஆம் வட்டாரங்களிலும்,

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை 10ஆம், 11ஆம், 12 ஆம் வட்டாரங்களிலும் ஆதன மீள்பதிவுகள் இடம் பெறவுள்ளன.

**கடந்த 35 வருடங்களின் பின்னர் இந்தப் பணி ஆரம்பிக்கப் பட்டுள்ளது.**

இந்தக் காலப்பகுதியில் மக்கள் தமது விவரங்களைத் தவறாது பதிந்து உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும் என்று பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார்.

ஆதனப் பதிவை மேற்கொள்ளும் போது தங்கள் ஆதனத்திற்குரிய காணியின் உறுதி, குடும்ப அட்டை, நில அளவைப் படம், அடையாள அட்டை என்பனவற்றுடன் வருகை தர வேண்டும் என்று கூறப் பட்டது.

இதேவேளை-அடுத்த நவம்பர் மாதம் மண்டைதீவு பிரதேச ஆதனங்கள் குறித்த பதிவு ஆரம்பிக்கப்படும் எனவும் தலைவர் தெரிவித்தார். (ம-50)

## தாய்லாந்தில் கூட்டுறவு விழா: யாழ்.பிரதிநிதி

யாழ்ப்பாணம்,செப்.28
ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப் பட்ட சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா தற்போது தாய்லாந்தில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்டத்தின் சார்பில் கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த பெண் பணியாளர் ஒருவர் கலந்து கொண்டார்.

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் யாழ்.மாவட்டக் கூட்டுறவு சபையின் மகளிர் பொதுச் சபை பிரதிநிதியுமான திருமதி ந.சர்மிளா என்பவரே தாய்லாந்தில் நடைபெற்ற கூட்டுறவாளர் விழாவில் பங்கேற்றார்.

தேசிய கூட்டுறவுச் சபையினால் வழங்கப்பட்ட மகளிருக்கான புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் இவர் தாய்லாந்தில் பயிற்சிக்காகச் சென்ற வேளை கூட்டுறவாளர் விழாவிலும் பங்கேற்பதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்தக் கூட்டுறவாளர் விழாவில் உள்நாட்டு, வெளிநாட்டு கூட்டுறவாளர்களுடன், அரச தலைவர்களும் கலந்து கொண்டனர். (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜம்மு காஷ்மீர் வந்துள்ள ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை, தலைநகர் ஸ்ரீநகரில் வரவேற்கும் முதல்வர் ஓமர் அப்துல்லா.

## தமிழகத்தில் கன மழை சிறுவன் உட்பட 2 பேர் சாவு

தமிழ்நாட்டில் சென்னை மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை பெய்த கனமழையில் 15 வயது சிறுவன் உட்பட இருவர் உயிரிழந்தனர்.

சென்னையில் நேற்று முன்தினம் காலை முதல் வெயில் சுட்டெரித்து வந்த நிலையில் பிற்பகல் 3 மணிக்கு மேல் திடீரென கருமேகம் சூழ்ந்தது. மாலை 4 மணியளவில் 60 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக் காற்று வீசியது.

இந்த சூறைக் காற்று 2 முதல் 3 நிமிடங்கள் வரை மட்டுமே நீடித்தது. மேலும் 10 நிமிடங்கள் காற்று வீசியிருந்தால் சென்னையில் பெரும்பாலான மரங்கள் வேரோடு சாய்ந்திருக்கும் என்று தீயணைப்புத் துறையினர் தெரிவித்தனர். சூறைக் காற்றுடன் ஆரம்பித்த கன மழை சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாகக் கொட்டித் தீர்த்தது. பலத்த காற்றுடன் கூடிய மழையால் மின்னல் தாக்கி, மெரினா கடற்கரையில் சுண்டல் விற்கும் சிறுவன் உயிரிழந்தார். குடிதண்ணீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய ஊழியர் ஒருவர், பாதாள சாக்கடை யில் ஏற்பட்ட அடைப்பை நீக்கும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தபோது கன மழையில் சிக்கி உயிரை விட்டார். (வ)

## விமானத்தின் மீது மோதியது ட்ரக்; தப்பினர் பயணிகள்

சென்னை விமான நிலையத்தில், சென்னையில் இருந்து பெங்களூருக்குச் செல்லத் தயாராக இருந்த கிங்பிஷர் விமானத்தின் மீது, சரக்குகளைக் கையாளும் டிரக் ஒன்று மோதியதில், விமானத்தின் வலதுபுற இறக்கை பாதிக்கப்பட்டது.

இந்த விபத்து நடந்த போது விமானத்தில் சுமார் 50 பயணிகள் இருந்தனர். எனினும், இந்த விபத்தால் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. உடனடியாக பயணிகள் விமானத்தில் இருந்து இறக்கப்பட்டு வேறு விமானம் மூலம் பெங்களூர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

## அகதிகளை கப்பல்களில் ஏற்றி ஆஸிக்கு அனுப்புவதாக ஏமாற்றும் முகவர்கள்

### கியூ பிரிவு பொலிஸார் எச்சரிக்கை

இலங்கை அகதிகளை, ஆஸ்திரேலியாவுக்கு கடத்தும் முகவர்கள்மீது, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கியூ பிரிவு பொலிஸார் எச்சரித் துள்ளனர்.

இது குறித்து கியூ பிரிவு பொலிஸ் அதிகாரி ஆபாஷ் குமார் தெரிவித்ததாவது:-

தமிழக முகாம்களில் வசிக்கும், இலங்கை அகதிகளிடம், தொழில்வாய்ப்புத் தேடித் தருவதாக ஆசை வார்த்தை கூறி, பன்னாட்டு கப்பல்கள் மூலம், ஆஸ்திரேலியா மற்றும் கனடாவில் உள்ள, கிறிஸ்மஸ் மற்றும் கூக்கூ தீவுகளுக்கு, தரகர்கள் கடத்திச் செல்வதாக, நுண்ணறிவு பிரிவினருக்கு தகவல் வந்துள்ளது.

**ஆஸ்திரேலியா, கனடாவுக்குத் தப்பிச் செல்லும் அகதிகள் குறித்து கியூ பிரிவு கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கலாம்.**

இதையடுத்து, ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறும் தரகர்கள் மற்றும் முகவர் களை நம்பி, தமிழக அகதிகள் முகாம்களில் வசிப்ப வர்கள் செல்ல வேண்டாம்.

பன்னாட்டு கப்பல்கள் மூலம், ஆஸ்திரேலியா, கனடாவுக்குத் தப்பிச் செல்லும் அகதிகள் மற்றும் அவர்களை அழைத்துச் செல்லும் தரகர்கள், முகவர் கள் குறித்து, கியூ பிரிவு கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் தெரிவிக்கலாம்- என்றார்.

இந்த அறிக்கையை, அந் தந்தப் பிரிவு அலுவலகங்களில் ஒட்டி, கியூ பிரிவு பொலிஸார் விழிப்பு ணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். (வ)

## அணு உலைக்கு எதிராக இடிந்தகரையில்
# மணலில் புதைந்து வைகோ போராட்டம்

கூடங்குளம் அணு உலைக்கு எதிராகப் பொது மக்களுடன் ம.தி.மு.க. தலைவர் வைகோவும் நேற்று முன்தினம் மண்ணுக் குள் புதைந்தபடி போராட்டம் நடத்தினார்.

நேற்று முன்தினம் இடிந்தகரை தேவாலய வளாகத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வைகோ கலந்து கொண்டார். அங்கிருந்து மக்களுடன் ஊர்வலமாக கடற்கரைக்குச் சென்று உடலை மண்ணில் புதைத்து போராட்டம் நடத் தினார்.

அவருடன் கூடங்குளம் போராட்டக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் உதயகுமார்,



புஷ்பராயன் உள்ளிட்டோரும் மண்ணில் புதைந்து போராட்டம் நடத்தினர். பின்னர் அவர்கள் கடலில் குளித்து போராட்டத்தை முடித்தனர்.

இந்தப் போராட்டம் குறித்து வைகோ பேசுகை யில் மேலும் தெரிவித் ததாவது:-

இடிந்தகரை மக்களுக்கு ஆதரவு தரும் அனைத்து கட்சிகளும் அங்கிருந்து கொண்டு கருத்துக்களைக் கூறக்கூடாது.

போராட்டக் களத்துக்கு வந்து மக்களை நேரடியாக சந்தித்து அனைவரும் ஒன்று சேர்ந்து அணு உலைக்கு எதிரான கருத்துக்களை நிலை நாட்ட வேண்டும்.

எதிர்வரும் நவம்பர் 24 ஆம் திகதி தூத்துக்குடியில் மீனவர் வாழ்வுரிமை மாநாடு நடத்தவுள்ளோம்.

டிசெம்பர் 12 ஆம் திகதி மது ஒழிப்பு பேரணி உவரியிலிருந்து சென்னை வரை நடத்தப்படுகிறது - என்றார். (வ)


## ஆற்றுக்குள் கவிழ்ந்தது பஸ்; 24 பேர் பரிதாபமாகச் சாவு

### மகாராஷ்டிராவில் துயரம்

ஆற்றுக்குள் பயணிகள் பஸ் கவிழ்ந்து 24 பயணிகள் உயிரிழந்தனர். இவர்களில் 20பேர்மீட்கப்பட்டுள்ளனர்.

மகாராஷ்டிரா மாநிலம் புல்டானா மாவட்டத்தில் உள்ள பூர்ணா ஆற்றில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. விபத்தில் சிக்கிய பஸ் மகாராஷ்டிரா மாநில அரசு போக்குவரத்துக் கழகத்துக்குச் சொந்தமானது.

இந்த பஸ் நேற்றுமுன்தினம் காலை பயணிகளை ஏற்றிக் கொண்டு ஷேகாவில் இருந்து பதூர்டா என்ற இடம் நோக்கி சென்று கொண்டி ருந்தது. முற்பகல் 11 மணியளவில் பூர்ணா



நதி மேல் கட்டப்பட்டுள்ள கிரோடா பாலத்தில் சென்று கொண் டிருந்தது. அப்போது திடீரென்று பஸ் பாலத்தை விட்டு விலகி ஆற்றுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது. அப்போது பஸ்ஸில் சுமார் 60 பயணிகள் இருந் தனர். இதில் பலர் மாணவர்கள் ஆவர். அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஓடிவந்து விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இறுதியாகக் கிடைத்த தகவலின் படி 20 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மேலும் 24 பேரின் சடலங் களும் மீட்கப்பட்டுள்ளன.

## அன்னாகுழுவிலிருந்து பிரிந்த கெஜ்ரிவால் டில்லி தேர்தலில்

அன்னாஹசாரே குழுவில் இருந்து பிரிந்து சென்றுள்ள அர்விந்த் கெஜ்ரிவால் புதுடில்லி மாநில தேர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அடுத்தவாரத்தில் புதிய அரசியல் கட்சியை ஆரம்பிக்க உள்ளதாகவும் நாடு முழுவதும் உள்ள லோக்சபா தொகுதிகளில் போட்டியிடப் போகிறோம், முன்னதாக அடுத்தாண்டு நடைபெற உள்ள புதுடில்லி மாநில சட்டசபைக்கான தேர்தலில் போட்டியிட உள்ளேன்.

தேர்தலில் இளைஞர்களை மட்டுமே நிறுத்தப்படவுள்ளதால் கட்சியில் இளைஞர் பிரிவு ஒன்றை ஏற்படுத்



தப் போவ தில்லை-என்றார். முன்னதாக புதுடில்லியில் உள்ள கல்லூரி மாணவர்களைச் சந்தித்த அவர் கல்லூரிகளில் மாணவர்கள் குழுக்களை அமைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். (வ)

## சொத்துக் குவிப்பு வழக்கு ஆவணங்களைப் பார்க்க சசிகலாவுக்கு அனுமதி

டில்லி, செப் 28

சொத்துக் குவிப்பு வழக்குத் தொடர்பான ஆவணங்களைப் பார்க்க அனுமதி கேட்டு சசிகலா தரப்பில் தாக்கல் செய்த வழக்கில், ஆவணங்களைப் பார்க்க அனுமதிக்குமாறு பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெங்களூரில் நடைபெற்று வரும் சொத்துக் குவிப்பு வழக்குத் தொடர்பான ஆவணங்களைப் பெற்று 3 வாரத்துக்குள் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்றும், இளவரசியும், சுதாகரனும் வேண்டும் என்றால், ஆவணங் களைப் பார்க்கலாம் என்றும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட் டுள்ளது. (வ)

## ஐ.மு.கூ. க. பொருளாதார சீர்திருத்தத்துக்கு ஒப்புதல்


ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர் பொருளாதார சீர்திருத்தத் துக்கு கூட் டணிக் கட்சித் தலைவர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர் என்று மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

மத்திய அரசை ஆளும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணிக் கட்சியினரின் ஒருங் கிணைப்புக் கூட்டம் நேற்று புதுடில்லியில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. (வ)

## 114 தீவிரவாதிகள் மணிப்பூரில் சரண்

மணிப்பூரில் 114 தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சரணடைந்தனர். மணிப்பூர் மாநிலத்தில் பல்வேறு தீவிரவாத அமைப் புகள் செயற்பட்டு வருகின் றன. இந்த அமைப்புகளைச் சேர்ந்த 114 தீவிரவாதிகள் நேற்று முன்தினம் சரணடைந்தனர். தலைநகர் இம்பாலில் நடந்த நிகழ்ச்சியில் முதல்வர் இபோபி சிங் முன்னிலையில், ஏ.கே.47 ரகம் உட்பட பல்வேறு வகையான துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகளை ஒப்படைத்து தீவிரவாதிகள் சரணடைந்தனர்.

தீவிரவாதத்தைக்கைவிட்டு ஜனநாயக பாதைக்குத் திரும்பியதற் காக அவர்களுக்கு




இபோபி சிங் வாழ்த்துத் தெரிவித்தார். சரணடைந்த தீவிரவாதிகள், மாநிலத்தின் வளர்ச்சிக்கு பங்காற்ற வேண்டும் என்றும் அவர்களது மறு வாழ்வுக்குத் தேவையான உதவிகளை அரசு செய்யும் என்றும் உறுதியளித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நாவின் தோல்விச் சின்னம் காஷ்மீர்

### பாக்.ஜனாதிபதி சர்தாரி கருத்து



காஷ்மீர் விவகாரமானது ஐநா.வின் மிகப்பெரிய தோல்வியின் சின்னம் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஷிவ் அலி சர்தாரி தெரிவித்தார்.

நியூயோர்க்கில் ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக்காக பாகிஸ்தான் தொடர்ந்தும் ஆதரவளிக்கும். இந்தியாவுடனான எமது உறவு பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையிலானதாகும். எமது உறவுகள் விரிவடைகின்றன. இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை கடந்த 4 வருடங்களில் ஐந்தாவது தடவையாக தெஹ்ரானில் கடந்த மாதம் நான் சந்தித்தபோது நடத்திய கலந்துரையாடல்களால் நான் ஊக்குவிக் கப்பட்டேன்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு இணங்க, ஜம்மு மற்றும் காஷ்மீர் மக்கள் தமது தலைவிதியைத் தீர்மானித்துக் கொள்வதற்கு நாம் தொடர்ந்து ஆதரவளிப் போம்-என்றார்.

# ஐ.நா.பாதுகாப்புச் சபையை மாற்றி அமைக்க வேண்டும்

## ஜி 4 நாடுகள் வலியுறுத்தல்

**ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப் பினர்களாக தங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மேற்படி 4 நாடுகளும் கோரி வருகின் றன.**

ஐ.நா.பாதுகாப்புச் சபையை மாற்றியமைக்க வேண்டும் என்று இந்தியா, பிரேசில், ஜேர்மனி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் அடங்கிய ஜி4 நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஐ.நா. பொதுச் சபையின் 67 ஆவது கூட்டம் நியூயோர்க்கில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்பதற்காக சென்றிருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மத்தாய், பிரேசில் வெளியுறவு அமைச்சர் ஆகுயர் பட்ரியோடா, ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் கைடோ வெஸ்டர்வெல்லி மற்றும் ஜப்பான் வெளியுறவு அமைச்சர் கொய்ச்சிரோ கெம்பா ஆகியோர் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பின்போது, ஐ.நா. பாதுகாப்புச் சபையை மாற்றியமைப்பது குறித்து விவாதித்தனர்.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர மற்றும் தற்காலிக உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்போவதாக அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். சர்வதேச அமைதி, பாது காப்பு மற்றும் இதர விடயங்கள் குறித்து இறுதிமுடிவு எடுப்பதில் வளரும் நாடுகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்பதே ஜி4 நாடுகளின் முக்கிய குறிக்கோளாக உள்ளது.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களாக தங்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று மேற்படி 4 நாடுகளும் கோரி வருகின் றன. ஏற்கெனவே 5 நாடுகள் மட்டுமே நிரந்தர உறுப்பினராக உள்ளன. (வ)

## உக்ரைனில் துப்பாக்கிச் சூடு மூவர் சாவு

உக்ரைனில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பாதுகாப்பு தரப்பினர் உயிரிழந்தனர்.

குறித்த துப்பாக்கி சூட்டில் படுகாயமடைந்த மேலும் பல பாதுகாப்புத் தரப்பினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் கெரவன் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, துப்பாக்கிதாரியின் புகைப்படம் கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் தேடப்பட்டு வருவதாகவும் உக்ரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்றுவரும் கூட்டுக்குழுவில் பங்கேற்க வந்த மைக்ரோசொப்ட் நிறுவுனர் பில்கேட் ஸுடன் அளவளாவி மகிழும் ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன்.

## பிரேஸில் நாட்டுக்கான கூகிள் தலைவரைக் கைது செய்ய உத்தரவு

பிரேஸிலில் கூகிள் நிறுவனத்தின் செயற்பாடு களுக்குப் பொறுப்பான தலைமை அதிகாரியைக் கைதுசெய்யுமாறு பிரேஸில் நீதிபதியொருவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேயர் பதவியொன்றுக்குப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரை மோசமாக விமர்சிக்கும் காணொலியை கூகிளினால் நடத்தப்படும் யூ.டி.யூப். இணையத்தளத்திலிருந்து அகற்றுவதற்கு மறுத்தமையே இந்த உத்தரவுக்கான காரணமாகும்.

உள்ளூர் தேர்தல் சட்டங்களுக்கு முரணான வகையில் இந்தக் காணொலி உள்ளதாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

மேற்படி காணொலியை நீக்குமாறு, மாட்டோ குரொஸ்ஸோடோ சுல் மாநிலத்திலுள்ள நீதிபதி பிளாவியோ பெரேன் விடுத்த உத்தரவை தான் நிராகரிப்பதாக கூகிள் நிறுவனம் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**மேயர் பதவியொன்றுக்குப் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரை மோசமாக விமர்சிக்கும் காணொலியை கூகிளினால் நடத்தப்படும் யூ.டி.யூப் இணையத்தளத்திலிருந்து அகற்றுவதற்கு மறுத்தமையே இந்த உத்தரவுக்கான காரணம்.**

தனது இணையத் தளத்தில் பதிவேற்றப்பட்ட காணொலியின் உள்ளடக்கத்துக்கு தான் பொறுப்பல்ல என்று கூகிள் தெரிவித்தது.

# ஸ்பெயினில் பொருளாதார நெருக்கடி அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம்

மாட்ரிட், செப்.28


ஸ்பெயினில் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவுவதால் அந்த நாட்டு அரசைக் கண்டித்து தலைநகர் மாட்ரிட்டில் நாடாளுமன்றத்துக்கு வெளியே ஆயிரக்கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஸ்பெயினில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவுவதால், மக்கள் போராட்டம் தீவிரமடைந்து வருகின்றது.

ஸ்பெயினில் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதற்கு அந் நாட்டு ரியல் எஸ்டேட் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணம் என்று கருதப் படுகிறது.

இந்த நெருக்கடி காரணமாக லட்சக்கணக்கானோர் தொழிலிழந்து தவிக்கின்றனர், ஏராளமான குடும்பங்கள் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதனையடுத்து அரசைக் கண்டித்து தலைநகர் மாட் ரிட்டில் நாடாளுமன்றத்துக்கு வெளியே ஆயிரக் கணக்கானோர் திரண்டு





ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஸ்பெயினின் வங்கிகளுக்கு 100 பில்லியன் யூரோ நிதியுதவி தருவதாக ஐரோப்பிய நாடுகள் அறிவித்திருப்பது அவர்களின் கோபத்தை அதிகரித்துள்ளது.

இதைக்கண்டித்தும், அரசைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'வெட்கம்', 'பதவி விலகு' என்பவை உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டனர்.

நாடாளுமன்றக் கட்டடத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ள உலோகத் தடுப்புகளை உடைக்க சிலர் முயன்றனர். இதையடுத்து அவர்களை விரட்டிச் சென்ற பொலிஸார் தடியடி நடத்தி, சிலரை வானில் ஏற்றினர்.

நாடாளுமன்றத்தை சுற்றியுள்ள வீதிகளில் திரண்டிருந்த நூற்றுக்கணக்கானவர்களை பொலிஸார் விரட்டியடித்தனர். சிலர் கலைந்து செல்லாமல் தரையில் அமர்ந்தபடி மறியலில் ஈடுபட்டனர்.

அப்போது அவர்கள் மீது பொலிஸார் இறப்பர் தோட்டாக்களால் சுட்டனர். இதில் 14 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கிரேக்க அரசுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்கள்

கிரேக்க அரசின் நிதித் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு தழுவிய போராட்டங்கள் நடத்தப் படவுள்ளன.

இதன் ஒரு கட்டமாக 24 மணித்தியால வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட தொழிற்சங்கங்கள் முன்வந்துள்ளன.

மக்களுக்கான பொதுச் செலவுக் குறைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்பிரகாரம் 11.5 பில்லியன் யூரோக்கள் நிதி குறைக்கப்படவுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பனவற்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் அடுத்த கட்ட கடனுக்கான நிபந்தனையாக இது அமையப் பெற்றுள்ளது.

நிதி நெருக்கடிகளுக்கான தீர்வுகளைப் பெறும் நோக்கில் கிரேக்கம் செலவுக் குறைப்புகளை மேற் கொண்டு வருகின்றது.

## பிரிட்டனில் கனமழை: வெள்ள அபாய எச்சரிக்கை



பிரிட்டனில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் வட கிழக்கு மற்றும் வட மேற்கு பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனமழையின் காரணமாக 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்விடங்கள் இன்றித் தவிக்கின்றன. இவர்கள் தற்காலிகக் குடியிருப்புகளில் பொழுதைக் கழித் தனர்.

கேம்பிரிட்ஜ்ஷியரில் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட வீதி விபத்தில் ஒரு வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளது.

மற்றுமோர் இடத்தில் தாயொருவரும், மகன் ஒருவரும் உயிரிழந்தனர்.

ஸ்கொட்லாந்தில் மணிக்கு எழுபது மைல் வேகத்தில் காற்று வீசியதுடன், கனமழை பெய்தது.

பிரிட்டன் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் மக்களின் இயல்பு வாழ்க்கைபாதிக்கப்பட்டுள்ளது, சாலை போக்குவரத்து தடைப்பட்டது.

வடக்கு அயர்லாந்தில் வெள்ள எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. ஆனால் யார்ஷயரில் உள்ள ஓஸ் நதி மற்றும் செவன் நதிகளில் வெள்ளம் பெருக்கெடுக்கும் அபாயம் உள்ளதாக சுற்றுச்சூழல் மையம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலாஸ்கா தீவுகளில் கடும் நிலநடுக்கம்

அமெரிக்காவின் அலாஸ்கா தீவுகளில் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டதால் அந்த நாட்டு மக்கள் அச்சத் தில் உறைந்தனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த அலாஸ்கா தீவுகளில் நேற்று முன்தினம் இரவு 7.39 மணி யளவில் கடும் நிலநடுக்கம் ஏற்பட் டது.

இந்தநிலநடுக்கத்தைத் தங்களால் முன்கூட்டியே கணிக்க முடியவில்லை என்று அந்நாட்டு சுனாமி மற்றும் நிலநடுக்க எச்சரிக்கை நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தநிலநடுக்கம் முத லில் 6.9ஆக பதிவாகி யதா கத் தெரிவித்த இந்த நிலையம் பின்னர் 6.4 என அறிவித்தது.

நிலநடுக்கம் ஏற்பட்ட சிலநிமிடங்கள், கட்டடங்களில் அதிர்வைக் கண்டதாகவும் மக்கள் அலறியடித்து இரவு நேரங்களில் வீதிகளில் தஞ் சமடைந்ததாக வும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# அமெரிக்காவை இன்னும் 5 ஆண்டுகளில் முந்திவிடும் சீனா

## அதி உயரக் கட்டடங்களில்

அடுத்த 5 ஆண்டுகளில் அமெரிக்காவை சீனா தோற கடித்து விடும் என்று கட்ட டங்கள் குறித்த ஆய்வு அமைப்பான மோசியன் சிட்டி நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தற்போது உலகிலேயே அதிக உயரங்கள் கொண்ட கட்டடங்கள் அமெரிக் காவில் தான் உள்ளன. இங்கு 152 மீற்றருக்கு மேற்பட்ட 533 கட்டடங்கள் உள்ளன.

சீனாவில் இதன் எண் ணிக்கை 470 ஆக உள்ளது. ஆனால் 2017 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் வானுயர்ந்த கட்டடங்களின் எண் ணிக்கை 539 ஆக இருக்கும்.

அதே ஆண்டில் சீனாவில் இந்த அளவுக்கு உயரம் கொண்ட கட்டடங்களின் எண்ணிக்கை 802 ஆக அதிகரிக்கும்.

**சீனாவின் பெரிய நகரங்களான ஷாங் காய், தலைநகர் பீஜிங் மட்டுமல்லாமல், 2 ஆம் நிலை நகரங்களி லும் வானுயர்ந்த கட்ட டங்கள் கட்டப்பட்டு வருகின்றன**

அடுத்த 10 ஆண்டுகளில், சீனாவில் இந்த எண்ணிக்கை 1,318 ஆகவும், அமெரிக்கா வில் 563 ஆகவும் இருக்கும் என்று தெரிய வந்துள்ளது.

தற்போது சீனாவில் 332 வானுயர்ந்த கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், 516 கட்டடங்கள் கட்டுமானப் பணிக்காக காத்திருக்கின்றன.

ஆனால் அமெரிக்காவில் 6 கட்டடங்கள் மட்டுமே கட்டுமானத்தில் உள்ளன. மேலும், 24 கட்டடங்கள் வரைபட அளவில் உள்ளன.

இதில் மற்றொரு குறிப் பிடத்தக்க அம்சம், சீனாவின் பெரிய நகரங்களான ஷாங் காய், தலைநகர் பீஜிங் மட்டு மில்லாமல், 2 ஆம் நிலை நகரங்களிலும் வானு யர்ந்த கட்டடங்கள் கட்டப்பட்டு வரு கின்றன என்பது தான். (வ)

# கை நீட்டினாலே பணத்தை வாரி வழங்கும் ஏ.ரி.எம்.



டோக்கியோ,செப். 28

ஏ.ரி.எம். அட்டையை வீட்டில் மறந்து வைத்து விட்டால் இனி கவலை யில்லை. கையை நீட்டினாலே பணம் தரும் ஏ.ரி.எம். விரை வில் வர இருக்கிறது. இதன் போது ஜப்பானில் இந்த நவீன ஏ.ரி.எம். அறிமுகப் படுத்தப் பட்டுள்ளது.

இந்தப் புதியமுறை, கிஃபு மாகாணத்தில் ஒகாகி கியோரிட்சு வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்முறையில், கை ரேகைகள் 'ஸ்கான்' செய்து வங்கியில் பதிவு செய்யப் படும். மேலும் பிறந்தநாள் மற்றும் ஏ.ரி.எம் 'பின் (ரகசிய) எண்' உள்ளிட் டவையும் வங்கியில் பதிவு செய்வது அவசியம்.

அட்டை இல்லாமல், ஏ.ரி.எம். மையத்தில் கை ரேகையைப் பதிவு செய்து பணம் எடுப்பது, பண இருப்பு விவரம் அறிவது உள்ளிட்ட சேவையைப் பெற முடியும். இந்தச்சேவை, முதல் முறை யாக கிஃபு மாகாணத்தில் ஹசிமா நகரில் உள்ள வங்கியிலும், நடமாடும் ஏ.ரி.எம். வாகனத்திலும் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளது.

விரைவில் இம்முறை ஆச்சி, மியி மற்றும் ஷிகா உள்ளிட்ட மாகாணங்களில் உள்ள 18 இற்கும் மேற்பட்ட நகரங்களில் நடமுறைப் படுத்தப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் நாட்டில் அடிக் கடி நிலநடுக்கம், சுனாமி உள்ளிட்ட இயற்கைச் சீற் றங்கள் ஏற்படுகின்றன. அச்சமயத்தில் வங்கி உறுப் பினர்கள் ஏ.ரி.எம். அட்டை இல்லாமலே பணம் எடுக் கும் வசதியைக் கருத்தில் கொண்டே இம்முறை அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதிக்கு தீவுச் சிறை



மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட்டை தீவுச் சிறையில் வைக்குமாறு அந்தநாட்டு நீதிமன்றம் ஒன்று உத்தர விட்டுள்ளது.

இதன்பிரகாரம் தலைநகர் மாலேயை விட்டு அவர் வெளி யேற வேண்டுமாயின் அனு மதிபெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள் ளது.

நஷீட்டை பதவியில் இருந்து வெளியேற்றிய மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் அவரின் ஆதரவாளர்களுக்கு இந்த நகர்வு கோபத்தை ஏற்படுத்தலாம் என்று சுட் டிக் காட்டப்பட்டுள்ளது.

தமது பதவிக்காலத்தின் இறுதியில் குற்றவியல் நீதி மன்ற நீதிபதியைக் கடத்திய குற்றச்சாட்டில் நஷீட் வழக்கு விசாரணைகளை எதிர் கொண் டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

எதிர்கட்சியினரின் ஆர்ப் பாட்டம் மற்றும் பொலி ஸாரின் கிளர்ச்சி நடவடிக் கையை அடுத்து, ஆயுத முனையில் தாம் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட தாக நஷீட் கூறியிருந்தார்.

எனினும், நஷீட்டின் அரசு சதி நடவடிக்கை மூலம் கவிழ்க்கப்படவில்லை என தேசிய ஆணைக்குழு கூறியி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து நஷீட் டின் ஆதரவாளர்கள் வீதி ஆர்ப்பாட்டங்களில் ஈடு பட்டு வருகின்றனர்.

எனினும், நீதிமன்றத் தின் தீர்ப்பானது, அடுத்த ஆண்டுக்கான தனது தேர்தல் பிரசாரங்களை மேற் கொள்வதற்கு நியாயமற்ற கட்டுப்பாடாக அமைந் துள்ளதாக நஷீட் குறிப்பிட் டுள்ளார்.


## கண்ணீரில் கலந்த 31 நாள்கள்

தோற்றம் 06 ★ 10 ★ 1954



மறைவு 29 ★ 08 ★ 2012

அமரர் **இளையதம்பி அருமைநாதன்**

(கார் சாரதி - அருமை)

அவர்களை 31ஆம் நாளில் நினைவு கூருவோம்

பாரிலோர் பிள்ளையாகி
பண்புடைத்தந்தையாகி
ஊரிலோர் உறவுமாகி
உத்தம குணங்கள் தாங்கி
சீரிய வாழ்வு வாழ்ந்த
சிறப்புடைத் தலைவரெங்கள்
பேரினார் அருமைநாதனார்
பிரிந்துமோர் திங்களாக
வாரியே மலர்கள் தூவி
வகையது பலவும் செய்து
நேரிய வாழ்வு வாழ்ந்து
நெடுந்தூரம் சென்றார் தன்னை
காரிய விழியுள் வைத்து
கண்ணீரால் நீருமாட்டி
பாரிய பாசத்தால் நாம்
பரிந்தின்று நினைவு கூருவோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுவதாக
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

தேவாலய வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி

பாசத்தின் குடும்பத்தலைவனை நினைவு கூரும் குடும்பத்தினர்

(23337) (15-7-6)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 * 12 * 1930



மறைவு 11 * 10 * 2011

திதி: 28.09.2012

**அமரர் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்**

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் நீர்ப்பாசனத்திணைக்களம்)

ஆசையாக எம்மை பெற்று வளர்த்து
அன்பும், பண்பும், பாசமும் ஊட்டி
வளமுடன் வாழ வைத்த அப்பாவே!
வழித்துணையாக இருந்த தெய்வமே!
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
வானுலகம் சென்றாலும்
மனம் விட்டு மறையாமல்
எந்நாளும் இருப்பீர்கள்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை நாம் நிதமும் வேண்டுகின்றோம்.**

கைதடி தென் கிழக்கு, கைதடி.


அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/3603) (15-7-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயத்தை விரட்டுங்கள்

(19)



கம்யூனிஸ சித்தாந்தத்தை உலகிற்கு அளித்த காரல் மார்க்ஸ், துணிச்சலுடன் வறுமையை எதிர்த்துப் போராடினார் என்பது உண்மை. ஆனால் துணிச்சலான காரியம் என்பதால் மட்டும் அதற்கு சிறப்பில்லை. துணிச்சலுடன் வறுமையை எதிர்த்துப் போராடுவதற்கு அவர் கொண்ட குறிக்கோள் காரணமாயிற்று.

லெனின், லிங்கன் ஆகிய அனைத்து பெரும் தலைவர்களும் துணிச்சலை நிரம்பப் பெற்றிருந்தவர்கள். ஆனால் அவர்கள் அடைந்த வெற்றிக்குக் காரணம் அவர்கள் கொண்டிருந்த லட்சியங்களாகும். அதை நிறைவேற்றுவதற்காக அவர்கள் திட்டமிட்டு உழைத்தார்கள். ஆக துணிச்சல் என்பது எப்போது மதிப்பைப் பெறுகிறது என்றால் எண்ணங்களின் வலிமையின் விளைவாக துணிச்சல் ஏற்பட்டு, அது திட்டங்களாக உருவெடுக்கும் பொழுது அந்தத் துணிச்சல் சாதனையாக உயர்ந்து நிற்கிறது.

'எண்ணித் துணிக கருமம்' என்று சொன்ன வள்ளுவர், துணிந்தபின் எண்ணுவோம் என்பது இழுக்கு என்று கூறியுள்ளார்.

எண்ணங்களைப் பலப்படுத்தி துணிச்சலை உண்டாக்கிக் கொள்ளாமல் அசட்டுத்தனமாக துணிந்துவிட்டு பின்பு அதைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பது இழுக்கையே ஏற்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

துணிச்சலுக்கு எண்ணம் ஆதாரமாக இருக்க வேண்டுமே தவிர, எண்ணத்திற்கு துணிச்சல் ஆதாரமாக இருக்கக் கூடாது.

**பயமும் மூட நம்பிக்கையும்**

மூட நம்பிக்கைகளுக்கு பெயர் போன நாடு பாரத நாடு. சகுனம் பார்ப்பதிலிருந்து, பில்லி சூன்யம் வரை இங்கே அநேக பிரச்சினைகள் உண்டு. இவை அனைத்துமே பயத்தை அடிப் படையாகக் கொண்டு மனிதர்களின் மனதில் தோற்றுவிக்கப் படும் கற்பனைகளே.

ஒரு வீட்டில் ஒருவன் தற்கொலை செய்து கொண்டால் அந்த வீட்டில் அவனுடைய ஆவி உலாவுவதாக கதை கட்டி விடுவார்கள். இரவு நேரத்தில் கதவைத் தட்டுகிறது என்பார்கள். ஆவி ருபத்தில் யாரோ நடந்து செல்லுவதைப் பார்த்தேன் என்பார்கள். திடீரென்று காலடி ஓசை கேட்கிறது என்று கதையளப்பார்கள். இவை அனைத்தும் மனதின் பிரமையே தவிர உண்மையல்ல.

நான் கல்லூரி வளாகத்தில் தங்கிப் படித்த போது நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுகிறேன். வளாக அறை ஒன்றில் தங்கியிருந்த மாணவர் ஒருவர் விஷத்தைச் சாப்பிட்டு தற்கொலை செய்துகொண்டார். காதல் தோல்வியால் அவர் தற்கொலை செய்து கொண்டதாக சிலர் சொன்னார்கள். பெற்றோரிடம் மனத் தாங்கலால் தற்கொலை செய்து கொண்டதாக சிலர் சொன்னார்கள். உண்மை என்னவென்று கடைசி வரையிலும் ஒருவருக்கும் தெரியவில்லை. ஆனால் அதற்குப் பிறகு காலியாகிவிட்ட அந்த அறையில் தங்குவதற்கு சகல மாணவர்களும் பயந்தார்கள். பல நாள்கள் வரை அந்த அறை காலியாகவே இருந்தது.

ஒரு மாணவருக்கு, நீண்ட நாள் மனுச் செய்திருந்தும் வளாக அறையில் இடம் கிடைக்காமல் இருந்தது. அவர் துணிச்சலுடன் அந்த அறையைத் தனக்கு கொடுத்தால் தான் தங்குவதற்குத் தயாராக இருப்பதாக தெரிவித்தார். வளாக வார்டன் விவரங்களை எடுத்துக் கூறினார். அதற்குப் பிறகும் அந்த மாணவர் தன்னுடைய முடிவில் உறுதியாக இருப்பதைப் பார்த்த வார்டன், அந்த அறையை அவருக்குக் கொடுத்தார். இரண்டு வருடம் அந்த அறையில் அவர் தங்கி வெற்றிகரமாக பட்டதாரி பரீட்சை எழுதிய பிறகே அந்த அறையைக் காலி செய்து விட்டுச் சென்றார். அந்த இரண்டு வருடமும் இறந்தவரின் ஆவி அங்கு உலாவுவதை தான் பார்த்ததே இல்லை என்று சொல்லிச் சிரித்தார்.

அந்த அறையில் பேய் இருப்பதாக பயம் கொண்ட யாராவது ஒருவர் சென்று தங்கியிருந்தால் நிச்சயம் அவருடைய பயமே பேயாகத் தோன்றி அவரை மிரட்டியிருக்கும்.

ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசனைப் பற்றி ஒரு விஷயம் சொல்லுவார்கள். சென்னையில் மியூஸிக் அக்கடமிக்கு அருகில் ஜெமினி ஹவுஸ் என்கிற பிரம்மாண்டமான ஒரு பங்களா இருக்கிறது. ஒரு காலத்தில் பேய் வாழும் வீடாக அதை எண்ணிப் பயந்து அந்த வீடு விலைக்கு வந்த பொழுது எவரும் வாங்க முன்வரவில்லை. அதனால் அந்த வீடு மிகவும் மலிவான விலைக்குக்கூட வாங்குவார் இல்லாமல் இருந்தது. அதைக் கேள்விப்பட்ட வாசன் குறைந்த விலைக்கு அந்த வீட்டை வாங்கி, புதுப்பித்து குடும்பத்தோடு அதில் குடியேறினார் என்று சொல்லுவார்கள். அதற்குப் பிறகுதான் அவர் பட உலகில் அரும்பெரும் சாதனைகள் புரிந்தாராம்.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# ஏனைய வலயங்கள் கவனிக்கப்படுவது போன்று தீவக கல்வி வலயம் கவனிக்கப்படுவதில்லை

## முன்னாள் தீவக வலய கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.28

ஏனைய கல்வி வலயங்கள் கவனிக்கப்படுவது போன்று தீவக கல்வி வலயம் கவனிக்கப்படுவதில்லை. இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் பெரியவர்களாக இருந்த போதும் தீவகம் புறக்கணிக்கப் பட்டே உள்ளது என ஓய்வுபெற்ற தீவகவலய கல்விப் பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வேலணை மத்திய கல்லூரியில் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற மணிவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தீவக வலயத்திற்கென காணி கட்டட வசதிகள் கிடையாது. தற்போதைய கட்டடம் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குரியது. எதிர்காலத்தில் இந்தக் கல்வி வலயத்திற்கென சொந்தமான கட்டடம் அமைய வேண்டும்.

பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலையிலும் கூட எமது அதிபர், ஆசிரியர்கள் தம்மை அர்ப்பணித்து மாணவர்களின் கல்வி உயர்வுக்காக உதவியுள்ளனர். ஒரு கருமம் நிறைவேற வேண்டும் என்பதற்காக சில சமயங்களில் உத்தியோகத்தர்களுடன் நான் சிறிது கோபப் பட்டாலும் கூட, அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாததால் அனைத்து உத்தியோகத்தர்கள் தரப்பிலும் இருந்து எனக்கு முழுமையான ஒத்துழைப்பு கிடைத்தது. இதனால் எனது பணி இலகுவாக இருந்தது.

ஆசிரியர்கள் ஓய்வூதியம் பெறுவதில் காலதாமதங்கள் ஏற்படுகின்றன. ஏனைய உத்தியோகத்தர்கள் உடனேயே தமது ஓய்வூதியத்தைப் பெறக்கூடியதாக இருக்க, ஆசிரியர்களுக்கு மட்டும் தாமதமாகக் கிடைக்கிறது. அந்த நிலையை மாற்றி ஆசிரியர்களும் ஓய்வுபெற்ற அடுத்த மாதத்திலேயே தமது ஓய்வூதியத்தைப் பெறக் கூடிய வசதிகள் செய்யுப்பட வேண்டும் என்பதில் நான் கவனம் செலுத்தியுள்ளேன்-என்றார். (எ-7)



கூட்டுறவு சபையின் ஐக்கிய தீபம் சஞ்சிகை நேற்று வியாழக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது. சபையின் தலைவர் ஆர்.ராஜாராம் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். அருகில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன், சபையின் செயலாளர் வேதவல்லி செல்வரெத்தினம் ஆகியோர் உள்ளனர். (த-17)

# பதவிக் காலம் முடிவடைந்தது

அச்சுவேலி, செப். 28

யாழ்.மாவட்டத்தில் உள்ள கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு, சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு மூன்றினதும் மத்தியஸ்த சபைகளின் பதவிக் காலம் இந்த மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடைந்திருப்பதாக மத்தியஸ்தர் சபைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மூன்று பிரதேச செயலர் பிரிவு உட்பட நாடளாவிய ரீதியில் 30 பிரதேச செயலர் பிரிவுகளின் மத்தியஸ்தர் சபைகளின் பதவிக்காலம் முடிவடையும் திகதியை வெளிப் படுத்தி மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

பதவிக்காலம் முடிவடையும் பிரதேச செயலர் பிரிவுகளில் புதிய மத்தியஸ்த சபைகளை உருவாக்குவதற்கு தகுதியான உறுப்பினர்களைக் கண்டறிந்து பரிந்துரை செய்யுமாறு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்டச் செயலர்களுக்கு அறிவித்துள்ளது.

புதிதாக நியமனம் செய்வதற்கு உரிய மத்தியஸ்தர்களின் தகைமைகள் மற்றும் விவரங்கள் வர்த்தமானி அறிவித்தலில் அறிவுறுத்தப்பட்டுள்ளன. (எ-11)

# நிர்வாக உறுப்பினர் தெரிவு

அச்சுவேலி,செப்.28

வலி.கிழக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் புதிய நெறியாளர் குழு தெரிவு செய்யப் பட்டுள்ளது.

புதிய நெறியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டோர் பெயர், விவரம் வருமாறு:-

தலைவர்-இ.கார்த்திகேசு, உபதலைவர்-திருமதி ருக்குமணி ஆனந்தவேல், பொருளாளர்-மா.ஞானலிங்கம், குழு உறுப்பினர்களாக இ.ராகுலன், மு.சிவசுந்தரலிங்கம், இ.ஜனார்த்தனன், கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி கே.சகுந்தலாதேவி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-11)

# நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுவரி திணைக்கள சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.28

மதுவரி திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே சுவரொட்டி, சித்திரப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் 'மதுபானமற்ற நாளை', 'மதுபானமற்ற இலங்கை'', 'மதுபானமற்ற அழகிய சமுதாயம்', 'மதுபானமற்ற அழகிய கிராமம்', 'நஞ்சு போதையற்ற நாடு அல்லது ஊர் அல்லது இலங்கை', 'மது அரக்கனுக்கு எதிராக ஒன்று திரள்வோம்', 'மது அரக்கன்களின் கோரப்பிடியிலிருந்து உலகை மீளக் கட்டியெழுப்புவோம்', 'மது அரக்கன்களை; தோல்வியடையச் செய்து நாங்கள் எழும்புவோம்' 'மது அல்லாத நாளைய உண்மையான அபிவிருத்தி', 'மது அற்ற ஆரோக்கியமான, புத்திகூர்மையான பிரகாசமான எதிர்காலம்', குழப்பமடைந்த மனதை ஒரு நெறிப்படுத்தல் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக ஆக்கங்கள் அமையப் பெறுதல் வேண்டும்.

அத்துடன் மாணவர்களுடைய சொந்த ஆற்றலை வெளிப்படுத்துதல், சமுதாயக் குறைபாடுகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் அறிவைப் பெறல், மது, போதைப் பொருள் பாவனையாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் தாக்கத்தை அறிதல், மது, போதைப் பொருள் பாவனையாளர்களிடையே வாழ்க்கையை, சந்தோஷமாக, வெற்றிகரமாக ஆக்கிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களை இலக்காகக் கொண்டு போட்டிக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கனிஷ்டபிரிவு, சிரேஷ்ட பிரிவு, சிரேஷ்ட இரண்டாம் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளாக நடத்தப்படும் இந்தப் போட்டியில் தரம் 6 முதல் தரம் 13 வரையான சகல பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றலாம்.

ஆர்வமுடைய மாணவர்கள் எதிர்வரும் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்பாக மது வரி ஆணையாளர் நாயகம், மதுவரித் தலைமைக் காரியாலயம், இல.34 டபிள்யூ எ.டி.ராமநாயக்க மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு பாடசாலை அதிபரின் உறுதிப் படுத்தலுடன் அனுப்பி வைக்கலாம்.

போட்டியில் சமர்ப்பிக்கப்படும் ஆக்கங்களில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு முதலாம் பரிசாக 30 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 20 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும், நான்காம் இடத்திலிருந்து 10 ஆம் இடம் வரை 2 ஆயிரத்து 500 ரூபாவும் பணப்பரிசு வழங்கப்படும். இவற்றை விட 11 ஆம் இடத்திலிருந்து 25 ஆம் இடம் வரை விசேட நற்சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மானு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைச்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# முதலில் கொள்கை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது குறித்த சர்ச்சை மீண்டும் கிளம்பியுள்ளது. தமிழரசுக் கட்சியின் கூட்டம் வவுனியாவில் நடைபெற்றபோது, கூட்டமைப்பை உடைக்க எவரையும் அனுமதிக்க முடியாது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்ததைத் தொடர்ந்து இந்தச் சர்ச்சை மீண்டும் சூடுபிடித்துள்ளது.

கூட்டமைப்பை யார் உடைக்க முயற்சிக்கிறார்கள் என்பதை இரா. சம்பந்தன் முதலில் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுள்ள அதன் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய விடாமல் தமிழரசுக் கட்சியே தடுத்து வருவதாகவும் ஊடகங்களில் குற்றஞ்சாட்டி உள்ளார்.

வடக்குத் தேர்தலுக்கு முன்பதாக இந்த விவகாரம் இன்னும் சூடுபிடிக்கும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரங்களில் உள்ளது. கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கு முன்னர் அதனால் தமிழ் மக்களுக்கு என்ன லாபம் என்பதைத் தமிழ்க் கட்சிகள் மக்களிடம் விளக்க வேண்டும்.

ஏனெனில், இதற்கு முன்னரும் இவ்வாறான ஒரு கூட்டணி உருவாக்கப்பட்டு அது அரசியல் கட்சியாகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி ஆகியன இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்கின. பின்னர் அது தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற அரசியல் கட்சியாகியது.

மூன்று அரசியல் கட்சிகள் இணைந்து தமிழர் ஐக்கிய முன்னணி தோன்றியதன் பின்னர், இன்றுள்ள நிலைமை என்ன? இந்த முன்னணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தனித் தனிக் கட்சிகளாகச் செயற்படுகின்றன. அதேசமயத்தில் கூட்டணி இவற்றுடன் நான்காவது கட்சியாக இயங்குகின்றது.

கூட்டணி அமைக்கும் தமிழர் வரலாற்றில் இருந்து கிடைத்த பாடம் அது. இந்த நிலைமை ஏன் வந்தது என்று ஆராய்வது இந்தப் பத்தியில் சாலப் பொருத்தமன்று. ஆனால், அந்த வரலாற்றுப் பாடத்தை அடியொற்றி இன்றைய சர்ச்சையை அணுக முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தற்போது ஐந்து கட்சிகள் உள்ளன. அவற்றில் மூன்று கட்சிகள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளன. ஆனால், கூட்டமைப்புக்கென அரசியல் கட்டமைப்போ, யாப்போ, பொருளாதாரக் கட்டமைப்போ இல்லை. அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவே இப்போதைக்கு கூட்டமைப்பின் நிறைவேற்று அதிகாரம்கொண்ட சக்தி [பொலிட் பீரோ] போன்று செயற்படுகின்றது.

இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்பதே கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள 4 கட்சிகளின் நிலைப்பாடு. அதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று அவை கோருகின்றன. ஒரு புறத்தில் இது நியாயமானதாகவும் இருக்கலாம். ஆனால் அதற்கு முன்னதாக இந்தக் கட்சிகள் செய்யவேண்டிய முக்கிய பணி ஒன்றுண்டு.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தாம் எந்த வகையில் அணுகுகின்றன என்பதையும் எந்தவழியிலான தீர்வை நோக்கி நகர அவை இணங்கிக் கொள்கின்றன என்பதையும் அவை தீவிரமாக ஆராய்ந்து முடிவு செய்து மக்களிடம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பனால் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட இதற்கான முயற்சியில் தமிழ்க் கட்சிகளால் இணக்கம் ஒன்றுக்கு வர முடியவில்லை என்பதும் கவனத்துக்குரியது. எனவே தமது கொள்கை ரீதியிலான இணக்கப்பாட்டுக்கு கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் முதலில் வரவேண்டும். இல்லையேல் கூட்டமைப்பும் கூட்டணியைப் போன்றே மற்றொரு அரசியல் கட்சியாக மாறுவதுடன் நின்றுவிடும். அது ஒரு ஒன்றிணைவாகவோ, ஒற்றுமையாகவோ இருக்கப்போவதில்லை.

# யாருக்குப் பிரதமர் பதவி? தடுமாறும் ஜனாதிபதி மஹிந்த

*தமிழில் - வியெஸ்ரி*

பிரதமர் தி.மு. ஜயரத்ன அண்மைக் காலமாக நோய்வாய்ப்பட்டிருப்பதாக அடிக்கடி ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வந்தது. கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும், பின்னர் சிங்கப்பூரிலும் வைத்திய சிகிச்சை பெற்று வந்த அவர் தற்போது மேலதிக வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. அவரது உடல் நிலை திருப்திகரமாக இல்லாததால் அவரைப் பிரதமர் பதவியிலிருந்து விலகிக்கொள்ளுமாறு மகாநாயக்க தேரர் ஆலோசனை தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

அதே வேளை பிரதமர் ஜயரத்னவின் ஆரோக்கிய நிலை திருப்திகரமாக இல்லையாயின், ஜனாதிபதி எதற்காக அவரைப் பிரதமர் பதவியிலிருந்து அகற்ற முன்வரவில்லை என்ற கேள்வி பொது மக்கள் தரப்பில் நிலவி வருகின்றது.

மஹிந்தவின் இளகிய மனது, கட்சியின் சிரேஷ்ட பிரமுகரான பிரதமர் ஜயரத்னவை அப்பதவியிலிருந்து விலக்க இடமளித்திருக்காது என்ற ஒரு சிலரின் கருத்தை மறுத்து ''அப்படியானால் தமக்காக முன்னர் எதிர்க்கட்சித்தலைவராகும் வாய்ப்பையே விட்டுக்கொடுத்த ரத்னசிறி விக்கிரமநாயக்கா, பின்னர் பிரதமர் பதவியை வகித்த போது அவரைப் பிரதமர் பதவியிலிருந்து எதற்காக மஹிந்த வெளியேற்ற வேண்டும்'' என்று வாதம் செய்யும் ஒரு சிலரும் இருக்கவே செய்கின்றனர்.

உண்மையில் மஹிந்தவின் மனது இளகவில்லை; அதிகாரம் இளகி, பின்னடைவு கண்டு விடும் என்ற அச்சம் காரணமாகவே மஹிந்த, பிரதமர் பதவியிலிருந்து தி.மு ஜயரத்னவை விலக்க முன்வராதுள்ளார் என்று காரணம் கற்பிப்போரும் ஒரு சிலர் இருக்கவே செய்கின்றனர்.

உண்மையும் அது தான்; இந்த வேளையில் தி.மு ஜயரத்னவைப் பிரதமர் பதவியிலிருந்து அகற்றிவிட்டு, அந்தப் பதவிக்கு வேறொருவரை நியமித்தால், சுதந்திரக்கட்சிக்குள் மட்டுமல்ல, தமது குடும்பத்துக்குள்ளும் பிரச்சினை தலைதூக்கும் என்று ஜனாதிபதி மஹிந்த அஞ்சுகிறார்.

உண்மையில் இந்த வேளையில் புதிதாகப் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படத் தகுதியான ஒருவர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவே.

கொழும்பு டார்லி வீதியில் அமைந்திருந்த சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் சிறிய பதவியொன்றில் அமர்ந்து படிப்படியாக முன்னேறி கட்சியின் பொதுச்செயலாளராக உயர்ந்திருப்பவர் மைத்திரிபால சிறிசேன. அவருக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட்டால், சுதந்திரக்கட்சிக்குள் தமக்கென ஆதரவாளர் தரப்பொன்றை உருவாக்கிக் கொள்ளத் தக்க திறமைசாலி அவர். அவ்விதம் அவரைப் பிரமதராக்கி இல்லாத தலைவலியொன்றை ஏன் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மஹிந்த அஞ்சுகிறார். அதே வேளை மைத்திரிபால சிறிசேன மீது ராஜபக்ஷ குடும்பத்தவர் எந்த அறவுக்கு நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதும் கேள்விக்கு உரியதொன்றே. மாகாணசபை முதலமைச்சர் நியமனமே ராஜபக்ஷ குடும்பத்தவரது விருப்பின்படி தான் இடம்பெற வாய்ப்புண்டு என்பதால் பிரதமர் பதவிக்கான நியமனத்திலும் ராஜபக்ஷ குடும்பத்தவரது விருப்பு வெறுப்பு முக்கியத்துவம் மிக்கதொரு அம்சமே. அதே சமயம் மைத்திரிபால சிறிசேன பிரதமர் பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அது நிமல் ஸ்ரீபால டி சில்வாவின் அதிருப்திக்கு உள்ளாகும். ஆதலால் தம்மைப் பிரதமராக்கியதன் மூலம் சந்திரிக்கா அரசியலிருந்து ஒதுங்க நேர்ந்தது போன்று, மைத்திரிபால சிறிசேனவுக்கோ, நிமல் ஸ்ரீபாலடி சில்வாவுக்கோ பிரதமர் பதவியை வழங்கினால், சந்திரிக்காவின் நிலை தமக்கும் ஏற்படக்கூடுமென மஹிந்த அஞ்சக்கூடும்.

இலங்கையின் பிரதமர் பதவி நியமனம் என்பது எப்போதுமே கட்சிக்குள் பிரச்சினையை உருவாக்கும் ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. பிரதமர் பதவி நியமனம் தொடர்பான சிக்கலாலேயே இலங்கையில் இரு கட்சி நடைமுறை தோற்றம் கண்டது. டி.எஸ் சேனநாயக்கவுக்குப் பின்னர் தமக்குப் பிரதமர் பதவி கிட்டாததாலேயே எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அரசிலிருந்தும் ஐ.தே.கட்சியிலிருந்தும் வெளியேறி சுதந்திரக்கட்சியை உருவாக்கினார். டி.எஸ். சேனநாயக்கவின் மரணத்தின் பின்னர் டட்லி சேனாநாயக்கவுக்கும், சேர். ஜோன். கொத்தலாவலவுக்குமிடையே பிரதமர் பதவிக்கான போட்டி உருவாகியது. அந்த வகையில் ஐ.தே.கட்சி இரண்டு அணிகளாகப் பிளவுற நேர்ந்ததும் இந்தப் பிரதமர் பதவிக்கான போட்டி காரணமாகவே ஆகும்.

1978 ஆம் ஆண்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை இல்லாதொழித்து அதிகாரமற்ற பிரதமர் பதவியை அறிமுகப்படுத்திய போதிலும், ஜே.ஆர், தாம் பிரதமராக நியமித்த பிரேமதாச ஜனாதிபதியாக வழிவகுத்துக்கொடுத்ததன் காரணமாக அரசியல் அரங்கிலிருந்து ஒதுங்கிக் கொள்ள நேரிட்டது.

ஜே.ஆர், தமக்கு ஜனாதிபதியாக வழிஏற்படுத்திக் கொடுத்த மூடத்தனம் போன்று தாம் ஒரு போதும் மூடத்தனமாகநடந்து கொள்ளப் போவதில்லை என அவதானமாகச் செயற்பட்ட பிரேமதாச , டி.பி . விஜேதுங்கவைப் பிரதமராக்கிய போதிலும், பிரதமர் பதவி தமக்கே கிட்டுமென நம்பி ஏமாந்த லலித் அத்துலத்முதலியும், காமினி திஸநாயக்கவும் தாம் பிரேமதாஸவைப் பழிக்குப் பழிவாங்கும் நோக்கில் பிரேமதாஸவுக்கு எதிராகக் கொண்டு வந்த குற்றப் பிரேரணை காரணமாக ஐ.தே.கட்சி பிளவுபட நேர்ந்தது.

1993 ஆம் ஆண்டில் பிரேமதாஸவின் மரணத்தையடுத்து நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற டி.பி விஜேதுங்க, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்கி, காமினி திஸநாயக்கவை மீண்டும் ஐ.தே. கட்சியில் இணைத்துக்கொள்ள முயன்ற வேளை, காமினி திஸநாயக்கவுக்கு பிரதமர் பதவியை வழங்க டி.பி. விஜேதுங்க முயற்சிக்கின்றாரோ என ரணிலும், சிறிசேன கூரேயும் சந்தேகித்ததன் காரணமாக 1994 ஆம் ஆண்டில் ஐ. தே.கட்சி அரசு அதிகாரத்தை இழக்க நேர்ந்தது.

1994 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற சந்திரிகா தமது தாயாரான ஸ்ரீமாவைப் பிரதமராக்கியதன் மூலம் பிரதமர் பதவி காரணமாக கட்சிக்குள் பிளவுகள் தலைதூக்குவதைத் தவிர்த்துக் கொண்டார். காலப்போக்கில் ஸ்ரீமாவோவின் உடல்நலம் பாதிப்புற்றதன் காரணமாக பிரதமர் பதவிக்கான புதியதொருவரை தேடிக் கண்டுபிடித்த சந்திரிகா ரத்னசிறி விக்கிரமநாயக்கவைப் பிரதமராக நியமித்த போதிலும், பிரதமர் பதவி குறித்து அக்கறை காட்டி வந்த அனுருத்த ரத்வத்தை, ஜீ. எல். பீரிஸ், மற்றும் எஸ். பி. திஸநாயக்க போன்ற சுதந்திரக்கட்சியின் பிரபல்ய தலைவர்கள் அதனால் அதிருப்திக்கு உள்ளாகினர். 2000 ஆம் ஆண்டில் ரத்னசிறி விக்கிரமநாயக்க பிரதமராகப் பதவியேற்ற போதிலும் 2001 ஆம் ஆண்டில் சுதந்திரக்கட்சி அரசு பதவி துறக்க நேர்ந்தது.

2004 ஆம் ஆண்டிலும் ஜனாதிபதி சந்திரிகா சுதந்திரக்கட்சி அரசின் பிரதமராக ரத்னசிறி விக்கிரமநாயக்கவையே நியமிக்க விரும்பினார். அதற்காக தேசியப்பட்டியலில் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பெயரையும் சந்திரிகா உள்ளடக்கியிருந்தார். ஆனால் கடைசி வேளையில் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பெயர் தேசியப் பட்டியலிலிருந்து எவராலோ நீக்கப்பட்டதுடன் அது குறித்து காலம் தாழ்த்தியே சந்திரிகா தெரிந்து கொள்ள நேர்ந்தது . மஹிந்தராஜபக்ஷவைப் பிரதமராக்கும் நோக்குடன் மைத்திரிபால சிறிசேனவே அதனைச் செய்ததாகவும், கதிர்காமரைப் பிரதமராக்கும் நோக்குடன் மங்களசமரவீரவே அதனைச் செய்ததாகவும் அவ்வேளையில் பல ஊகக் கதைகள் உலவிய போதிலும், ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பெயர் தேசியப்பட்டியலிருந்து நீக்கப்பட்டமையால் பிரதமராகும் அதிர்ஷ்டம் மஹிந்த ராஜபக்ஷவுக்கே வாய்த்தது. கூட்டணிக்கட்சியான ஜே.வி.பி யுடன் அமைச்சுப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பிரதமர் பதவிக்கு ஒருவரை அவசரமாக நியமிக்க வேண்டிய தேவை சந்திரிக்காவுக்கு எழுந்தது. தேசியப்பட்டியல் மூலம் ரத்னசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்ற உறுப்பினராக்க இயலாது போனமையால், வேறு வழியின்றி மைத்திரிபால சிறிசேனவின் சிபார்சின் பேரில் மஹிந்த ராஜபக்ஷவையே பிரதமராக நியமிக்க வேண்டிய நிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டது.

2005ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ, ரத்னசிறி விக்கிரமநாயக்கவை பிரதமராக நியமித்தார். 2002 ஆம் ஆண்டில் எதிர்கட்சித்தலைவராக ஆவதற்குத் தமக்குக் கிட்டிய வாய்ப்பை மஹிந்த ராஜபக்ஷவுக்கு விட்டுக் கொடுத்தமைக்காக நன்றிக்கடன் செலுத்தும் விதத்திலேயே ரத்னசிறிவிக்கிரநாயக்கவை மஹிந்த பிரதமராக நியமித்தார் என்றொரு கதை அந்த வேளையில் அடிபட்டது. ஆனால் உண்மையில் தமது அரசியல் பாதுகாப்புக் குறித்த அக்கறை காரணமாகவே மஹிந்த அவ்விதம் ரத்னசிறி விக்கிரமநாயக்கவைப் பிரதமராக நியமித்திருக்கக்கூடும். ரத்னசிறி விக்கிரமநாயக்கவைப் பிரதமராக நியமிப்பதைவிட தி.மு ஜயரத்னவைப் பிரதமராக நியமிப்பதையே அந்த வேளையில் மஹிந்தராஜபக்ஷ குடும்பத்தவர்கள் அதிகம் விரும்பினர் எனவும் அந்த வேளையில் கதை அடிபட்டது . இதனாலேயே 2010 ஆம் ஆண்டில் ரத்னசிறி விக்கிரமநாயக்கவைப் பிரதமர் பதவியிலிருந்து அகற்றிவிட்டு தி.மு ஜயரத்னவைப் பிரதமராக மஹிந்த நியமித்ததாகவும் அவ்வேளையில் கதை அடிபட்டது. எது எப்படியான போதிலும் இவ்விருவரும் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் என்பதால் அதனால் கட்சிக்குள் எவ்வித பிரச்சினையும் தலையெடுக்கவில்லை.

(25 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு எப்போது மீள் எழுகை கொள்ளும்...?

■ வந்தியத்தேவர்

நயினாதீவு நான்கு கிலோ மீற்றர் சுற்றளவைக்கொண்ட சிறிய தீவாக இருந்தாலும் வரலாற்றுச் சிறப்புக் கொண்ட ஒரு தீவாகும். சுமார் 3000 மக்கள் இங்கு வாழ்கின்றனர். இதை விட தினசரி சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமானவர்கள் இந்தத் தீவுக்கு வந்து செல்கிறார்கள். இவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாவதாகவும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சம்பந்தப் பட்ட திணைக்களங்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம் கூறுகின்றது. நயினாதீவில் கடலரிப்புத் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் நாளா பக்கமும் கடல் நீர் உட்புகுவதாகவும் ஒவ்வொரு பகுதியின் ஊடாகவும் சுமார் இருபது அடி தூரம் வரை நீர் உட்புகுவதால் உவர்த் தன்மை அதிகரித்துக் காணப்படுவதாகவும் கூறும் மேற்படி சங்கத்தின் தலைவர் ப.க. பரமலிங்கம் கரையோரப் பகுதிகளில் தடுப்பு மதில்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் இல்லையேல் மிகக் குறுகிய காலத்தில் தீவு கடலுக்குள் மூழ்கி விடும் அபாயம் ஏற்படும் எனவும் தெரிவிக்கின்றார்.

இங்கு மக்கள் மாரி காலத்தில் சிறிய அளவிலான உணவுப் பொருள்கள் உற்பத்தியில் ஈடுபடுவதுண்டு. மின்சார வசதியை ஏற்படுத்துவதற்காக பிரதான, குறுக்கு வீதிகளில் நின்ற நிழல் தரும் மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளதால் மாரி காலங்களில் மரம் நடுகை ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியம். எனினும் வெட்டப்பட்ட மரங்களுக்குப் பதிலாக மீள் நடுகைகள் எதுவும் இடம்பெறுவது இல்லை எனவும் கூறப்படுகின்றது. நயினாதீவில் உள்ள வீடுகளிலும் கூட குடியிருப்பாளர்கள் நிழல்தரு மரங்களை வளர்ப்பதாக இல்லை. ஏற்கனவே மழை வீழ்ச்சி குறைந்த பகுதியில் மர நடுகைகளும்இல்லாத நிலையில் மக்கள் பெரும் வறட்சிக்கு முகம் கொடுக்கின்றார்கள். பயனுள்ள நிழல்தரு மரங்களை நடுகை செய்வதுடன் பனை, தென்னை நடுகைகளை ஊக்குவிக்கும். மர நடுகை இயக்கம் ஆரம்பிக்க விவசாய கமநல சேவை உள்ளூராட்சி மன்றங்கள் ஒருங்கிணைந்து செயலாற்றவும் நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளவும் முன்வருவது அவசியமாகும்.

தங்கி நின்று தமது கடமைகளைக் கவனிக்கக் கூடியதாக அரச அதிகாரிகளுக்கு ஒரு இடம் இல்லை. நயினாதீவு வங்களாவடியில் இருந்த வாடி வீடு நீண்ட காலமாக அழிவடைந்துள்ளது. அங்கு ஒரு புதிய வாடி வீடு அவசியம். வங்களாவடிப் பகுதியில் இருந்த துறைமுகம் நயினாதீவின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. அதுவும் நீண்ட காலமாக பயனற்றுக் கிடக்கிறது. குடியிருப்புக்கள் அதிகம் உள்ள பகுதியில் இந்தத் துறைமுகம் அக்காலத்தில் முக்கிய போக்குவரத்து ஏற்றுமதி இறக்குமதிகளுக்கு கைகொடுத்து வந்தது. தற்போது மூடப்பட்டுக் கிடக்கும் இந்தத் துறைமுகம் புனரமைக்கப்பட வேண்டும்.இதன் மூலம் இலகுவான பயணம் ஏற்படவும் வாய்ப்புக்கள் உள்ளது.

வீதிகளும் உரிய முறையில் திருத்தம் செய்யப்பட்டதாக இல்லை. பிரதான வீதிகளும் இரண்டாம் மூன்றாம் குறுக்கு வீதிகளும் சீர் செய்யப்படாததால் வாகனப் போக்குவரத்தும் பாதசாரிகளின் நடமாட்டமும் சிரமத்தினூடே இடம் பெறுகின்றது. பிரதான வீதி அகலப்படுத்தப்பட வேண்டும். ஏனைய வீதிகள் தாரிடப்பட்டுப் பூரணப்படுத்தல் வேண்டும். வீதிகள் ஒழுங்கற்றுக் கிடப்பதால் இங்குள்ள ஒரேயொரு பஸ் வண்டியும் அடிக்கடி ஸ்தம்பிதமடைகின்றது. பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகளைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடுகள் தேவை எனவும் பரமலிங்கம் தெரிவித்தார்.

இப்போது நிகழும் கடும் வறட்சியினால் பொதுவாக எல்லா இடங்களிலுமே நீர் பற்றாக்குறை உண்டு. நயினாதீவில் குடிதண்ணீர்ப் பிரச்சினை மாரி காலம் தவிர்ந்த ஏனைய காலங்களில் நிறையவே காணப்படுகின்றது. இப்போது குழாய் நீர் விநியோகச் சேவை முன்னர் போல் பெரிய அளவில் இல்லை. இரணைமடு குடிதண்ணீர் திட்டத்தில் முன்னுரிமை வழங்குவதுடன் சாட்டி, அல்லைப்பிட்டி பகுதிகளில் இருந்து குடிநீர் வழங்க ஆவன செய்தல் வேண்டும் எனவும் சங்கம் கருதுகின்றது.

நயினாதீவு உப அலுவலகம், தபாலகங்களுக்கான கட்டடங்கள் தேவை. தற்போது இவைகள் பழைய கட்டடத்திலேயே இயங்குகின்றன. புதிய நவீன வசதிகள் கொண்ட கட்டடங்கள் அமைவதன் மூலம் ஆயுள்வேத நிலையம் , பொதுநூலகம் போன்றவற்றில் மக்களுக்கான வசதிகள் நிறையவே கிடைக்கும் கட்டடங்கள் நயினாதீவின் வரலாற்றைச் சித்திரிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் என்பதும் மக்களது ஆர்வமாக உள்ளது.

கல்வியைப் பொறுத்தவரை கடந்தகாலங்கள் உச்சத்திலே. இருந்துள்ளது. பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கிய மனிதர் வாழ்ந்த இடம் இது. இன்று நிலைமை மாறிவிட்டதாகச் சொல்லப்படுகின்றது. மகாவித்தியாலயம், கனிஷ்ட மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆங்கிலம், விஞ்ஞானம் கணித பாடங்களைக் கற்பிக்க நீண்டகாலமாக தராதரம் மிக்க ஆசிரியர்கள் இல்லை என்பது ஒரு குறையாகும். கணினி கற்கை நெறிக்கான ஆசிரியர்கள், இடவசதிகள் கிடையாது. ஆசிரியர் பற்றாக்குறையை முற்றுமுழுதாக நீக்குவதுடன் மிகவும் பழமை வாய்ந்து இடிந்து விழும் நிலையில் உள்ள பாடசாலைக் கட்டடங்களைத் திருத்துவதற்கானஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

படகுச் சேவைகள் நன்றாக இருப்பினும் படகுகள் மக்கள் பயணத்திற்கு உகந்ததாக இல்லை என்பதே பொதுவான கருத்தாகும். மிகவும் சிறிய படகுகளில் நெருக்கடி மிக்க பயணத்தை, தோல் வியாதிகளை ஏற்படுத்தக் கூடியதான அழுக்கு நிறைந்த அங்கிகளை அணிந்து பயணிக்க வேண்டியுள்ளது.பாதுகாப்பு அங்கி என்ற பெயரில் வலுக்கட்டாயமாக இதை அணிய வேண்டியுள்ளது. பயணிகள் சுத்தமான உயிர்காப்பு அங்கிகளை பயன்படுத்துவதற்கான ஒழுங்குகள் தேவை.

தென்பகுதியில் இருந்து தினமும் நயினாதீவுக்கு வந்து சேரும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கிய பின்னரே அம்பாள் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்கள் படகுக்கு அனுமதிக்கப்படுவதாகவும், உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் இவர்களை உல்லாசப் பயணிகளுடன் நீண்ட நேரம் வரிசையில் காக்க வைப்பது, அம்பாள் ஆலயம் செல்ல வேண்டிய அடியார்கள் தமது கடமைகளை நிறைவேற்ற முடியாது செய்துவிடும் என்றும் அடியார்களிடையே விமர்சனங்கள் எழுகின்றது.

நயினாதீவில் பெயருக்கே கூட்டுறவுக் கடை உள்ளது. இந்தக் கடையில் அத்தியாவசிய பாவனைப் பொருள்கள் கிடையாது. கடையில் உள்ள பொருள்களின் பெறுமதி 5 ஆயிரம் ரூபாக்கும் உட்பட்டதே. இதனைச் சீர் செய்ய வேண்டும். அல்லது மூடிவிட வேண்டும். இல்லாவிடில் நயினாதீவுக்கென தனியான பல.நோ.கூ. சங்கத்தை அமைக்க வேண்டும். புங்குடுதீவு -நயினாதீவு கூட்டுறவுச் சங்கத்தினால் நயினாதீவு மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை என்பது எல்லோரினதும் எண்ணமாக உள்ளது. நயினாதீவு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லை. மீள் நியமன வைத்தியர்கள் அல்லது தமது வைத்தியப் படிப்பை பூரணப்படுத்தாதவர்களை நியமிப்பது வழமை எனக் கூறும் மக்கள் இங்குள்ள ஒரேயொரு வைத்தியசாலையையும் ஒரேயொரு வைத்தியரையுமே நம்பியிருக்க வேண்டியுள்ளனர். வைத்தியசாலையிலே வைத்தியர் இல்லை, மருந்து வகைகள் இல்லை, குடிதண்ணீர் இல்லை, போக்குவரத்துக்கு உரிய ஆசன வசதிகள் இல்லை, நோயாளிகள் இடை நடுவில் மரணத்தைத் தழுவுகின்றார்கள். போதிய கவனிப்பு இல்லை எனவும் தெரிவிக்கின்றனர்

இங்கே மின்சார விநியோகம் தற்போது ஓரளவு சீர் செய்யப்பட்டுள்ளது. எனினும் பெரும்பாலான பகுதிகளுக்கு மின் விநியோகம் இல்லை. மின் விநியோகம் வழங்கக் கேட்டால் பணம் கேட்கப்படுகின்றது. இதுவரை ரூபா இருபது லட்சத்திற்கும் அதிமாக மக்களிடம் வசூல் செய்யப்பட்ட பணத்தில் இருந்தே மின்சாரம் வழங்கப்படுகின்றது. வீதி வெளிச்சத்திற்காக மக்கள் வழங்கிய பணத்தில் இருந்து 85 மின் விளக்குகள் பொருத்தப்பட்ட போதும் இவற்றில் எண்பது மின் விளக்குகள் இப்போது இல்லை. மீதி ஐந்து விளக்குகள் மட்டுமே இடைக்கிடை வெளிச்சம் தருகின்றது. வேலணைப் பிரதேச சபை வீதிவிளக்குகளைப் பொருத்தி மக்களுக்கு உதவ முன் வர வேண்டும் .

இவ்வாறான கோரிக்கைகள், வேண்டுகோள்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம் சமர்ப்பித்துள்ளது. சுமார் 15 கோரிக்கைகளை அது முன்வைத்துள்ள நிலையில் எத்தனை கோரிக்கைகள் நிறைவேற்றப்படவுள்ளது என்பதே மக்களின் பார்வையில் உள்ளது.


# கர்ப்பப்பைக் கட்டிகள் ஆபத்தற்றவை

■ மருத்துவர் ச.முருகானந்தன்

பெண்களின் இனப் பெருக்க உள் உறுப்பை கர்ப்ப பை என அழைக்கின்றோம். இது பெண்களின் வயிற்றுள் கீழ்ப்புறமாக உள்ளது. யோனிக் குழாய் ஊடாக பெண் குறி மூலமே வெளித் தொடர்புடையது. கர்ப்பப் பையின் மேற்புறத்தில் FOLLOPIAN குழாய்கள் உள்ளன. இவற்றின் இரண்டு புறமும் சூலகம் அமைந்துள்ளது. கர்ப்பையின் கீழ்ப்புறமாக ஒடுங்கிய பகுதியாக CERVIX என அழைக்கப்படுகிறது. இது யோனிக் குழாயுடன் தொடர்புடையது. இவை அனைத்துமே அடிவயிற்றுப் பகுதியில் உட்புறமாக அமைந்துள்ளன.

பெண்களில் மாதாமாதம் சூலகத்திலிருந்து வெளிவரும் முட்டை (கரு)பலோப்பியன் குழாய் ஊடாகவே கர்ப்பப்பையின் பிரதான பகுதியான Funduo தரிக்காத பட்சத்தில் ஏற்படுகிறது. இதன் போது வெளிவரும் குருதி கர்ப்பப்பையுள் இருந்தே வருகிறது. கருமுட்டைகள் கருக்கட்டும் பட்சத்தில் அது கருப்பைச் சுவரில் பதிந்து வளர்ச்சியடைகிறது. 40 வாரங்களில் குழந்தை பிரசவமாகின்றது.

பெண்களின் கர்ப்பப்பை ஆரோக்கிமாக இருந்தால் கருத்தரித்தலும், பிரசவமும் சுகமாக இடம்பெறும். பெண்களின் கருப்பையில் சில நோய்கள் ஏற்படுவதுண்டு. filraed கட்டிகள், சுவர் இளையங்கள் வெளியே இருக்கும் ENDOMETRIOSIS சூலக நீர்கட்டிகள் கருப்பை வாசல் புற்றுநோய் , கருப்பை இறக்கம், கருப்பையிலிருந்து அதிக குருதி வெளியேறுதல் முதலானவை முக்கியமானவை. சிலருக்கு பிறப்பிலேயே கருப்பை அமைப்பில் குறைபாடு இருக்கலாம்.



கருப்பைக் கட்டிகள் பற்றி பார்ப்போம். இளம் பெண்களிலும், நடுவயதுப் பெண்களிலும் கர்ப்பப்பைக் கட்டிகள் ஏற்படலாம். இன்று கணிசமானோரில் இக்கட்டிகள் ஏற்படுகின்றன. இவை கருப்பையின் உட்புறமாகவும், வெளிப்புறமாகவும் ஏற்படலாம். ஒருவரில் ஓரிரு கட்டிகளிலிருந்து பல கட்டிகள் வரைஏற்படலாம்.இவை அநேகமாக ஒரு போளை (மாபிள்) அளவு சிறியவை. எனினும் சிலரில் இவை வளர்ச்சியடைந்து ஒரு கால்பந்து அளவுக்கு பெரிதாக வரலாம். பெரிய கட்டிகள் இடையூறாக இருக்கும்.

கர்ப்பப்பைக் கட்டிகள் சிறியதாகவோ அல்லது, குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் போதோ எதுவித அறிகுறிகளும் தெரிவதில்லை. எனவே பலர் தமக்கு கர்ப்பப்பை கட்டிகள் இருப்பதை அறியமாட்டார்கள். இந்தக்கட்டிகள் ஆபத்தற்றவை என்பதால் இதைப் பற்றி பொருட்படுத்தத் தேவையில்லை. எனினும் கருத்தரிப்பில் தாமதம் ஏற்படுபவர்கள், கருச் சிதைவு ஏற்படுபவர்கள் வயிறு பெருத்துக் கொண்டு போகிறவர்கள் கர்ப்பப்பையை SCAN சோதனை செய்வதன் மூலம் கட்டிகள் இருக்கின்றனவா என்று தெரிந்து கொண்டு அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும். சிறிய கட்டிகளுக்கு சத்திர சிகிச்சை தேவையில்லை.

கட்டிகள், கருப்பையின் வெளிப்புறமாக இருப்பதில் ஆபத்தில்லை. கருப்பையினுள்ளே இருக்கும் போதே சூலக ஓமோன் இதன் வளர்ச்சியைத் துரிதப் படுத்துகிறது.

மாதவிலக்கு நின்றவர்களில் இந்த ஓமோன் சுரத்தல் குறைவடைந்து விடுவதால் கட்டிகள் தோன்றமாட்டாது. அத்துடன் இருக்கும் கட்டிகளும் சிறுத்து மறைந்து போகும்.

பெரிய கட்டிகளாயின் சத்திர சிகிச்சை மூலம் அகற்றலாம். இதற்கு மருந்துகளும் உண்டு. எனினும் பக்க விளைவுகள் அதிகம். இளம் பெண்களில் கட்டிகளை மட்டும் அகற்றலாம். குழந்தைகள் உள்ள நடுத்தர வயதுடையவர்களில் கர்ப்பப்பையை முழுதாக அகற்றலாம்.

கர்ப்பப்பை கட்டிகளுடையவர்கள் அஞ்சத் தேவையில்லை. அவசியம் எனின் சத்திரசிகிச்சை மூலம் கட்டிகளை அகற்றலாம். கர்ப்பப் பை கட்டிகள் புற்று நோயாக மாறுவது அபூர்வம். எனவே இது பற்றி அஞ்சத் தேவையில்லை. எனினும் சூலகத்தில் தோன்றும் கட்டிகள் ஆபத்தானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூவி விற்கும் குருமார்கள்

காலை நேரத்தில் சில தனியார் தொலைக்காட்சிகளைப் பார்த்தால் நெருடலாக இருக்கிறது. எப்படியாவது தங்கள் கடவுள்களை விளம்பரப்படுத்தி, கேட்பவர் மனம் கரையும் வகையில் பேசிக் கொண்டே இருப்பார்கள் சிலர்.

சோப்பு நிறுவனங்கள், பற்பசைக்காரர்கள் தங்கள் உற்பத்திச் சரக்குகளை மக்கள் மீது சுமத்தும் விளம்பர வெறிபோலவே சமயவியாபாரிகள் பலர், தங்கள் கடவுள்களை விளம்பரப்படுத்தும் பாங்கு, சொல்லிக்கொள்ளும் வகையில் இல்லை. விளம்பரப்படுத்தி விற்பனை செய்ய கடவுள் என்ன தனியார் நிறுவனத்தின் தயாரிப்பா?

கடவுள் என்பது ஓர் அனுபவம். மனம் அறிவு ஆகியவை கடந்த பெருநிலையில், எமது ஆன்மாக்குதிரையின் பேரண்டப் பாய்ச்சலில் எமக்கு நிகழும் விவரிக்க முடியாத, விளங்கமுடியாத ஓர் உணர்வு. ஒரு விளைவு. அதை விளங்கிக் கொள்ளவும் விவரிக்கவும் முடியாதபோது, அது எவ்வாறு விற்பனைக்கு வர முடியும்? சிந்தைக்கு உரியதைச் சந்தைக்கு உரியதாக்கும் சமயவியாபாரிகளின் கேலிக்கூத்தே பல தொலைக்காட்சிகளின் காலை நேர ஒளிபரப்பு!

தேடுதல் உள்ளவர்களே இறை அனுபவம் பெறமுடியும். காந்தியடிகள் உண்மையைத் தேடினார். வாழ்வு முழுவதும் தேடினார். எனவே தான், அவரது சுயசரிதை சத்தியசோதனை எனப்பட்டது!

விவேகானந்தர் கடவுளைத் தேடினார். கடவுளைப் பற்றிப் பேசும் ஒவ்வொருவரிடமும், "நீர் கடவுளைக் கண்டதுண்டா?" என்று நெற்றியடியாகக் கேள்வியை வீசினார். மழுப்பல் பதில்களை ஒரு யானையின் ஆவேசத்தோடு மிதித்துத் தள்ளினார்.

பலநாள் பட்டினி கிடந்து ஊண் - உறக்கமின்றி உள்ளே நுழைந்து நுழைந்து, 'நான்யார்...நான்யார்?' என்று தன்னையே தேடினார் பகவான் ரமணர். தேடுபவருக்கே எதுவும் கிடைக்கும். பொய்ப்பொருள் வேண்டுமானால், விற்பனைக்கு வந்து பிறர் தலையில் கட்டப்படும். மெய்ப்பொருள் தேடப்பட வேண்டியது. அது விற்பனைக்கும், விளம்பரத்துக்கும் உரியது ஆகாதே!

பழக்க வழக்கங்களால், சமூகச் சூழலால் ஒரு முஸ்லிமாக இருந்தவர் கபீர். ஆனால் அவர் ஆனந்த லயத்தைத் தேடியபோது ராமநாமத்தில் இருப்பதாக அவருக்குப் புலப்பட்டது. எனவே, அந்த ராம நாமத்தை தமக்கு உபதேசிக்க ஒரு குருவைத் தேடினார்.

இன்றைக்குப் பல குருமார்கள் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் விளம்பரம் செய்து மந்திரங்களையும் யந்திரங்களையும் கூவிக் கூவி விற்கிறார்கள். ஊர் ஊராக 'காம்' நடத்தி சீடர் கூட்டத்துக்கு ஆள் பிடிக்கிறார்கள்.


கபீர் ராம நாம உபதேசத்துக்கு ஒரு குருவைத் தேடிய போது ஒருவர்கூட அவருக்குக் கிடைக்கவில்லை. 'ராம தரிசன அனுபவம் பெற்ற இராமானந்தரிடம் உபதேசம் பெறவேண்டும்' என்ற கபீரின் விருப்பம், இராமானந்தரால் மறுக்கப்பட்டது. கபீர் வேற்று மதத்தவர் என்று அந்த மடத்திலிருந்து விரட்டப்பட்டார்.

நாள்தோறும் இராமானந்தரின் காலை வழிபாட்டை நேரடியாகவே தோன்றி இராம-லட்சுமணர் ஏற்பது வழக்கம். ஆனால், கபீர் விரட்டப்பட்ட மறுநாள் காலையில் இராமானந்தரின் பூஜையை ஏற்க இராம-லட்சுமணர் வரவில்லை. இராமானந்தர் துயரப்பட்டார். வெளியில் வந்து பார்த்தார்; தேடினார்.

"அண்ணா... இராமானந்தரின் பூஜைக்கு போகவேண்டாமா?" என்று மடத்தின் வாசலில் நின்று லட்சுமணன் கேட்பது இராமானந்தரின் காதில் விழுந்தது. "உத்தம பாகவதன் கபீர் வந்தபோது அவனை விரட்டிவிட்டார்கள். பாகவத அபசாரம் செய்யப்பட்ட இடத்தில் எமக்கு என்ன வேலை? வா, நாம் போகலாம்!" என்று ராமர் வருத்தமாகக் கூறிய பதிலும் அவருக்குக் கேட்டது. அத்துடன் பளீர் என்று இராம- லட்சுமணர் அங்கிருந்து மறையவும் செய்தார்கள்.

கபீரின் மந்திர உபதேசத்துக்கு ராமபிரானே சிபாரிசு. அப்படியானால், கபீரின் தேடுதல் எப்படிப்பட்டதாக இருந்திருக்க வேண்டும்! இராமானந்தர் பதறியபடி நதிக்கரையில் இருக்கும் கபீரைத் தேடிக் கொண்டு ஓடோடி வந்தார். பதற்றத்துடன் குரு ஓடி வருவதைக் கவனித்து விட்டுப் படியோடு படியாக ஒண்டிப் படுத்துக் கொண்டார் கபீர்.

புலராத காலைக் கருக்கிருட்டில் படியென நினைத்துக் கபீரை மிதித்த இராமானந்தர், அது மனிதர் என அறிந்து "ராம்.... ராம்!" என்று அலறினார். "ஆஹா.... குரு என்னைக் காலால் தீண்டி, ராம நாம உபதேசமும் செய்து திருவடி தீட்சை தந்தார்!" என்று கண்ணீர் விட்டார் கபீர். ராம நாம ஜபத்தால் சித்தி அடைந்தார் அவர்.



சமய உலகில் பக்தனிடம் இத்தகைய தேடுதலே அவசியம்! குருமார்களின் கூவி விற்கும் வேலை சகிக்க முடியாத ஒன்று.

சுகி.சிவம்

# ஈசானத்தில் கோயில் கொண்டமைந்த நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர்



(கடந்தவாரத் தொடர்ச்சி...)

வலிகாமம் கிழக்குப் பிரிவில் அமைந்துள்ள புராதனமான விநாயகர் ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலயம் அற்புதங்கள் நிறைந்து, அடியவர்கள் தமது குறைகளைப் போக்கி விரும்பியவற்றை அடைவதற்கு, குறித்தபடி நேர்த்தி வைத்து வழிபட்டு விரும்பியதை விரும்பியவாறு அடைகின்ற அருள் நிறைந்த ஆலயமாகும்.

வன்னியில் இருந்து குப்பிளானில் பிரதிஷ்டை செய்வதற்கு எடுத்து வந்த விநாயகப் பெருமான் எவ்வாறு நீர்வேலி மூத்தநயினார் வளவில் தான் விரும்பியபடி ஈசானத்தில் கோயில் கொண்டாரோ அதேபோன்று தன்னை நம்பி நேர்த்தி வைப்பவர்களின் விருப்பங்களையும் நல்லருள் பாலித்து நிறைவு செய்பவர் என்று நம்பப்படுகின்றது. இந்த நம்பிக்கை அன்று தொடக்கம் இன்று வரை நின்று நிலைத்துள்ளது. அந்த வகையில் தற்பொழுது புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளும், உள்நாட்டில் வாழ்வோரும் தமது நேர்த்திகளை நிறைவு செய்து வருகின்றனர்.

"தமது குறைபாட்டை மற்றும் விருப்பத்தை விநாயகருக்கு விண்ணப்பம் செய்து 45 தினங்கள் தொடர்ந்து வழிபட்டு இறுதிநாள் மோதக பூசை செய்வோர் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், அந்த வகையில் வழிபாடு செய்வோர் இறுதிநாள் தமது விண்ணப்பம் நிறைவேறியதாகக் கூறி மிக்க மகிழ்ச்சியுடன் செல்வதாகவும் தேவஸ்தானத்தின் மூத்த பூசகர் சந்திர சேகரக் குருக்கள் (வயது 82) தெரிவித்தார்.

ஆரம்பத்தில் விநாயகர் சந்நிதானம் மூஷிகம், பலிபீடம், சிறிய உற்சவ விநாயகர் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறிய கோயிலாக அமைந்திருந்தாலும், ஆகமத்தில் கூறியபடி நித்திய பூஜை விதியில் விதித்த பிரகாரம் நித்திய, நைமித்திய கிரியைகள் நடைபெற்று வந்தன. 1918 ஆம் ஆண்டளவில் பழைய சுண்ணாம்பு மற்றும் செங்கல் கொண்ட கட்டடம் புனரமைப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு, பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பொதுமக்களின் ஒத்துழைப்பு மற்றும் உதவியுடன் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மஹா மண்டபம், ஸ்நபன மண்டபம் ஆகியன வெள்ளைக்கல் திருப்பணியாக செய்யப்பட்டு கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் செய்து மஹோற்சவம் மாதச் சதுர்த்தி உற்சவங்கள் முதலியன சிறப்பாக நடைபெற்றன.

ஆலயத்தில் இருந்த திருத்தேர் பழுதடைந்தமையினால் 1958 ஆம் ஆண்டில் புதிய சித்திரத்தேர் ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அடியவர்கள் மனதில் உதயமானது. புதிய சித்திரத்தேருக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில், 1959ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தேர்திருப்பணிச்சபை ஒன்று உருவாக்கப்பட்டது. புதிய சித்திரத் தேருக்கான திருப்பணி வேலையை வடமாகாண அரச அதிபராக இருந்த ம.ஸ்ரீகாந்தா ஆரம்பித்து வைத்தார். சித்திரத்தேர் திருப்பணிகள் நிறைவடைந்து புதிய தேரில் விநாயகர் ஆரோகணித்த பெருந்திருவிழாவில் தென்னிந்திய நாதஸ்வர மேதை எம்.எஸ்.பொன்னுத்தாய் நாதகான மழை பொழிந்தார்.

தேர்முட்டிக்குப் பக்கத்தில் மூல விநாயகருக்கு கோயில் அமைத்து தேர்முட்டி விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். தேர்முட்டிக்கு அருகில் தேர்முட்டி காவல் தெய்வமாக வைரவக் கடவுளுக்கு கோயில் அமைக்கும் மரபு பெருவழக்காக இருக்கும் போது, தேர்முட்டி காவல் தெய்வமாக மூலவிநாயகருக்கு (தேர்முட்டி விநாயகர்) கோயில் அமைந்திருப்பது தனிப்பட்ட சிறப்பாகும்.

தேர்முட்டிக்குப் பக்கத்தில் மூல விநாயகருக்கு கோயில் அமைத்து தேர்முட்டி விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். தேர்முட்டிக்கு அருகில் தேர்முட்டி காவல் தெய்வமாக வைரவக் கடவுளுக்கு கோயில் அமைக்கும் மரபு பெருவழக்காக இருக்கும் போது தேர்முட்டி காவல் தெய்வமாக மூலவிநாயகருக்கு (தேர்முட்டி விநாயகர்) கோயில் அமைந்திருப்பது தனிப்பட்ட சிறப்பாகும். தேர்முட்டி விநாயகருக்கு தினசரி ஒரு காலப்பூசை நடைபெறும்.

மகோற்சவ காலத்தில் விசேட சுபமுகூர்த்த வேளையில் தேரடி விநாயகருக்கு விசேட அபிஷேகம் பூசைகள் செய்து உற்சவ விநாயகர் எழுந்தருளி காட்சியளிக்க "தேர்முட்டுப் பொறித்தல்" வைபவம் நடைபெறும் இந்த நடைமுறையும் தனித்துவமான சிறப்புக் கொண்டதாகும்.

ஆலயத்தின் ஈசான மூலையில் திருக்குளமும் விசேட சிற்ப மரபு அலங்காரம் கொண்ட தீர்த்த மண்டபமும் அமைந்திருப்பது நீர்வேலி வாய்க்காற்றரவை மூத்த விநாயகர் ஆலயத்தின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. ஆலயத்தின் தலவிருட்சமாக இலுப்பை மரம் உள்ளது. உட்பிரகாரம் மூடுமண்டபமாக அமைந்திருப்பதோடு பரிவார மூர்த்தங்களாக வல்லி தேவசேனா சமேத சுப்பிரமணியசுவாமி விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதர் உள்ளிட்ட தெய்வங்கள் எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளன. நவக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

நீர்வேலி மேதர்கேணி பகுதியில் அமைந்திருந்த புராதன சிவன் கோயில் ஒல்லாந்தரால் இடித்தழிக்கப்பட்ட வேளையில் அடியவர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்த விக்கிரகம், பிற்காலத்தில் கண்டெடுக்கப்பட்டு ஆலயத்தின் உட்பிரகாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதுவும் தேவஸ்தானத்துக்கு பெருமை சேர்க்கிறது.

1971 ஆம் ஆண்டு, 1983 ஆம் ஆண்டு , 1994, 2008 ஆம் ஆண்டுகளில் ஆலய புனருத்தான திருப்பணி வேலைகளை அடுத்து மகா கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் என்பன சிறப்பான முறையில் நடைபெற்றன. "ஆலயத் திருப்பணி வேலைகள் தொடர்பான நிதிநிலை அறிக்கை உரிய முறையில் கணக்காய்வுக்கு உள்ளாக்கப்பட்டு உரிய முறையில் அடியவர்கள் மற்றும் பொதுமக்களின் பார்வைக்கு பகிரங்கமாக உட்படுத்தப்பட்டு வருகின்றது. ஆலயத்தின் பரம்பரை உரிமையாளர் ஒருவரும் பொதுமக்கள் சார்பில் ஒருவரும் இணைந்த கூட்டு வங்கிக் கணக்கின் மூலம் ஆலயத்திருப்பணி நிதி கையாளப்பட்டு வருகிறது. ஆலயத்திற்கான கோபுரத்திருத்தப்பணிக்கு விநாயகப் பெருமான் அருள்பாலித்திருப்பதால் ஏழு வாசல் கொண்ட உயரமான கோபுரம் அமைப்பிற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக" தேவஸ்தானத்தின் மூத்த பூசகர் சந்திரசேகரக் குருக்கள் தெரிவித்தார்.

ஆடிமாதம் பௌர்ணமியை தீர்த்தோற்சவமாகக் கொண்டு 12 தினங்கள் வருடாந்த பெருந்திருவிழாவும் நடைபெறுகின்றன. அத்துடன் சதுர்த்தி, ஐப்பசி வெள்ளி, ஆடிப்பூரம், நவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை, கஜமுகன் போர், தைப்பூசம் உள்ளிட்ட விசேட உற்சவங்கள் நடைபெறுகின்றன. விசேட உற்சவ காலங்களில் விநாயகப் பெருமான் திருவீதி உலாவந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

ஆலயத்தின் பெருந்திருவிழா மற்றும் விசேட உற்சவ காலங்களில் கூட்டுப்பிரார்த்தனை பஜனை நடைபெறுவதுண்டு. கடந்த 50 வருடங்களுக்கு மேலாக கூட்டுப்பிரார்த்தனை பஜனை நடைபெற்று வருகின்றது. இதில் வயது வேறுபாடின்றி மாணவர்கள் உட்பட அனைவரும் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டு பயன் பெறுகின்றனர். ★

ஞானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிழக்கு மாகாண விவசாய, மீன்பிடி, உல்லாச பயணம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள ஹாபஸ் நசீர் அஹமட் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

## மாடுகள் கடத்திய ஐந்து பேர் கைது

இரத்தினபுரி,செப்.28

இம்சைப்படுத்தும் வகையில் 22 மாடுகளை ஏற்றிச் சென்ற ஐந்து சந்தேகநபர்கள் கஹவத்தை - எல்லேவத்தை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படை உடவளவ முகாம் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களால் கொண்டு செல்லப்பட்ட மாடுகளின் பெறுமதி 7 லட்சம் ரூபா என்று தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்கென கஹவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

## மட்டு.மாவட்டத்தில் சோளம் அறுவடை



மட்டக்களப்பு,செப்.28

மட்டக்களப்பு மாவட்டத்தின் உப உணவுப் பயிர்ச் செய்கையான சோளம் செய்கை இந்தமுறை 1000 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய திணைக்கள உதவிப் பணிப்பாளர் இரா.ஹரிகரன் தெரிவித்தார்.

செய்கை பண்ணப்பட்ட சோளத்தின் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமாக வவுணதீவு, வெல்லாவெளி, செங்கலடி, வாகரை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிக இடங்களில் சோளம் செய்கை பண்ணப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கிடைத்த சந்தர்ப்பத்தை கைநழுவ விட்டுவிட்டோம்

### கிழக்கில் வெற்றிபெற்ற கூட்டமைப்பு உறுப்பினர் கலையரசன்

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிப்பு வீதத்தை அதிகரித்து இருந்திருந்தால் அதிகப்படியான ஆசனங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்று ஆட்சியமைத்திருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் கைநழுவ விட்டுவிட்டோம் என்று கிழக்கு மாகாண சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்திலிருந்து தெரிவாகிய உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்

மாகாணசபை உறுப்பினராகத் தெரிவான பின்னர் வேப்பையடி மக்களைச் சந்தித்து அவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனது அரசியல் பயணம் அற்பசொற்ப சலுகைக்கோ அல்லது பணத்திற்கோ, பொருள்களுக்கோ அல்ல. தமிழினத்தின் உரிமையை வென்றெடுக்க உணர்வுபூர்வமாக வாக்களித்த மக்களுக்காகவே எனது அரசியல் பயணம் தொடருமே தவிர மக்களின் ஆணையை மீறி - அச்சுறுத்தல்களுக்குப் பயந்து - சலுகைகளுக்கு அடிபணிந்து எதுவும் செய்யமாட்டேன்.

நாட்டில் ஏற்பட்ட போரின் மூலம் உயர் அதிகாரிகள் பலரையும், புத்திஜீவிகளையும் இன்னும் பலவற்றை இழந்து தவித்துக் கொண்டிருந்த எம்மத்தியில் இந்தக் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் அரசால் திட்டமிட்டுத் திணிக்கப்பட்டது. இதில் கட்டாயம் போட்டியிட வேண்டிய நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் போட்டியிட்டோம்.

இதில் கிழக்கு மாகாண சபையை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான கூட்டமைப்பு கைப்பற்றவேண்டும் என்ற நிலையில் எமது பிரசாரம் இருந்தது. ஆனால், வாக்களிப்பு வீதம் குறைவாக இடம் பெற்றமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவம் குறைவடைந்திருக்கின்றது- என்றார். (ச)

## 'திவிநெகும' சட்ட வரைபை மு.கா. எதிர்க்க வேண்டும்

### மாகாண சபையில் ஆதரவாக வாக்களித்தால் சிறுபான்மையினருக்கு அது அநீதி என்கிறார் ஹசன் அலி

மட்டக்களப்பு,செப்.28

13ஆவது அரசியல் திருத்தச் சட்டமூலத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கு மாகாணசபையில் 'திவிநெகும' சட்ட வரைபை எதிர்த்து வாக்களிக்கவேண்டும். இவ்வாறு இல்லாமல் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தால் சிறுபான்மையினருக்குச்செய்யும் அநீதியான செயலாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மாந்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் எம்ஹஸன் அலி தெரிவித்தார்.

அரசு திவிநெகும சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்காக மாகாணசபைகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தைக் கண்டித்து நேற்றுமுன்தினம் புதன் கிழமை விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிறுபான்மையினருக்கு 13ஆவது அரசியல் திருத்தச் சட்டமூலம் அதிகாரப்பகிர்வு பற்றி அரசும் சர்வதேசமும் பேசிக்கொண்டிருக்கையில், மாகாணசபைகளுக்கு வழங்கியிருக்கும் அதிகாரத்தை அரசு ஒரு தலைப்பட்சமாக குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த 13ஆவது திருத்தச் சட்டமூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அபிவிருத்தி தொடர்பான அதிகாரங்களை மாகாணசபையில் இருந்து முற்றாக மத்திய அரசின் கீழ் கொண்டுவந்து, இந்த அபிவிருத்தி தொடர்பான முழுப் பொறுப்பையும் வழங்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு என்ற திட்டமே இந்த திவிநெகும சட்டமூலமாகும்.

இந்தச் சட்டமூலத்தை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரித்தால் சிறுபான்மையினருக்கு செய்கின்ற அநீதியாகும்.

எனவே, இந்தச் சட்டமூலத்தைக் கருத்தில் கொண்டு கிழக்கு மாகாணசபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்து வாக்களிக்கவேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல மாகாண சபைகளினதும் ஒப்புதல்களுடனும் திவிநெகும திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், அரசு திவிநெகும சட்டத்தை நடைமுறைப்படுத்த முயற்சித்து வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி நடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். அரசின் இந்த முயற்சியானது அரசமைப்புக்கும் அதிகாரப் பகிர்வு தொடர்பான கோட்பாட்டுக்கும் புறம்பானது என்று அவர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வரிப்பணம் செலுத்தாத வர்த்தக நிலையத்துக்கு 'சீல்'

கண்டி,செப்.28

ஹற்றன் - டிக்கோயா நகரசபைக்கு உட்பட்ட 11 வர்த்தக நிலையங்களுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 'சீல்' வைக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் நகரசபைக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணத்தை செலுத்தாத காரணத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில மாதங்களாக இந்த வர்த்தக நிலையங்களுக்கான வரிப்பணத்தைச் செலுத்துமாறு அதன் உரிமையாளர்களுக்கு தெரிவித்திருந்ததாக ஹற்றன்,டிக்கோயா நகரசபை தெரிவித்தது.

இதற்கமைய வரிப்பணம் செலுத்தாத 11 வர்த்தக நிலை யங்களுக்கு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தக நிலைய உரிமையாளர்களில் சிலர் சுமார் 4 வருடங்களாக வரிப்பணம் செலுத்தவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## கைக்குண்டு வீசியது ஜெமீலின் அடியாள்களே

### கீழ்த்தரமான செயல் எனக் கண்டிக்கிறார் மஜீத்

அம்பாறை,செப்.28

சாய்ந்தமருது ஓராபிபாஷா வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் ஏ.எல்.அப்துல் மஜீத் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சாய்ந்தமருது மத்திய குழுவின் தலைவரும், கல்முனை மாநகரசபை உறுப்பினருமான எம்.ஐ.எம்.பிர்தௌஸ் ஆகிய இருவரினதும் வீடுகளுக்கு நேற்றுமுன்தினம் கைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம்காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் ஏ.எல்.அப்துல் மஜீத் தெரிவித்ததாவது:-

இந்த படுபாதக செயலை கிழக்குமாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீலினுடைய அடியாள்களே செய்திருக்கிறார்கள் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் சாந்தமருதில் வெற்றிபெற்ற உறுப்பினர் ஏ.எம். ஜெமீலுக்கு அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்ற நிலைப்பாட்டின் வெளிப்பாடே இந்தத் தாக்குதலாகும். மக்கள் ஒன்றை நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

கட்சிக்கு வழங்கப்பட்ட கிழக்கு மாகாண அமைச்சர்களை நியமிக்கும் முழுப் பொறுப்பையும் நாடாளுமன்றக் குழுவும், கட்சியின் உயர்பீடமும் இணைந்து கட்சியின் தலைவரிடமே ஒப்படைத்திருந்தன.

தலைமைத்துவத்தின் தீர்மானமே ஹாபீஸ் நஸீர் அஹமட், மன்சூர் ஆகியோர் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டமையாகும்.

மாகாணசபைத் தேர்தலுக்கு வேட்பாளர்களை நியமிக்கும்போது, எனக்கு துரோகமிழைக்கப்பட்டிருந்தும், நான் அவற்றை எல்லாம் மறந்து தேர்தல் பிரசாரங்களில் இவர்களுக்கு அயராது பாடுபட்டேன்.

அவ்வாறிருந்தும், அமைச்சுப்பதவி கிடைக்காத காரணத்தினால், எங்களைச் சீண்டும் இவ்வாறான மோசமான செயலில் ஈடுபடுவது கண்டிக்கப்படவேண்டியதாகும்.- என்றார். (ச)

## கைக்குண்டுத் தாக்குதலை கண்டிக்கிறார் முதல்வர்



சாய்ந்தமருது,செப்.28

சிரேஷ்ட பிரதித் தலைவர் ஏ.எல்.அப்துல் மஜீத் மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் சாய்ந்தமருது அமைப்பாளரும் கல்முனை மாநகரசபை உறுப்பினருமான எம்.ஐ.எம்.பிர்தௌஸ் ஆகியோரின் வீடுகளுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் கண்டிக்கத்தக்கது என்று கல்முனை மாநகர முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்காக மிக மும்முரமாகப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட இருவரினதும் வீடுகளுக்கு கைக்குண்டு வீசப்பட்டு தாக்கப்பட்ட சம்பவம் எமது கட்சிக்கு விடுக்கப்பட்ட சவாலாகும்.

சாய்ந்தமருது பெரும்பான்மையாக முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களைக் கொண்ட பிரதேசமாகும். நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் கட்சிக்கு எதிர்ப்பில்லாத ஊராக காணப்பட்டது. அவ்வாறு இருக்கையில் இன்று கட்சியின் உயர்பீட உறுப்பினர்களின் வீடுகளுக்கு குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளமை என்னுள் பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது.

இந்தச்சம்பவத்தில் தொடர்புடையவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் செயல்களில் நேர்த்தியும், சமயோசிதமும் நிறைந்திருக்கும். சமூக நிகழ்வுகளில் ஆர்வமுடன் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு.

**இடபம்:** உங்கள் வாழ்வில் முன்னேற கிடைத்த வாய்ப்பைத் தவறாமல் பயன்படுத்துவீர்கள். அடுத்தவர் வியக்கும் வகையில் ஒவ்வொரு செயலும் அமைந்திடும். தொழில் வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பணவரவு கிடைத்து, முக்கிய செலவுகளை ஈடுகட்டும்.

**மிதுனம்:** உங்கள் மனதில் தேவையற்ற சஞ்சலம் வரலாம். அறிமுகம் இல்லாதவரிடம் குடும்ப விடயம் பேசக்கூடாது. அதிக உழைப்பால் தொழில் இலக்கு நிறைவேற்றலாம். பணவரவை சிக்கனமாகப் பயன் படுத்துவது நல்லது. உணவுப்பொருள் தரம் அறிந்து உண்பது அவசியம்.

**கடகம்:** உங்களின் எதார்த்த பேச்சு, சிலர் மனதை புண்படுத்தலாம். இடம், சூழ்நிலை அறிந்து பேசுவது நல்லது. நம்பிக்கையுடன் செயற்படுவதால் தொழில் வளர்ச்சி சீராகும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். அதிக பயன் வராத பொருள் வாங்கக் கூடாது.

**சிங்கம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையில் நற்காரியம் செய்வீர்கள். செயல்களில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். தொழில், வியாபாரம் சிறந்து, அதிக பண வரவைத் தரும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை வளரும்.

**கன்னி:** உங்கள் வாழ்வில் எதிர்மறையாக இருந்த விடயங்களில், நல்ல தீர்வு கிடைக்கும். புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில் வளர்ச்சிப்பணி முன்னேற்றம் தரும். தாய்வழி உறவினர் மூலம், சில நன்மை பெறுவீர்கள்.

**நாளை**

புரட்டாதி - 13 சனிக்கிழமை 29.09.2012
திதி: சதுர்தசி மு.ப.08.46 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மரண பி.ப 03.12 வரை
சுபநேரம்: 03.02- 04.32 வரை
ராகுகாலம்: 09.02- 10.32 வரை

**துலாம்:** எதிர்வரும் பணிகளுக்காக முன்னேற்பாடு செய்வது அவசியம். சில விடயங்களில் குளறுபடி ஏற்படலாம். கூடுதல் உழைப்பால் தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த அனுகூலம் கிடைக்கும். நீங்கள், உதவி தர மாட்டார் என நினைத்த ஒருவர், தாமாக முன் வந்து உதவி செய்வார்.

**விருச்சிகம்:** உங்கள் செயலில் சிலர் குறை சொல்ல முயற்சிப்பர். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். புதிய நுணுக்கத்தைப் பின்பற்றுவதால், சீரான பணவரவு கிடைக்கும். கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. திட்டமிட்ட வெளியூர் பயணத்தில் மாறுதல் இருக்கும்.

**தனுசு:** உங்கள் பணிகளில் புதிய வேகமும், விவேகமும் கலந்திருக்கும். புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, நன்மை பெறுவீர்கள். தொழில் சிறந்து பணவரவு கூடும். குழந்தைகளின் படிப்பு, எதிர்காலம் சிறக்க சில முடிவுகளை எடுப்பீர்கள்.

**மகரம்:** உங்களின் வெளிவட்டாரத் தொடர்பு தொந்தரவு தரலாம். எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி கொடுக்கக் கூடாது. கவனமுடன் செயற்படுவதால் தொழில், வியாபார நடைமுறை சிறக்கும். நிர்ப்பந்தத்தின் பேரில், விலைகுறைந்த பொருளை, அதிக விலைக்கு வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கும்பம்:** உங்கள் பணிகளை தாமதமாக ஆரம்பித்தாலும், திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். மனதில் மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், நற்பலனும் உண்டு. உபரி பண வருமானம் கிடைக்கும். நீண்ட நாள் சந்திக்க நினைத்த நண்பர், உங்களைத் தேடி வருவார்.

**மீனம்:** உங்களுக்கு புதிய பணி ஒன்று குறுக்கிடலாம். நல்லவர்களின் ஆலோசனையைப் பெற்று நிறைவேற்றுவீர்கள். சகதொழில், வியாபாரம் சார்ந்தவர்களிடம் சச்சரவு கூடாது. முக்கிய செலவுகளுக்காக சிறு அளவில் பணக் கடன் பெற நேரிடலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 1 | 8 | | 7 | | 6 |
| | | | 9 | | 7 | | | |
| 7 | 4 | 5 | | | | 8 | | 1 |
| | 6 | | 4 | | | 3 | | |
| | | 1 | 6 | 9 | 2 | 4 | | |
| | | 4 | | | 5 | | 6 | |
| 1 | | 7 | | | | 5 | 4 | 3 |
| | | | 5 | | 1 | | | |
| 8 | | 6 | | 4 | 3 | | | 7 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 1 | 2 | 5 | 7 | 3 | 6 | 9 |
| 5 | 6 | 2 | 3 | 8 | 9 | 7 | 1 | 4 |
| 9 | 3 | 7 | 4 | 1 | 6 | 2 | 8 | 5 |
| 7 | 5 | 9 | 6 | 4 | 1 | 8 | 3 | 2 |
| 4 | 2 | 6 | 8 | 9 | 3 | 5 | 7 | 1 |
| 1 | 8 | 3 | 5 | 7 | 2 | 4 | 9 | 6 |
| 3 | 7 | 5 | 9 | 6 | 4 | 1 | 2 | 8 |
| 6 | 1 | 4 | 7 | 2 | 8 | 9 | 5 | 3 |
| 2 | 9 | 8 | 1 | 3 | 5 | 6 | 4 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கனகசிங்கம் சதானந்தம் (ஆனந்தம்)
(ஓய்வுபெற்ற வெலியத்து உத்தியோகத்தரும் அகில இலங்கை சமாதான நீதிவானும் ஸ்ரீ பூதேஸ்வர சிவன்தேவஸ்தான ஆதீன தர்மகர்த்தாவும்)

மலர்வு:- 23.12.1933
உதிர்வு:- 25.09.2007

திதி:- வளர்பிறை சதுர்த்தசி

அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும்உறைவிடமாய்
இமைப்பொழுதில் மீளாத்துயில் கொண்ட எங்கள்
அன்புத் தெய்வமே நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து
ஐந்தாண்டுகள் கடந்தாலும் உங்கள் அழியாத
நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத
தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்போமாக

சிவன் கோயிலடி,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

நீங்காதநினைவுகளுடன்
அன்பு மனைவி,
பிள்ளைகள்,குடும்பத்தினர்.

(23352) (15-6-7-)



## சேவைநலன் பாராட்டும் பிறந்ததின நல்வாழ்த்துக்களும்



### திரு.கந்தையா பத்மநாதன்

(காரியாலய காரிய சேவகர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் 36 வருடங்கள் அரும்பணியாற்றி 28.09.2012 இன்று ஓய்வு பெறும் எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய திரு.கந்தையா பத்மநாதன் அவர்கள் தமது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும், குடும்பதில் நன்மைகளும், மகிழ்வும் பெற்று வாழ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அருளாட்சி புரியும் எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானை வேண்டி வாழ்த்திநிற்கும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துறைத்தலைவர்கள், நண்பர்கள்

01. பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்
02. பேராசிரியர் தி. வேல்நம்பி
03. யோ.ஜெயக்குமார்
04. ஐ.கே. சந்திரசேகரம்
05. திருமதி. ச.ஜெகநீசன்
06. திருமதி. தே.தங்கவேல்
07. திருமதி. ப.மகேந்திரம்
08. திருமதி. ம.ரங்கசாமி
09. க. இரட்ணசபாவதி
10. அ.ம.கோண்ஸ்ரன்ரைன்
11. ப. பத்மரூபன்
12. திருமதி. மா.இராஜலிங்கம்
13. செல்வி. சி.புஸ்பமலர்
14. ந.சிவசுப்பிரமணியம்
15. ச. ரவிக்குமார்
16. இ.சுரேஸ்காமநாதன்
17. க. குணரட்ணம்

நலச்சேவைகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(23332)(9.14)



## OBITUARY

Daniel, Reginald Victor Girubairatnam of Kopay, former Assistant Commisioner of Probation and child care Sevices, expired on 24.09.2012 in Melbourne

Husband of Molly Daniel, Brother of Ruby Ariaratnam, Father of Vasantha Selvaratnam (UK), Shanthi Ariaratnam (Melbourne)& Arunthathy Blanchard (Melbourne)

Father-in - Law of Arulampalam Selvaratnam (UK), Karuna Ariaratnam (Melbourne) & Suganthan Blanchard (Melbourne)

Grandfarther of Aruchunan Daniel- Selvaratnam (London), Dileeni Daniel - Selvaratnam (London), Previn Blanchard (Melbourne) & Dushy Blanchard (Melbourne)

Funeral Service will be held on Friday, 28 September 2012 at 10.00 am at All Saints Anglican Church, Mitcham, Victoria, Australia

**2/4 J.Block**
**Govt.flats**
**Colombo.4**

(23359) (15-14)

**Ruby Ariaratnam**



## கன்ரர் வாகனம் விற்பனைக்கு

TATA-CANTER-713
வகையைச் சேர்ந்த NPLH- XXXX
இலக்க கன்ரர் வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0772007621



## உடனடி விற்பனைக்கு

பாவனையிலுள்ள ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திரம் மற்றும் தளபாடங்கள்

- ஐஸ்பழபாத்5தட்டு-(கிறீம்பீட்டர்உட்பட)-1
- 3ஹோஸ் பவர் கொம்ரேசர் -2
- டி பிறிசர் -3
- 10 K.V ஜெனரேட்டர் (இந்திய ன்)-1
- 2K.V ஜெனரேட்டர் (சைனா)-2
- ஐஸ்கிறீம் வேன் (டாடா படி)-1

தொடர்புகளுக்கு:- 0714671698, 0774559520



## ஐந்தாம் ஆண்டு நினைவில்

மண் மகிழ 1934 * 06 * 29



விண்நெகிழ 2007 * 09 * 25

அமரர் மாணிக்கம் குமாரசாமி
திதி- திரயோதசி

அகல் விளக்காய் ஒளிவீசி
அவனியில் எமை உயர வைத்தீர்
ஆண்டுகள் ஐந்து சென்றிடினும்
அகன்றிடுமோ உம் நினைவு.....
உங்கள் ஆத்மா அமைதி பெற
இறை அருளை வேண்டி நிற்கும்

பெரிய பளை,
பளை.

(23306) (15-7)

மனைவி,
பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுக்கு எதற்கு தெரிவுக்குழு

## காலநேரத்தை இழுத்தடிப்பதே அரசின் நோக்கம் என்கிறார் கிரியெல்ல

கொழும்பு,செப்.28

அரசுக்கு பெரும்பான்மை பலம் உள்ளது. எனவே, தீர்வை வழங்க முடியும். இதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு தேவையில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர் இடம்பெற்றபோது அரசின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணியுடன் ஜனாதிபதி உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டார். இதில் போரை வெற்றி கொண்ட பின்னர் 13 ஆவது திருத்தம் ரத்துச் செய்யப்படும். அதிகாரப் பரவலாக்கலை வழங்க மாட்டோம் என்று உறுதியளிக்கப்பட்டது.



தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக் குழு அவசியமில்லை. காலத்தை வீணாக்குவதே அரசின் திட்டமாகும்.

அரசு அதிகாரப் பரவலாக்கலை வழங்குவோம். அதற்கு மேல் பதின்மூன்று பிளஸ் வழங்கப்படும் என்று இந்தியாவை இன்றும் ஏமாற்றி வருகிறது. ஆனால் ஒரு போதும் அது வழங்கப்பட மாட்டாது. காலத்தை வீணாக்குவதே அரசின் திட்டமாகும். அதற்காகத் தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அரசு அமைக்க முயற்சிக்கின்றது.

போரை நடத்தாது அழிவுகளைத் தடுத்து அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வதற்கே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது.

போரை நடத்தி அழிவுகளுக்குப் பின்னரே அதிகாரப் பரவலாக்கலை வழங்குவோம் என்று அரசு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருகிறது.

இந்தியாவிடம் மண்டியிடாது ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்க முன்வந்தது. ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று இந்தியாவிடம் மண்டியிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக் குழு அவசியமில்லை. 17 ஆவது திருத்தம் ரத்து செய்யப்பட்ட போது எதிர்க்கட்சிகளிடம் கருத்து கேட்கப்பட்டதா? இல்லை. மாறாக அரசுக்கு உள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி 17 ஆவது திருத்தம் ரத்து செய்யப்பட்டது.

எனவே இந்தப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்- என்றார்.(ச)

## மின் தொகுப்பு ரயில் கொழும்பில்

கொழும்பு,செப்.28

சீனாவில் இருந்து கடன் அடிப்படையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள மின் தொகுப்பு ரயில் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது என்று ரயில் திணைக் களம் தெரிவித்துள்ளது.

சீனாவிடம் கடனாகப் பெறப்பட்டுள்ள 13 மின் தொகுப்பு ரயில்களில் 5 ரயில்கள் இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இதில் நான்கு ரயில்கள் களனிவெலிப் பாதையில் சேவையில் ஈடுபடுத்தப் படவுள்ளன.

மற்றைய ரயில் மலைநாட்டு ரயில் பாதையில் சேவையில் இணைக்கப் படவுள்ளதாக ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது. (ச)

## இளைஞன் கொலை

கொழும்பு,செப்.28

கொழும்பு முகத்துவாரம், தொட்டுபொல வீதியில் இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு 8 மணிக்கு இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக முகத்துவாரப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவர் 21 வயதுடைய இளைஞராவார். இவர் வசித்து வந்த வீட்டில் தனியார் ஆலயம் ஒன்று இருந்தது என்றும், அதில் குறித்த இளைஞரும் அவரது தந்தையும் பூசை நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

வீட்டுக்கு அண்மையில் இருந்தவர்கள் இளைஞரின் வீட்டுக்குள் நுழைந்து கடுமையாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர். படுகாயமடைந்த இளைஞர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பயனளிக்காததால் உயிரிழந்துள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலர் இனங்காணப்பட்டுள்ள நிலையில், அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

முகத்துவாரப் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கழிவு தேயிலையுடன் இருவர் கைது

கொழும்பு,செப்.28

விற்பனைக்கு எடுத்துச் செல்வதற்குத் தயாரான நிலையில் வைக்கப் பட்டிருந்த ஒரு தொகுதி கழிவு தேயிலையுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராஜகிரிய விசேட அதிரடிப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து, இவர்கள் களனிப் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 22,500 கிலோகிராம் கழிவுத் தேயிலை மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 22,500 கிலோகிராம் கழிவுத் தேயிலை மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டவர்கள் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)



இலங்கை கடற்படையின் 18 ஆவது தளபதியாக வைஸ் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே நேற்று வியாழக்கிழமை காலை தனது கடமைகளை கடற்படைத் தலைமையகத்தில் பொறுப்பேற்றுக்கொண்டார்.

## புதையல் தோண்டிய மூவர் சிக்கினர்

கொழும்பு,செப்.28

வெல்லவ - கெலம்பயாவ குண்டல விகாரைக்கு அண்மையில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 11.40 மணிக்குக் கைது செய்யப்பட்ட இவர்கள் குருநாகல் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தனர்.

இதேவேளை, மீகலெவ புராதன வனமான கேகாலை வனத்துக்குள் அநாவசியமாக நுழைந்த 8 பேரும் நுழையத் தயாராக இருந்த 8 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரெஸ்வெஹர விகாரைக்கு அண்மையில் இவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வீதி அனுமதிப்பத்திர கட்டணம் அதிகரிப்பு

### பஸ் சங்கங்கள் கடும் எதிர்ப்பு

கொழும்பு,செப்.28

தனியார் போக்குவரத்து பஸ்களுக்கான மாதாந்த வீதி அனுமதிக் கட்டணத்தை அதிகரிக்க மேல் மாகாண சபை தீர்மானித்துள்ளமைக்கு பஸ் சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

600 ரூபாவாக இருந்த மாதாந்த வீதி அனுமதிப் பத்திர கட்டணம் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் 400 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எனினும் இது குறித்து தமது சங்கத்துக்கோ வேறு தரப்பினருக்கோ அறிவிக்கப்படவில்லை என்று குறித்த சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேல் மாகாண சபையின் இந்த நடவடிக்கையால் பஸ் போக்குவரத்து தொழில் வீழ்ச்சியடையும் அபாயம் காணப்படுவதாக குறித்த சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (ச)

## விரிவுரையாளர் இன்றி விடைத்தாள் திருத்தப்பட்டால் தரம் குறையும்

### பல்கலை சம்மேளனத் தலைவர் ரஞ்சித் எச்சரிக்கை

கொழும்பு,செப்.28

பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளவாறு பல்கலைக்கழக விரிவுரையாளர்களின்றி உயர்தர விடைத்தாள் புள்ளியிடும் வேலை அடுத்தவாரம் தொடங்குமாயின் விடைத்தாள் புள்ளியிடுதலின் தரம் குறைவாக இருக்கும் என்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி நேற்று வியாழக் கிழமை எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழக ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்தாலும் உயர்தர விடைத்தாள் புள்ளியிடும் பணி எதிர்வரும் முதலாம் திகதி தொடங்கும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார அண்மையில் தெரிவித்திருந்தார்.



வழமையாக ஜி.சி.ஈ. உயர்தர விடைத்தாள் புள்ளியிடுதலை ஆசிரியர்களே செய்வர். இதன்போது, குழுக்களின் மேற்பார்வையாளர்களாகப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடமை புரிவர். இது புள்ளியிடுதலில் உயர்தரம், நம்பிக்கை, நேர்மை என்பவற்றை உறுதி செய்வதற்கான ஏற்பாடாகும்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் புள்ளியிடுதல் தொடர்பான கூட்டத்துக்கு பரீட்சைகள் ஆணையாளர் 400 பல்கலைக்கழக விரிவுரையாளர்களை அழைத்திருந்த போதிலும், 16 பேர் மட்டும்தான் பங்குபற்றினர். இவர்களில் பெரும்பான்மையானோர் ஓய்வு பெற்றவர்கள்.

அரசு உண்மையாகவே உயர்தர விடைத்தாள் புள்ளியிடுதல் தொடர்பாக அக்கறை கொண்டிருக்குமானால் எமது கோரிக்கைகள் தொடர்பில் தீர்வை வழங்க வேண்டும்.

அதன் பின்னரே நாம் வேலைக்குச் செல்லக்கூடியதாக இருக்கும். ஆனால் இந்தப் பிரச்சினை குறித்து மேலும் பேசுவதற்குக்கூட எமக்கு நேரம் வழங்கப்படவில்லை - என்றார். (ச)

## பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட சர்வதேச ரீதியில் நடவடிக்கை தேவை

### அவசியம் என்கிறார் கூட்டுப்படைகளின் தளபதி

கொழும்பு,செப்.28

பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க சர்வதேச ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதி எயர் சீப் மார்ஷல் ரொசான் குணதிலக்க தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பது தொடர்பில் கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பயங்கரவாதத்தை இல்லாதொழிக்க, சர்வதேச ரீதியில் கடந்த காலங்களை விடவும் செயற்றிறனான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக சட்டக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் படையதிகாரிகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாலன் மில்**

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய், கொப்பறா, எள், சூரியகாந்தி விதை போன்ற வற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்

பாலன் மில்
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை
T.P : 021 3212624 (23325)

advt@uthayan.com
0215671111

**விற்பனைப்பிரதிநிதிகள் தேவை**

'கேடயம்' சஞ்சிகையை குடாநாட்டின் பல்வேறு பாகங்களிலும் சில்லறையாக விநியோகிக்க கூடியவர்கள் தேவை
(தகைமை : க.பொ.த சா/த சித்தி)
தொடர்புகளுக்கு :-
தொ.பே : 0757683163
E-mail : vsheron@gmail.com
கேடயம்
'இலங்கையில் இருந்து தமிழ் மொழியில் வெளிவரும் முதல் முழு வர்ண விளையாட்டுச் சஞ்சிகை'


# தரம் 6 அனுமதி 2013

2012 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் 148ம் அதற்கு மேலும் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் எமது கல்லூரியில் பாடசாலை நேரத்தில் படிவங்களைப் பெற்று அனுமதிக்காக 20.10.2012க்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி (சி/3683)(3.14.6) அதிபர்

# வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகள் 2013

வட இலங்கை சங்கீத சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப் படிவங்கள் 01.10.2012 முதல் விற்பனைக்கு வரும். விண்ணப்ப முடிவுதிகதி 05.12.2012 ஆகும். விண்ணப்பப்படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தலுடன் ரூபா (ஐம்பது) 50/= மட்டும்.

விண்ணப்பப்படிவத்தை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 65/= பெறுமதியான காசுக்கட்டளை (மணிஓடர்) உடன் சொந்த முகவரி எழுதப்பட்ட நீள் கடித உறையை வட இலங்கை சங்கீத சபைக் காரியாலயத்துக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பரீட்சைக் கட்டணத்தை சபையினால் வழங்கப்படும் படிவத்தைப் பூரணப்படுத்தி இலங்கை வங்கியில் பணத்தைச் செலுத்தி அவர்களால் வழங்கப்படும் படிவத்தை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும்.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வுநாடிகள்

வட இலங்கை சங்கீத சபை
யாழ் வலயக்கல்வி அலுவலகம்,
செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் இடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(சி/3680)

# முதலாம் ஆண்டுக் குருபூசை



முக்தி நிலையடைந்த சிவபாக்கியம் மலர் அம்மையார் அவர்களின் முதலாம் ஆண்டுக் குருபூசை நாளை (29.09.2012) சனிக்கிழமை நடைபெற திருவருள் கைகூடியுள்ளது அன்று காலை அம்மையாரின் சமாதிபீடம் அமைந்துள்ள காரைக்காலில் விசேட பூசை வழிபாடுகளும் அதனைத் தொடர்ந்து உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் விசேட பூசை வழிபாடுகள், பஜனை, ஆத்மீக சொற் பொழிவு, மகேஸ்வர பூசை என்பன நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

இப்புனித கைங்காரியங்களில் அடியார்கள் அன்பர்கள் கலந்து திருவருன் பெற்றின்புறுவீர்களாக.

கடவுள் சந்நிதி அடியார்கள்.

(23316)(3.6.7)

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்ணில் 30 * 04 * 1929

விண்ணில் 30 * 08 * 2012

## மாணிக்கம் தர்மலிங்கம்

### (சமாதான நீதிவான்)

பரந்த உலகிலே பணிசெய்து கிடப்பதே தன் பணிஎன்ற கொள்கையுடன் வாழ்ந்து எமக்கெல்லாம் நல்வாழ்வு ஊட்டிய எங்கள் அன்புத் தெய்வமே வந்தனை செய்கின்றோம்.

எமது குடும்பத்தலைவர் மாணிக்கம் தர்மலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 29.09.2012 சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் நோய்வாய்ப்பட்ட வேளை வைத்தியசாலையில் உதவி புரிந்த வைத்தியர்கள், தாதியர்கள், சகஊழியர்கள், மரணச்செய்தி கேட்டு உடன் வந்து உதவியோருக்கும், அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும், மலர்வளையம் கொண்டு வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்தும் தெலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும், அஞ்சலிக்கூட்டம் நடத்தியோருக்கும் மேலும் சகல வழிகளிலும் உதவிபுரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

தயவு கூர்ந்து இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

"தேவி அகம்"
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(சி/3676)(3.14)

பிரிவால் துயருறும்
அமரரின் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## மரிசால் பிலிப்பு அந்தோனிப்பிள்ளை

### (ஓய்வு பெற்ற கிராம அலுவலர்)



மன்னார் கண்ணாட்டியைப் பிறப்பிடமாகவும் ஆட்காட்டிவெளியை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற கிராம அலுவலகர் மரிசால் பிலிப்பு அந்தோனிப்பிள்ளை 26.09.2012 அன்று காலமானார்.

அன்னார் செபமாலை (இளைப்பாறிய கிராம சேவகர்) அவர்களின் அன்புக் கணவரும், பனி மயராஜா (ரஞ்சன் - பிரான்ஸ்), காமலிற்றா (ரஞ்சினி - பிரான்ஸ்), சேவியர் ஜெயராஜா (ஜெயா- பிரான்ஸ்), புவனராஜா (தயா-பிரான்ஸ்), யூட் ரேசராஜா (புள்ளிவிபர உத்தியோகத்தர் - கச்சேரி, வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலா (இந்து - பிரான்ஸ்), யஸ்தின் வெஸ்லி (பிரான்ஸ்), அருள் அழகி, ரோகினி (பிரான்ஸ்), றோமலதா (ஆசிரியர் - வவுனியா விபுலானந்தர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனும், றோஜர், சமிந்தா சைலவ், சுவேதா, அனந்தன், அனிஷா, வேஜின், தரிசிகா, டேமியன், வலின்ரினா, துஷான் யூட்ஸ் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), கிஷானி (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் பேரனுமாவார்.

இன்று (28.09.2012) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆட்காட்டிவெளி புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் ஆட்காட்டிவெளி சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/3679)(3.14.6)

# மரண அறிவித்தல்

## துரையப்பா சிவலிங்கம்

(முன்னாள் முகாமையாளர்- சின்னத்துரை அன்ட் பிரதர்ஸ், யாழ்ப்பாணம்)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா சிவலிங்கம் 25.09.2012 செவ்வாய்க் கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையாச் சாமியார் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மீனாட்சியம்மா அவர்களின் அன்புக் கணவரும், ரதிகலா (ஜேர்மனி), சிவாஜிதுரை (ஜேர்மனி), சிவராமன்( சுவிஸ்), சிவகாந்தன் (லண்டன்), கலைமதி (நோர்வே), சிவகுமார் (நியுசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான யோகம்மா, சிவகாமசுந்தரி, மதுரநாயகம், சிவயோகநாதன், சிவானந்தன் மற்றும் சிவநேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (சோமர்), சோமசுந்தரம், மற்றும் சுப்ரமணியம், சிவசண் முகம், கமலா, மல்லிகா (இலங்கை), பரமேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், விஷ்ணுதாஸ் (ஜேர்மனி), சாந்தினி (ஜேர்மனி) அபிராமி (சுவிஸ்), விஜிதா (லண்டன்), ரவீந்திரன் (நோர்வே), கார்த்திகா (நியுசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனும், வைஷ்ணவி, விதுரன், கஜந்தன், கரிஷ் (ஜேர்மனி), சகீர்தன், துசாந்த், சதுர்சன் (சுவிஸ்), வராகன், கர்சன், ஜரிஸ் (லண்டன்), சர்மிகா, சரணுகா, சாருகா (நோர்வே), சானு, வர்த்தனா (நியுசிலாந்து) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2012) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெகிவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
[illegible]

(23382)(3.6.7)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்ப இவர்கள் திருந்தப் போகிறார்கள்?

## கோப்பாய் சண்முகம்
### கதையோடு செய்தி

படிச்சவனிட்ட பணம் இருக்காது. ஆனால் படிக்காதவனிட்ட பணம் இருக்கும். படிக்காதவர்கள் தான் உலகில் பணக்காரராகவும் முதலாளி களாகவும் கூடுதலானோர் இருக்கின்ற னர். அவர்களால் தான் பல நாடுகள் அபிவிருத்தி அடைந்திருக்கிறன. ஆனால் இலங்கையில் தமிழர் பகுதிகளில் போர் இடம்பெற்றாலும் பல பணக்கார முதலாளிகள் யாழ்ப்பாணத்தில் இருக்கி றார்கள். அவர்களில் சிலரைத் தவிர ஏனையவர்களால் யாருக்கு என்ன பிரயோசனம்?

யாழ்ப்பாணத்தவன் பணத்தைச் சேர்த்து வங்கியில் போட்டுவிட்டுச் செத்து விடுவான். அந்தப் பணம் அநாதரவாக வங்கியில் இருந்து அரசின் பணமாக மாறும். தமது உறவுகளுக்கோ, நண்பர் களுக்கோ, அயலவர்களுக்கோ உதவி செய்ய மனமில்லாமல் பிரயோசனம் இல்லாமல் சேர்க்கும் பணம் கடைசியில அநாதரவாகத்தான் இருக்கும் என்று கடந்த வாரம் திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் பஸ்ஸுக்காகக் காத்து நின்ற ஒரு வயதுபோன முதியவர் சொல் லிக் கொண்டிருந்தார். அவர் சொல்வதை அங்கு நின்ற எவரும் காதில் வாங்குவ தாயில்லை.

தபால் பெட்டிச் சந்தியில் உள்ள சீடிக் கடையொன்றில் சீடி வாங்கச் சென்ற வேளை தள்ளாடும் வயதிலும் எவரும் துணைக்கின்றித் தனியனாக பஸ்ஸுக் காகக் காத்துக் கொண்டு நின்ற அந்தப் பெரியவர் பக்கம் சென்ற வேளை அவர் சொன்னதைக் கேட்க முடிந்தது. அந்தப் பெரியவரிடம் கதையைக் கொடுத்தேன். ''என்ன பெரியவர் இந்த வயதிலையும் தைரியம் உள்ள இளைஞர்கள் சிந்திப் பதுபோல சொல்கிறீர்கள்'' என்றேன். அந்தப் பெரியவரோ '' இல்லை தம்பி. கடந்த வாரம் ஒருநாள் நள்ளிரவு 11 மணியிருக்கும். தபால்பெட்டி ஒழுங்கை யினூடாக வந்த கனரக வாகனம் ஒன்று கறண்ட் போஸ்டுடன் மோதி கறண்ட் போஸ்ட் உடைந்து விழுந்ததால் அடுத்த நாள்வரை கறண்ட் இல்லாமல் அந்தப் பகுதி இருளில் இருந்தது. அது பரவா யில்லை தம்பி. ஏனெனில் யாழ்ப்பாணத் தில தானே மின்சார சபையினர் அடிக்கடி கறண்டைக் கட் பண்ணுவார்கள். அதில பழகியதால அன்று கறண்ட் போஸ்ட் விழுந்து கறண்ட் இல்லாதது பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் பெரிய கனரக வாகனங்கள் ஒழுங்கைக்குள்ளால் போவ தால் என்ன விபரீதம் என்றாலும் ஏற்பட லாம். இதை கனரக வாகனங்களைக் கையாள்பவர்கள் நினைப்பார்களா? கோடிக்கணக்கில் பணம் சம்பாதிப்பதற் காக இந்த மக்கள் பற்றிய எள்ளளவு சிந்தனையில்லாமல் தமது முயற்சியில் இப்படி மும்முரமாக ஈடுபடலாமா?''

மூச்சுவாங்க விடாமல் கதைத்த அந்தப் பெரியவர் சிறிய நேரம் களைப்பு ஆறினார். அப்போதுதான் அந்தப் பெரியவர் முதலில் சொன்னது எனக்குப் புரிந்தது. ஆனால் நான் அந்தப் பெரியவரை விட வில்லை. தொடர்ந்து கதை கொடுத்தேன். ''இதற்கு எங்களால் என்ன செய்ய முடியும்?'' என்று அந்தப் பெரியவரைக் கேட்டேன். அவரோ ''பெரிய கனரக வாகனங்கள் தாம் நினைத்த நேரத்தில் யாழ்ப்பாண வீதிகளில் ஓடுவதற்கு அனுமதி வழங்கக் கூடாது. அதற்கென நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அந்த நேரத்தில் கனரக வாகனம் செல்வதற்கான பாதையையும் தீர்மானிக்க வேண்டும். அடுத்ததாக ஒழுங்கையினூடாக கனரக வாகனங்கள் செல்வது தடை செய்ய வேண்டும். இல்லாதுபோனால் பல விபத்துக்களை யாழ்ப்பாணத்தில் பார்க்கலாம். பல உயிர்களை இழக்கலாம்.

கனரக வாகனம் ஒன்று பிரதான வீதி வழியாக வந்து சென்றாலும் பல சிறிய வாகனங்களது போக்குவரத்தில் தாமதம் ஏற்படுகிறது. அந்த வாகனம் நடு வீதியில் நின்றுவிட்டால் அவ்வளவுதான். அந்த வாகனத்தைவிட்டு தாண்டிச் செல்ல முடியாது மாற்றுப்பாதையைப் பயன்படுத்த வேண்டிய சூழலும் ஏற்படும். இப்படி யாகக் கனரக வாகனம் எதிரில் வரும் போது எமன் வருவதைப் போலத்தான் நினைக்கத் தோன்றுகிறது. இதை இந்த வாகனத்தைப் பயன்படுத்துவோர் நினைப் பார்களா? எப்ப இவர்கள் திருந்தப் போகிறார்கள்?

பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருப்பார்கள். இந்த வீதியில் பயணம் செய்யும் மாணவப் பிஞ்சுகள், மருத்துவ மனை கிளினிக்குக்குச் செல்லும் முதிய வர்கள் மற்றும் பலர் கூடுதலாகப் பாதிக்கப் படுகிறார்கள். தானுண்டு தன் வேலை யுண்டு என்று திரிந்தால் இந்த மண்ணில் செல்வந்தர்கள் வாழ்ந்தார்கள் என்றே தெரியாமலிருக்கும். பணம் சம்பாதிக்க வேண்டும். மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பணம் சம்பாதிக் கக் கூடாது. பணத்துக்கே பெறுமதியில் லாமல் போய்விடும்'' என்று சொன்ன அந் தப் பெரியவர் பஸ் வருவதைப் பார்த்ததும் தனது கையிலிருந்த பையிலிருந்து பஸ் ரிக்கெற்றுக்கான பணத்தைத் தேடி எடுத்துக் கொள்கிறார். பஸ்ஸில் கூட்ட நெரிசல் அதிகமாக இருந்தும் ஒருவாறு வழி எடுத்து ஏறிக் கொள்கிறார்.

அந்த பஸ்ஸில் நின்ற நடத்துநர் அந்தப் பெரியவர் ஏற முதல் பணத்தை அறவிட முயற்சிக்கிறார். பெரியவரோ பஸ்ஸில் கூட்டத்தின் நெரிசலிலும் ஒருவாறு கையிலிருந்த பணத்தைக் கொடுக்கிறார். பஸ் புறப்படுகிறது யாழ். நகர் நோக்கி.

எங்கு செல்கிறாரோ தெரியாது. ஆனால் அவர் சொன்னது சாதாரண விடயமல்ல. பணத்தைச் சம்பாதிப்பவர்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். சினிமாப்பட சீடி வாங்கச் சென்ற நான் கனரக வாகனத் தின் உண்மைக் கதையைக் கேட்டதும் சீடி வாங்க மனமில்லாமல் திரும்பி வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன். எதிரே ஒரு கனரக வாகனம் பலாலி வீதியில் வருகிறது.

எல்லோரும் வழிவிட்டு ஒதுங்கு கிறார்கள். நானும் ஒதுங்கிக் கொள்கி றேன். வீதியின் கரைக்கு கனரக வாகனத் துக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றவர்களைப் பார்க்கிறேன். அவர்கள் ஒவ்வொருவருடைய முகத்திலும் சினம் ஏறிப்பிடித்துக் கொண்டி ருப்பதைப் பார்க்க முடிந்தது. கனரக வாகனம் உறுமிக் கொண்டு வரும் சத்தத்தில் அவர்கள் தங்களுக்குச் சினந்துகொண்டு கதைப்பது கேட்கவில்லை. அந்தக் கனரக வாகனத்தின் றைவரைப் பார்க்கிறேன். சனம் ஒதுங்கி நிற்கிறது. தானும் மெதுவாக எடுப்போம் என்றில்லாமல் இன்னும் வேகப்படுத்தி அந்த இடத்தைவிட்டு நகர்கிறார்.

எங்களால் என்ன செய்ய முடியும். அதிகாரிகளும் பணக்காரர்களும் சிந்திக் காதவிடத்தில் மக்களின் வாழ்க்கையில் வீதிப் பயணத்தில் ஏற்படும் தாமதத்தில் வாழ்க்கைப் பயணமே கேள்விக் குறியாக மாறிவிடுகிறது.


## திருத்தம்

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாலங்கள், மதகுகள் புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல்- வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

15.09.2012 ஆம் திகதி உதயன் பத்திரிகை யில் பிரசுரிக்கப்பட்ட கேள்விகோரல் விளம்பரத்தில் கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் நடைமுறை 28.09.2012 ஆம் திகதி (இன்று) 10.00 மணியுடன் முடிவடைந்து 28.09.2012 இன்று 10 மணிக்கு திறக்கப் படும் என்பதை 01.10.2012ஆம் திகதி 10 மணியுடன் முடிவடைந்து உடனே திறக்கப்படும் என மாற்றி வாசிக் கவும்.

பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.

(சி/3675) (15-6-7)

## அறிவித்தல்

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய், கற்புலம் வீதி என்னும் இடத்தைச் சேர்ந்த சபாபதி சச்சிதானந்தம் கைம்பெண் சோதிமணி ஆகிய நான் வலிகாமம் கிழ க்கு பிரதேசசபை உரும்பிராய் உப அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள 01ஆம் வட்டாரத்தின் 9/3, 9/4, 9/5, 11 ஆதன வரி மதிப்பு இலக்கங்கள் கொண்ட ஆதனத்துக்கு நான் 04.10.2004 ஆம் திகதிய ன்று சட்டத்தரணி & பிரசித்த நொத்தாரிஸ் செல்வி எஸ். அபிமன்னசிங்கம் LL.B, J.P.U.M அவர்கள் முன் பாக 4598 ஆம் இலக்கத்தில் நிறைவேற்ற அறுதி உறு திப்படி, சட்டபூர்வமான உரிமையாளர் என்னும் மேற்கு றித்த வலி கிழக்கு பிரதேசசபையில் குறித்த ஆதனங் களுக்குரிய சோலை வரிப் பதிவேட்டில் எனது பெயரை பதிவுசெய்ய விண்ணப்பித்துள்ளேன் என்றும் குறித்த ஆதனத்தின்உரிமையாளராக எனது பெயரை சோலை வரி ஆதனடாப்பில் பதிவு செய்வதற்கு எவராவது ஆட்சேபனை தெரிவிக்க விரும்பின் இத் திகதி தொடக்கம் 14 நாள்களுக்குள் தமது ஆட்சேபனையை குறித்த பிரதேசசபையின் செயலாளரிடம் தெரிவிக்கும் படி இத்தால் அறிவித்த ல் தருகின்றேன்.

தகவல்
ச.சோதிமணி

0774121657 , 0214921728.

(23341) (15-7-6)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறுபெற்ற மாணவர்களையும் அப்பெறுபேறுபெற உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**


லோ.வைஸ்ணவி (191)
மாவட்டநிலை – 02
மாகாணநிலை – 03





க.சங்கவி (172)


கு.தனலக்ஷன் (167)


வ.சயந்தன் (156)


ந.வதனி (155)


த.சாளினி (154)


சு.வருண் (151)


இ.தரணிகன்(150)


இ.சாயினி (150)


சா.கௌசி (148)

| | | | |
|---|---|---|---|
| த.ஜோயல் நிதுஷன் – 145 | அ.செபோன் கனிபர் – 142 | ப.சபேசன் – 139 | அ.உமாபாரதி – 137 |
| வ.சங்கீதன் – 135 | தி.சுகப்பிரதா – 131 | கு.அபிஷாந் – 126 | கி.நிஷாதனா – 116 |
| இ. சண்சுயா – 115 | ஈ.கேமவாசன் – 115 | தே.தனுஸ்ரன் – 115 | அ.சரண்ஜா – 107 |
| நே.வினிதா – 107 | கு.மோகனவர்ணன் – 109 | கு.ரெனுஸ்ரீடா – 105 | சு.சதுர்ஷிகா – 103 |

[illegible] தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி பாடசாலைச் சமூகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுரம் ஸ்ரீசக்கராழ்



# தேர்த்திருவிழா சிறப்பு

**பிரதம குருமார்களின் நல்லருளாசிகள்**



ஸவாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்
ரஜஸோ லோப ஏபச/
ப்ரமாத மோஹள தமஸோ
பவதோ அஜ்ஞா நமே வ ச//
-17

சத்வ குணத்திலிருந்து ஞானம் உண்டாகிறது. ரஜோ குணத்தினின்று ஐயமின்றிய பேராசை உண்டாகிறது, தமோ குணத்தினின்று கவனமின்மையும் மதிமயக்கமும் உண்டாகின்றன. மேலும் அறியாமையும் உண்டாகின்றது.

ஸ்ரீமத் பகவத்கீதை, பதினான்காவது அத்தியாயம் -17 சுலோகம்/ அவனருளாலே அவன் தாழ் வணங்கி:

எல்லாம் வல்ல எம் பெருமான் ஸ்ரீவல்லிபுர சக்கர மாயவன் தாழ் பணிந்து, சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுரக்கோயிலின் நந்தன வருடத்தின் மஹோற்சவம் சென்ற ஆவணி மீ 29ஆம் நாள் (14.09.2012) வெள்ளிக்கிழமை ஐந்தொழிலிலொன்றான படைத்தல் தொழிலின் காரணமான கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி காத்தல் தொழிலின் நிமித்தமான வீதிவலம் வந்து அருளும் தூய்மையாக திருவிழாக்கள் இனிதே நடைபெற்று, எம் பெருமான் சம்காரத் தொழிலின் நிமித்தமான இரதோற்சவம் இன்றைய தினம் புரட்டாதி மீ12ஆம் .திகதி(28.09.2012) வெள்ளிக்கிழமை நடைபெறுகின்றது. ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவம் என்னும் கொடிய மலத்தை அழித்து தூய்மைப் படுத்துவது தான் அதன் தாற்பர்யமாகும், நாளைய தினம் வரலாற்றுடன் தொடர்புடைய கடல் நீராடல் தீர்த்தம் நடைபெறும். நாளை மறுதினம் (30.09.2012) ஞாயிறன்று அருளல் தொழிலின் நிமித்தமான தீர்த்தத் திருவிழாவும், கொடியிறக்கத்துடன் மறைதல் தொழிலின் நிமித்தமான திருவிழாவும் நடைபெறும், இந்த நாள்களில் எம் பெருமானை வந்து தரிசிக்கும் அடியவர்கள் அனைவரும் எம் பெருமானின் நல்லருளைப் பெறுவார்கள் என்பது திண்ணம், எம்பெருமானை நினைந்து வழிபடும் அனைவர்க்கும் எல்லாம் வல்ல வல்லிபுர மாயவனின் நல்லாசிகளும் எமது நல்வாழ்த்துக்களும் உரித்தாகுக.நாட்டினர் அனைவரும் சமாதான சகவாழ்வுடனும் நீடித்த அமைதியுடனும், சுபீட்சம் நிறைந்த நல்வாழ்வைப் பெற வாழ்த்தி எம் பெருமானைப் பணிகின்றோம்.

ஸ்ரீ ஆழ்வார் பீடம், வல்லிபுரக்கோயில்
பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குருக்கள்
பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக்குருக்கள்
பிரதான குருமார்கள்.
பிரம்மஸ்ரீ. சுதர்சன கணபதீஸ்வரக் குருக்கள்
மஹோற்சவக்குரு(இளையகுரு)

**நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி**



சரித்திரப் பிரசித்தி பெற்ற புலோலி வல்லிபுராழ்வார் திருக்கோயிலில் இன்று தேர்த்திருவிழா. குறை தீர்க்கும் கோபாலன் இன்று நிறைவாகத் தேரேறி வரும் அற்புத ஆனந்தக் காட்சியை வல்லிபுரத்திலே காணலாம். காத்தற் கடவுளான ஸ்ரீமகாவிஷ்ணு மூர்த்தியானவர் ஸ்ரீ சக்கரத்தாழ்வாராகத் திருவீதி வலம் வந்து இங்கே அருட்கட்சி வழங்குகிறார்.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்யும் பரந்தாமன் பக்த ரட்சகனாக அருள்பாலிக்கும் ஆலயமான இந்த வல்லிபுரத் தேவஸ்தானத்திலே சக்கர வடிவில் அருளாட்சி புரிகின்றார். ''தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் நான் யுகந்தோறும் அவதராஞ்செய்து நீதியை நிலைநாட்டுவேன்''. என்று மகா பாரதத்தில் கூறியபடி பக்தர்களை இரட்சித்து அருளை அள்ளி வழங்குகின்றார்

சங்கு சக்கரமேந்தி அழகே உருவாகக் காட்சி தரும் இவர் இன்று தேரேறி வந்து அடியார்க்கருளும் ஆனந்த அற்புதக் காட்சியை இங்கன்றி வேறு எங்குமே காண முடியாது.அந்த வல்லிபுராழ்வார் அனைவர்க்கும் அருள்புரிய வேண்டும் என்று பத்ம மலர்ப்பாதம் பணிந்து ஆசி நல்கி வாழ்த்துகின்றேன்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீன குருமுதல்வர்.

**வாழ்த்துச் செய்தி**



வடபால் யாழ்ப்பாணத்தில் வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் ஆழி சூழ்ந்து அரவணைக்கும் வல்லிபுர அழகுப் பதியில் கோயில் கொண்டு அனைவருக்கும் வற்றாத ஆன்ம அதிர்வு அலைகள் அனுதினம் அள்ளி வழங்கும் ஸ்ரீ வல்லிபுரத்தாழ்வார் இன்று அண்டி நின்றவர்களின் அல்லல் அறுத்து ஆறுதல் வழங்கி ஆனந்தப் பெருவாழ்வு அருள அழகு இரதம் ஏறி ஆரோகணிக்கின்றார்.

காற்றும் கடலலைகளும் கவரிவீச, தேரோடும் வீதியில் மேலுமொரு கடலெனத் திரளும் அடியார்களின் சிரங்களும் திரைகளாய் அசைந்து ஆர்ப்பரித்து வரவேற்க, தர்மத்தை காத்து உலக ஜீவராசிகளை இரட்சிக்க யுகம் தோறும் அவதரிக்கும் ஆபத்பாந்தவர். எண்ணற்ற அற்புதங்களை எங்கள் அயலில் நிகழ்த்திக் காட்டும் அனந்தசயனர், வரங்களையும் கரையற்ற கருணையையும் வாரி வழங்கும் வல்லிபுரத்தாழ்வார் எங்கள் மும்மலங்களினையும் களைந்து அழித்து தீர்க்க பவனி வருகின்றார்.

இந்த நன்நாளில் தேடிச்சென்று மாயவரின் தேர்வடம் தொட்டிழுத்து சேவடிகளைச் சேவித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுயர்வோமாக!

இ.த.ஜெயசீலன், பிரதேச செயலாளர்,
வடமராட்சி வடக்கு,பருத்தித்துறை.

**வல்லிபுர ஆழ்வாரே தேரேறி வருக! வருக!**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற புலோலியூர் வல்... ஆழ்வார் திருக்கோயிலில் இன்று தேர்த்திருவிழா. அ... சித்திரத் தேரிலே ஆரோகணித்து வரும் ஸ்ரீ சக்கர ஸ்வா... பேரழகு சொல்லுந் தரமன்று.

உலகின் அநியாயங்களையும் அக்கிரமங்க... அழித்தொழிப்பதற்காக ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீ...கர வ... இன்று தேரேறிப் புறப்படுகின்றான். ஈரடியாலே மூவுல... பெருமான் இன்று வழிபடும் அடியார்களின் துன்பது... இன்பவாழ்வருளி எல்லலோரும் சகலநலன்களும் ... வேண்டுமென்று இறையருளை பிரார்த்தித்து ஆசி நல்கி...

மண்ணையுண்ட வாயாலே வெண்ணெய் திருடி... மாமலையான் சகல சௌபாக்கியங்களும் நி... நல்வாழ்வருள'வல்லிபுர ஆழ்வாரே தேரேறி வருக வரு... வணங்கி வாழ்த்துவதில் உளம் பூரிப்புற்று இறும் பூதெய்...

''வல்லிபுரத்தானே வளமான வாழ்வு நல்க வரவேல...

கலாபூஷணம் இ...

**மேதினியைக் காக்க மீன் வடிவாய்**
**தோன்றிய பெருமான் வல்லிபுரத்தில் தே... வருகின்றார்.**

விஷ்ணு மூர்த்தியாய் ஒரு திருவிளையாட்டி... வல்லிபுரத்திற்குச் சமீபமாய் வலைஞர்கள் மீன்பிடிக்கும்... அவர்களுடைய வலைத் தொடரில் பிரவேசித்து ... கோலாகலத் தொனி செய்தார். இதனைக் கண்டு வ... இதனைக் கண்டு வலைஞர்கள் உலகங்களை இரட்சிக்... மீனைப் பிடிக்கும் படி விருப்பம் கொண்டார்கள். எல்லோ... வேளையில் மீன் குதித்து குதித்து உலாவி 'ல...லி' எ... தலத்தில் மகிழ்வுடன் வந்து விழுந்தது. பின் ...ஷ்ணு... போல தோன்றினார். பல்லக்கில் வைத்து பிள்ளை... அதிகரிக்க அதே மணற்பரப்பில் வைத்தனர். அந்நேரம்... சக்கரத்தைக் கொடுத்து விஷ்ணு மறைந்தார்.

அந்தச் சக்கரமே வல்லிபுரத்தில் அருளாட்சி செய்கி... தேசமக்கள் நலனைக் காத்தருள வருகின்றார்.

மதுரகவி காரை எம்...

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ விளம்பர அனுசரணை

Marsha
systems(PVT)LTD
உங்களுக்கென்றொரு
கணினியினை இன்றே
உரிமையாக்கிக் கொள்ளுங்கள்
M.M.V. Road Nelliady
Karaveddy
T.P. 021 492 4118

குபேரன் ஸ்ரோர்ஸ்
சகல விதமான பலசரக்கு
பால்மா பிஸ்கட் வகைகள்
யாவற்றையும் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்
குபேரன் ஸ்ரோர்ஸ்
பஸ்நிலையம் முன்பாக,
நெல்லியடி.

ஹற்றன் நஷனல்
HNB வங்கி
Your Partner in Progress
நெல்லியடி ஹற்றன் நஷனல்
வங்கி கிளையானது தற்போது
வாடிக்கையாளருக்கு பாதுகாப்பு
பெட்டக வசதிகளையும்
வழங்குகின்றது.
பிரதான வீதி, நெல்லியடி

N.S.R FIT...
சகல விதமான ...
வேலைக...
ஒட்டுவேலைக...
நாடவேண்டிய ஒ...
N.S.R FIT...
பிரதான வீதி,...


யசோ ரெக்ஸ்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
YASO TEX
Main Street, Nelliyadi, Karaveddy. Tel: 021 2264997

JAMUNA-AKSHAYA
மொத்த,சில்லறை,
பல்பொருள்
வியாபாரம்
109,113 Main street,
Nelliady.
Tel: 021 226 2150

உங்களுக்குத் தேவையான போட்டோ
வகைகளை 15 நிமிடத்தில்
பெற்றுக்கொள்ள
நிதுஷா ஸ்ருடியோ
Nidusha Studio
No.100,Main Street,
Nelliady,Karaveddy.
T.P.: 021 226 2512,077 172 7744

ஓடர்நகைகள் ...
தவணையில் ...
தங்கத்தி...
செய்து கொடுக்...
தரம் நாடுவோர் தவற...
மஹாலக்ஷ்மி தங்...
தங்கப்பவுண் நகை...
பிரதான வீதி, நெல்லிய...
தொ.பே.:021 2...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழ்வார் தேவஸ்தானம்



# மலர் – 28.09.2012

ருக!
ர் வல்லிபுர
விழா. அழகிய
ஸ்வாமியின்



மங்களையும்
கர வடி
மூவுலகளந்த
ன்பதுயரங்களைக் களைந்து
களும் பெற்று சுகமே வாழ
சி நல்கி வாழ்த்துகின்றோம்.
திருடி உண்ணும் வேங்கட
ம் நிறைந்த சந்தோஷ
ருக வருக' என்று வரவேற்று
பூதெய்துகின்றோம்.
வரவேண்டும்"
ணம் இராசையா ஸ்ரீதரன்



ல் தேரேறி
ரயாட்டினால்
டிக்கும் போது
சித்து மிக்க
ண்டு வலைஞர்கள் செய்தார்.
இரட்சிக்கின்ற ஈசராகிய அந்த
எல்லோரும் கூடினார்கள் அந்த
லி' என்ற பெண்ணின் மடித்
ஷ்ணுவின் மனிதப் பிள்ளை
ள்ளையை தூக்கினார் பாரம்
ந்நேரம் அந்தண வடிவில் ஒரு
செய்கின்றார். அவரே தேரேறி
ர எம்.பி. அருளானந்தன்.

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வரலாற்றுச் சிறப்பு

விராட் புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடை நாடி ஸ்தானம் எனப் பெற்றதும், பெருமை பொருந்திய மகாமேரு மலையின் கொடு முடியாக விளங்கப்பட்டதும், வாயுதேவனாற் சமுத்திர மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டதும் சுந்தரமூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் திருப் பதிகம் பாடிய சிஷேத்திரங்களையும் தேவர், இருடிகள் முதலியோரால் ஸ்தாபித்த சிவஷேத் திரங்களையும், கலியுகத்திலே கண்கண்ட பரம தெய்வம் எனப் பாருலோளர் மெச்சுகின்ற கதிர் காமத்தையும், சிவனொளிபாதம் முதலிய எண்ணிறைந்த திவ்விய ஸ்தலங்களையும், புண்ணிய நதிகளையும், தன்வயிறுடையதும் தமிழரசால் நெடுங்காலம் செங்கோல் செலுத்தப்பட்டதும், மலைபடு ,காடுபடு, கடல்படு திரவியங்கள்,நீர்வளம்,நிலவளம், மாணிக்கம் ஆகிய நிறைந்து பொலிவதால் அழகாபுரியின் சிறப்பை ஒக்குமியல்புடையதும் ஸ்ரீராமபிரானுடைய திருவடித் தாமரை தீண்டப்படுதலினாலும் பிறவற்றானும் புண்ணிய பூமியாக விளங்குவதும் ஆதிய ஈழ மண்டலமாம் இலங்கையின் வடக்கின் கண்ணேயுள்ள யாழ்ப்பாணத்தினது வடகீழ்ப் பகுதியாகிய வடமராட்சியின் சமுத்திர தீரத்துக் கணித்தாக ஆன்ம கோடிகளை இரட்சிக்கும் பொருட்டு ஸ்ரீபூமி நாயகராகிய பகவான் மகாவிஷ்ணு மூர்த்தியானவர் மச்சாவதாரமாகிய திருஅவதாரத்தை எடுத்துக் காத்தற் கடவுளாய் 'வல்லிபுரம்' எனும் திவ்விய ஷேத்திரத்தில் கோயில் கொண்டு வீற்றிருந்தருளினார். ஆதலினால் இப் பகுதியானது மற்றெப்பதியினும் சிறந்த சுயம்பு ஸ்தலமாய் விளங்குகின்றது. எழுவான் திசையில் வல்லிபுரஆழ்வார் ஆலயமும், படுவான் திசையில் (சுவர்ண) பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயமும் உள்ளன என்று தக்ஷிண கைலாய மான்மியத்திலே சொல்லப்பட்ட பழமையாகிய விஷ்ணு தலங்கள் இரண்டினுள் ஒன்றாகிய இங்கே தேவர், முனிவர், சித்தர், சின்னரர், கவுஸியர், மானுடர் முதலாயினோர் பூசித்து வேண்டிய வேண்டியாங்கு திருவருள் அடையப் பெற்றார் என இதிகாசம் கூறும். அதுமட்டோ! மெய்யன் போடும் வழிபடும் அடியாரது எவ்வித துன்பமும் நீங்குதலினாலும், சற்புத்திரப் பேறணுகுதலி னாலும் பல திறத்தடியார் கூட்டம் நிறைந்து பொலியுந்த தன்மையுடையது. இவ்வற்புதங்கள் அனு பவத்தில் கண்கூடாக எல்லோரும் அறியும் பதியாய் உளது. இத்துணைப் பெருஞ்சிறப்பினை உடைய வல்லிபுரஸ்தலப் பெருமை வடமொழி ஸ்காந்த புராணத்திலே தக்ஷிண கைலாய மான்மியத்தில் ஒரு அத்தியாயமாக அமைந்துள்ளது.

இவ் வல்லிபுர வைபவத்தினைப் பாராயணஞ் செய்பவர்கள் இம்மையில் இஷ்ட சித்திகளை யும், சந்தானப் பேற்றையும், இலட்சுமி கடாட்சத்தையும் உடையவராகி இன்பத்தினை அனுப வித்து மறுமையில் வைகுண்டம் முதலிய புண்ணிய உலகங்களை அடைந்து வாழ்வார்கள்.

ஸ்ரீ ஸ்காந்த புராணத்தில் உள்ள தக்ஷிண கைலாய மான்மியத்தல் கூறப்பட்டிருக்கும் ஸ்ரீவல்லி புர வைபவம். இலட்சுமி கடாட்க்ஷமுள்ள ஸ்ரீ வல்லிபுரமென்னும் ஸ்தலத்தின் மகிமையை ஸ்ரீ சூதமகா முனிவர் சொல்லியிருக்கின்றார்.

முற்காலத்தில் பிரத்தியக்ஷமான கடவுளும், இலக்குமி நாயகரும் ஆகிய ஸ்ரீமகா விஷ்ணு மூர்த்தி ஆனவர் இரணியன் என்னும் பெயருடைய துட்டனாலே வருந்திய தேவர்களது பாது காப்புக்காகத் தரிக்கப்பட்ட கங்கணக் கூட்டங்களானவை அசுர தூதர்களாலே கடலின் கண் எறியப்பட்டன.

பின்பு அவ்வேளையில் பேரொளியையுடைய மீனுருவைத் தரித்த விஷ்ணு முர்த்தியானவர் மானுடப் பிள்ளைபோலத் தோன்றினார். அவளும் சந்தோஷத்தோடு கூடியவளாகிப் பிரியத்தோடு அப்பிள்ளையை ஏந்திக் கொண்டு வெயிலினால் மிக வாடியவளாதலால் ஒரு மரத்தினடியில் சென்று, மகிழ்வோடு தன் சேலையினாலே தொட்டிலைச் செய்து, அத்தொட்டிலின் கண் அக்குழந்தையைச் சயனிக்கச் செய்து அக்கன்னியை தொட்டிலாட்டற்குரிய பாட்டுக்களைப் பாடி அப் பிள்ளையை நித்திரை செய்வித்தாள். இந் நிகழ்ச்சியைக் காண வந்தவர்கள் எல்லோரும் மிகவும் ஆச்சரியமடைந்தவர்களாகி அக் குழந்தையைத் தரிசித்தார்கள்.

அறுகின் முளைபோலும் பச்சை நிறமுடையவரும் பீதாம்பரத்தை உடையவரும், துளசி மாலையைத் தரித்தவரும் ஸ்ரீவத்ஸமெனும் திருமறு மேவும் மார்பையுடையவரும் நான்கு புயங்களோடு கூடியவரும் இடக் கரத்தில் சுதர்சனம் என்னும் சக்கரத்தையும், வலது கரத்தில் சங்கையும் தரித்து ஆதிஷேஷ பரியங்கத்தில் சயனிப் பவரும் வரத அபாயங்களைப் பொருந்தியவரும் ஊர்த்துவ புண்டரத்தினால் அலங்காரமுடையவரும் எனச் சொல்லப்படும் இலட்சுமிவாச திவ்ய சுயரூபத்தை அக்கன்னிகையானவள் தரிசித்து மோகமாகிய ஆகுல முற்றவளாகினாள்.

இந்த அற்புத நிகழ்ச்சியை முறை முறையே ஒவ்வொருவர் வழியாகக் கேள்வியுற்று உவப்போடு கூடி அவ்வூரில் வாழ்கின்றவர்கள் எல்லோரும் அவ்விடத்திலே வந்தனர். அவர்களனைவரும் மகிமையுடைய தேவரும், வாசுதேவரும், உலகநாதருமாகிய கடவுளைத் தரிசித்தனர். உவகையாகிய கடலில் அழுந்தனர். ஒருவர்க்கொருவர் சொல்லுகின்றனராயினர்.

நாங்கள் தனவந்தரானோம், தனவந்தரானோம் எங்கட்கு இரட்சிப்பு உண்டாகும் பொருட்டாகவே சங்கு சக்கரங்களைத் தரித்தவரும், தேவரும் பகவானும், உயிர்களைக் காப்பவரும் ஆகிய ஸ்ரீவிஷ்ணு மூர்த்தி பிரசன்னமாயினரென்று அன்பு கூர்ந்து உவப்போடு துதிக்கத் தொடங்கினார்கள். இம்மக்கள் யாபேரும் மகான்மாவும், பகவானும் சனங்களால் இஷ்ட சித்திகள் பெற வேண்டப்படுகின்ற வரும் ஆகிய ஸ்ரீவிஷ்ணு மூர்த்தியை இவ்வாறே துதித்துப் பெருமகிழ்ச்சி கூறுமுள்ளத்தை உடையவர்களாயிருந்தார்கள்.

இவ்வண்ணமிவர்கள் இருக்கும் போதே பகவனும், இலக்குமிநாயகரும் ஆகிய ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியா னவர் எல்லா உலகத்தாருங் காண மறைந்தவராகி முன்போல மச்சரூபமுடையவராகிக் கடலினுள் மறைந்தார். அங்கு நின்ற எல்லோரும் மயக்கமாகிய வியாகுலமடைந்தவர்களாய் அருமையான தவத்தைச்செய்தார்கள்.

இந்த நிகழ்ச்சியை உத்தம தேவராகிய ஸ்ரீவிஷ்ணு மூர்த்தி திருவுளங்கொண்டு ஓர் பிராமண வடிவத் தோடு அங்கே எழுந்தருளி அத்தவத்தவர்களை நோக்கி அருள் செய்தார். 'தவச்செயலான் மகிமை பெற்ற அன்பர்களே!அஞ்சவேண்டாம் எல்லாப் படைக்கலங்களினுள்ளுஞ் சிறந்தோங்கும் சுதர்சனம் என்னும் சிறப்புத் திருநாமத்தையுடைய இச் சக்கராயுதத்தையுடைய இச் சக்கராயுதத்தை மிக்க பிரீதியுடன் நல்ல சுப முகூர்த்தத்தில் நல்ல இலக்கணத்தில் விதிப்படி பிரதிட்டை செய்து பேரன்போடு நித்திய, நைமித்திய, காமியப் பூசைகளை நடத்தி வழிபடக் கடவீர்கள். இதனைப் பூசித்தால் விரும்பிய எல்லாவற்றையும் அடைவீர்கள்' என்று கூறி அந்தப் பிராமணோத்தமர் மறைந்தார்.

அவர்கள் யாவரும் பேராசையுடையவர்களாய் அடிக்கடி ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியைத் துதித்துத் துதித்துச் சக்கராயுதத்தை வாங்கிக் கொண்டு விரைவிலே மகிழ்வுடன் நகரையடைந்து ஒரு ஆலயத்தை அமைத்து விதிப்படி அச்சக்கராயுதத்தை பிரதிட்டை செய்து முறை தவறாது பூசை நடத்தி புத்திர களத்திரர்களோடும், திரவிய சம்பந்துக்களோடும் மிக்க பக்திஉடையவர்களாய் எல்லோரும் அந்நகரிலே வாழ்ந்திருந்தனர்.

இந்த வல்லிபுரமாகிய மகாஸ்தலம் ஸ்ரீவிஷ்ணுமூர்த்திக்கு உவப்பைக் கொடுக்கிற சிறந்த ஸ்தலமாகும். அன்றியும் வைகுண்டத்தில் அனுபவிக்கும் முக்தியின்பத்தை கொடுப்பதுமாம் வல்லிபுரம் என்னும் மகா திவ்விய க்ஷேத்திரத்தை எந்த மனிதன் இப்பிறவியில் தரிசிக்கிறானோ, அல்லது ஸ்தலத்தின் சிறப்பினை வாயாரக் கூறுகின்றானோ பஞ்சபருவ காலங்களிலும் ஜயந்தியிலும் மற்றம் விஷேச காலங்களிலும் பரிசுத்த மனமுடையவனாகி அன்புடன் அங்கே வீற்றிருக்குங் கடவுளை தரிசிக்கின்றானோ அவனுக்கு எப்போதும் மரண பயமில்லை சரீராரோக்கியம் உண்டாகும். இது உண்மை. அவன் இவ்வுலகில் சுகம் அனுபவித்து தேகாந்தத்தில் ஸ்ரீ விஷ்ணுபத்தை அடைவான்.

வல்லிபுரம் என்று சொல்லப்படும் மகா ஸ்தலம் துன்னாலை, புலோலி வராத்துப்பளை,
கற்கோவளம் என்ற கிராமங்கட்கு இடையில் இருந்த சிங்கை நகர் என்ற
இராசதானியென்று அனுமானிக்கக் கூடியதாயிருக்கிறது.

## ரணையாளர்கள் ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

FITTERS
மான கடைச்சல்
லைகள்,
லைகளுக்கு
ய ஒரே இடம்
FITTERS
தி,நெல்லியடி.

விண்மீன்
சகல விதமான கட்டடப்
பொருள்கள், மாபிள் வகைகள்,
விவசாய உரவகைகள் கிருமி
நாசினிகள், மண்ணெண்ணெய்,
விதை வகைகள் ஒரே இடத்தில்
பெற நாட வேண்டிய இடம்
விண்மீன்
பிரதான வீதி,நெல்லியடி.

WESTERN UNION®
வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமாற்றல் மூலம்
வெளிநாட்டில் உள்ள உறவுகளிடம் இருந்து
பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்
புதிய அம்பிகா
மொத்த,சில்லறை வியாபாரம்
பல்பொருள் வாணிபம்
இல.33, பிரதான வீதி, நெல்லியடி,
தொ.பே. 021 226 3571,
021 226 3139, 021 226 4197

BAJAJ
BAJAJ Distinctly Ahead
கணேசன் மோட்டோர்ஸ்
(பஜாஜ்)
டேவிட் பீரிஸ் மோட்டார்க் கம்பனியின்
முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள்
அசல் உதிரிப்பாகங்களின்
அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்
இல.01-3,பருத்தித்துறை வீதி, நெல்லியடிச் சந்தி,
நெல்லியடி. தொ.பே. 077 704 9364

கைகள் குறித்த
யில் 22 கரட்
கத்தில்
காடுக்கப்படும்
தவறாமல்நாடுமிடம்
தங்க மாளிகை
நகை வியாபாரம்
நெல்லியடி, கரவெட்டி.
021 226 2111


பவானி நகை மாடம்
தங்கப் பவுண் நகை வியாபாரம்
ஓடர் நகைகள்
உத்தரவாதத்துடன்குறித்த
தவணையில்
செய்து கொடுக்கப்படும்.
ம.ம.வித்தியாலய வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 077 322 3060

பிள்ளையார்
பல்பொருள்
வாணிபம்
கால்நடை தீவன விற்பனை
இல.27, பிரதான வீதி,
நெல்லியடி.

CHITHAMPARAPPILLAI
BOOK DEPOT
Nelliady, Karaveddy
Tel: 021 226 3223

வல்லிபுர ஆழ்வாரின் தேர் பவனிக்கு
எமது ஆசிகள் குறித்த தவணையில்
பெற்றுக்கொள்ள
ஒளியருவி டிஜிற்றல்
கலர் லாப்
வடமராட்சியின் ஒரே கூரையின் கீழ்
டிஜிற்றல் photo Print,
டிஜிற்றல் Banner Print
சகல வகையான பிறேம்
சகல வகையான அல்பங்கள்
பிரதான வீதி,நெல்லியடி.
பிரதான வீதி, வல்வெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்

# தேர்ச் சிறப்புமலர் 28.09.2012

## அறங்காவல் சபையின் வாழ்த்து



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும் என்ற பகவத்கீதையின் வாக்கிற்கிணங்க வல்லிபுர மாயவனின் பக்த அடியார்களே உங்கள் ஆலயத்தில் வருடாந்த மஹோற்சவம் 14.09.2012 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவதை நீங்கள் அறிவீர்கள். சம்பாரவிம் என்று சொல்லப்படுகின்ற தேர்த்திருவிழா இன்று (28.09.2012) நடைபெறுகின்றது. நாளையதினம் பார்க்கடலில் தீர்த்தமும் மறுதினம் பட்டித்தீர்த்தமும் நடைபெற்று மஹோற்சவம் பூர்த்தியாகும் . இம்மூன்று தினங்களும் வழிபடும் அடியார்கள் எல்லா வித இக பர சுகங்களையும் பெற்று மாயவனின் அருட் கடாட்சத்தில் மூழ்கி புனிதம் பெறுவார்கள் என்பது திண்ணம். எல்லாம் வல்ல மாயவனின் அடி யார்கட்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அறங்காவல் சபை சார்பாக ச. கேசவானந்தன்**

## காரொளி மேனிக் கண்ணா காப்பாய் நீயே

தேஜோங்கு நவரத்ன சிகர மேலைக் கோபுரத்
தே வீற்றிருக்கும் எங்கள் தேவா!
பூஜித்தவர்க்கு வரம் புரிந் தருள மாதவ
பூமியில் நடனஞ்செய் புனித வினோதா!
வாரோங்கு கடலில் நீராடி வந்து
சீரோங்கு பந்தலில் சிறப்புற அமர்ந்து
ஏரோங்கு மக்கள் ஏற்றமுடன் வாழ
காரொளிமேனிக் கண்ணா காப்பாய் நீயோ

**மு. தணிகாசலம் கலாபூசணம்**

## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன்



வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி ஸ்ரீ வல்லிபுரஆழ்வாரது வருடாந்தப் பெருவிழா (மகோற்சவம்) வரிசையிலே இன்று தேர்த்திருவிழாவாகும் இன்றைய நாள் எம்மைப் போன்ற வடமராட்சி மக்களுக்கு மாத்திரமன்றி உலகம் எங்கும் பரவி வாழும் தமிழ் மக்களுக்கும் ஒரு முக்கியமான நாள் ஆகும். ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரினுடைய தேர்வீதியுலாவைக் கண்ணுற்று நல்லருள் பெற இங்கு குடியிருக்கின்ற பக்த கோடிகளோடு தொலைக்காட்சி, வானொலிகளுக்கூடாகவும் கண்ணாரக் கண்டும் காதாரக் கேட்டுக் கொண்டிருக்கின்ற அனைத்து அடியவர்களுக்கும் எம் பெருமானின் அருட்கடாட்சம் குறைவின்றிக் கிடைக்க வேண்டிக்கொள்கின்றேன்.

வேண்டும் வரமீந்தருளும் வல்லிபுரமாயவனின் கடலெனப் பரந்த இன்னருளோடு இவ்வாலயத்தினுடைய தனிச்சிறப்பாக இன்றும் இருந்து வரும் ஒன்று இங்கு கேளிக்கை களியாட்டங்களுக்கு இடங்கொடாமல் சமய பண்பாட்டு விழுமியங்களுக்கும் சமூக நலனோம்பு வேண்டிய திட்டங்களுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கும் நிருவாகக் கட்டமைப்பாகும்.

மேற்போந்த நடைமுறைகள் மேலும் விரிவு பெறவும் வேண்டுவார்க்கு வேண்டியாங்கு அருள்மழை தொடர்ந்து கிடைத்திடவும் ஸ்ரீ சக்கரத்தாழ்வாரது நாமம் அணிந்து பாதம் பணிகின்றேன்.

**ச. சிவஸ்ரீ, பிரதேச செயலாளர்**
**வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி.**


**Mathu Cream House & Malti spot**
Sanguvely North, Manipay
T.P.0774206465
e.mail-mathuice@hotmail.com
Reg.No:vs/br/320
Director S.K.Vinesh

**லக்ஷன் வீடியோ**
71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

**கேசவன் சில்க்**
பழையசந்தை உட்புறம்
நெல்லியடி.
மந்திகை, புலோலி.
T.P : 021 2264442

**நியூ சந்திரா கிறீம் ஹவுஸ்**
சகல விதமான வைபவங்களிலும் ஐஸ்கிறீம் வகைகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.
077 9237688,
077 5008709

**BOC இலங்கை வங்கி நெல்லியடிக்கிளை**
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் தேர் உற்சவம் சிறப்பாக நடைபெற வாழ்த்துகின்றோம்.
இலங்கை வங்கி
நெல்லியடிக்கிளை

**சிவசக்தி சலூன்**
பிரதான வீதி, நெல்லியடி.

சைவ, அசைவ உணவு வகைகளுக்கு நாடவேண்டிய இடம்
**டைட்டானிக் ரெஸ்ற்றுறன்ற்**
**TITANIC RESTAURANT**
Nelliady
Chinese & Jaffna Special Food
We under take Catering for special Occasion
Mr.R.Kumaran
Tel-021 2262323
077 4084862

Ph : 021-3207437
Cell : 077-7210206
**ஸ்ரீ சுசீலா ஆபரண மாளிகை**
(916 KDM) தங்க நகைகள்,
வெள்ளிப் பொருட்கள் கிடைக்கும்.
No.239, பிரதான வீதி, பருத்தித் துறை.

வல்லிபுர ஆழ்வார் தேர் பவனிக்கு எமது நல்வாழ்த்துக்கள்
உங்கள் வீட்டிற்குத் தேவையான தளபாட வகைகள் யாவற்றையும் மலிவான விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஸ்ரா ர் பேணிச்சர்
பிரதானவீதி, நெல்லியடி.
தொ.பே. 021 2262939,
077 2478800

**த பினான்ஸ் கம்பனி பீ எல் சீ**
* நிலையான வைப்பு
* சேமிப்பு வைப்பு
* குத்தகை கடன்கள்
* தங்க நகை அடகுச்சேவை

த பினான்ஸ் கம்பனி பீஎல்சீ
72 வருட நிலையான நம்பிக்கை

இல. 249, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.
இல. 136, பிரதான வீதி,
நெல்லியடி.
இல. 19, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

**சரவணா ரெக்ஸ்**
171, பிரதான
வீதி, நெல்லியடி
021 2262992


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டுக்கள்

**கல்விப் பணியில்......**

பது/ பசறை தமிழ் மகா வித்தியாலயம்
(1977–1981)

பலாலி ஆசிரியர் கலாசாலை (1981 –1982)

யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
(1982 – 1997)

யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
(1997 – 2012)





## திருவாளர் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம்

**(ஓய்வு நிலை அதிபர் - யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)**

மரம் முழுக்க பூக்களை பரிசளித்த
வேர்களின் வேர்வைக்கு
விழுதுகள் தரும் சிறு வாழ்த்து

மனிதனின் தலையெழுத்தை
எப்படியோ எழுதினான் பிரம்மன்
மாணவர் எம் தலையெழுத்தை
சரியாய் எழுதினீர் - தாங்கள்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
ஊருக்கு தரும் ஒளி விளக்கில்
எட்டுத் திசைகளையும் - நீர்தான்
விட்டு வைக்காமல் கற்றுத் தந்தீர்


கடல் தனில் மிதக்கும் கம்பீர
கப்பல்கள் நாம் எனில் - அதற்கு
கரையோரம் நின்று வழிகாட்டிய
கலங்கரை விளக்கம் - நீர்தான்

பூத்திருக்கும் புன்னகையும்
மலர்ந்திருக்கும் இன் முகமும்
அறுபது மலர்ந்து
அகமகிழும் வேளை தனில்

உமைப் புகழ வார்த்தை இல்லை
ஆனாலும் வாழ்த்துகிறோம் சில வரிகள்
ஆண்டு பல சென்றாலும்
ஆற்றிடுவீர் பல சேவை

**கல்விச் சமூகம்,**
**கம்பர்மலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஒப்ராவின் மினி பிரவுஸர் Opera Mini

இணையப் பாவனையில் பிரபலமான உலாவிகளுள் ஒன்றாகக் காணப்படும் Opera Mini உலாவியானது கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படும் சாதனங்களுக்கான தனது புதிய பதிப்பான Opera Mini 5 ஐ அறிமுகப் படுத்தியுள்ளது. தற்போது அதிகரித்துவரும் சமூக வலைத்தளங்களின் பாவனையைக் கருத்தில் கொண்டு அவற்றுக்கான பல அம்சங்களையும் உள்ளடக்கியதாக இந்தப்புதிய பதிப்பானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தனித்தனியான சமூகத் தளங்களுக்கென புதிய Tab-களை கொண்டுள்ளதுடன் உலாவியைப் பயன்படுத்தும் இடத்தின் அடிப்படையில் தரவுகளைக் கொண்ட Hyperlinks-களை தரக்கூடியதாகவும் காணப்படுகின்றது. மேலும் விரைவான செயற்பாட்டைக் கொண்டதாகக் காணப்படும் Opera Mini உலாவியின் 5 பதிப்பினை Google Play Storet, Android சாதனங்களுக்காக தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

## ப்ளாக்பெரி 10

ரிம் நிறுவனம் ப்ளாக் பெரி 10 என்று ஒரு புதிய மென்பொருளை மிக விரைவில் களமிறக்க இருக்கிறது. இந்த நிலையில் இந்த அப்ளிகேசனின் முக்கியமான சிறப்புகளை ரிம் நிறுவனம் அறிவித்திருக் கிறது.

இந்த மென்பொருளில் முதல் முக்கிய அம்சம் ப்ளாக் பெரி ப்ளோ ஆகும். இந்த சிறப்பு வசதி மூலம் விண் டோஸை சிறியதாக்கி ஓடிக் கொண்டிருக்கும் எல்லா அப்ளிகேசன்களையும் கைத் தொலைபேசியின் திரையில் பார்க்க முடியும். எனவே அடுத்த அப்ளிகேசனுக்கு மாறும்போது பிரதான திரைக்குச் செல்ல வேண் டிய அவசியம் இருக்காது.

அடுத்த முக்கிய சிறப்பு ப்ளாக்பெரி ஹப் ஆகும். இந்த அப்ளிகேசன் மூலம் ஒரே நேரத்தில் பல ஈமெயில் கணக்குகளில் இருந்து வரும் செய்திகளையும் மிகச் சிறப் பாகக் கையாள முடியும். அதேநேரத்தில் இந்த அப்ளி கேசன் நியமனங்கள் மற் றும் முக்கிய கூட்டங்கள் ஆகிய வற்றை நினைவூட்டும்.

இறுதியாக ப்ளாக்பெரி அப்வேர்ல்ட் ஸ்டோர் இனி இசை, படங்கள், டிவி நிகழ்ச்சி கள் போன்றவற்றை விற் பனை செய்ய உள்ளது. குறிப் பாக அப்பிள் ஸ்டோர் மற் றும் கூகுள் ப்ளே ஷாப் போன்றவை செய்வதுபோல் ப்ளாக்பெரி அப் வேர்ல்ட் ஸ்டோரும் செயற்படும். இந்த ப்ளாக்பெரி 10 அப்ளி கேசன் 2013 இன் தொடக் கத்தில் களமிறங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## கூகிளின் செய்திப் பிரிவுக்கு வயது 10



அலுவலகத்தின் உள்பக்கத் தோற்றங்களில் ஒன்று

கூகுள் நிறுவனத்தின் செய்திப்பிரிவு தனது 10 ஆவது வருட நிறைவை கடந்த வாரம் கொண்டாடி மகிழ்ந்துள்ளது. 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22 ஆம் திகதி கூகிளின் செய்திப்பிரிவு உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் கடந்த 10 வருடங்களில் அது மகத்தான வளர்ச்சி கண்டுள்ளது.

72 வகைகளில் 30 மொழிகளில் கூகிள் செய்திச் சேவை இயங்குகின்றது. சுமார் 50 000 செய்தித்தளங்களில் இருந்து கூகிளின் செய்திகள் தொகுக்கப்படுகின்றன என இத்தகவல்களை புகழ் பெற்ற விஞ்ஞானியும் கூகிள் செய்திகளின் ஸ்தாபகருமான கிருஷ்ணா பாரத் தனது ப்ளாக்கரில் அண்மையில் தெரிவித்திருந்தார்.

மேலும் கூகிள் செய்திகளுக்குப் பின்னால் இயங் கும் தொழிநுட்பக்குழு, கூகிளின் மூலம் செய்திகளைத் தேடும் சேவையையும் இதனுடன் இணைப்பதுடன் இவ் விரு சேவைகளும் சேர்ந்து ஒவ்வொரு வாரமும் ஒரு பில்லியன் வாசகர்களுக்குப் பயன்பட்டு வருகின்றன.

கூகிள் தனது செய்திச் சேவை பற்றிக் கூறுகையில் இப்பிரிவு ஆரம்பிக்கும் கட்டத்தில் இருந்த போதுதான் செப்ரெம்பர் 11 நியூயோர்க் கட்டடத் தாக்குதல் நிகழ்ந் ததாக பல்வேறு செய்தி நிறுவனங்களிலும் இருந்து நிமிடத்துக்கு நிமிடம் செய்திகளைச் சேகரித்து வழங் குவதில் முனைப்புக் காட்டிய கூகிள் அன்றிலிருந்து இன்று வரை இவ்வாறே இயங்கி வருகின்றது என்று தெரிவித்துள்ளது.

## விக்கெட் லீக்கின் ரேப்லெட்

உலகமே கூகுள் மற்றும் அமேசான் நிறுவனங் கள் ஆகியவற்றின் அன்ட்ராய்டு ஜெல்லி பீன் ரேப் லெட்டுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்க, இந்தியாவைச் சேர்ந்த நிறுவனமான விக்கெட் லீக் சத்தமே இல்லாமல் தனது புதிய ஜெல்லி பீன் ரேப்லெட்டை விரை வில் களமிறக்க இருக்கிறது.

இந்த புதிய டேப்லெட் அடுத்த வாரம் களமிறக்கப்படும் என்று தெரிகிறது. வாமி நோட் என்று அழைக்கப்படும் இந்த டேப்லெட் நவீன ஜெல்லி பீன் இயங்கு தளத்தில் இயங்கும். இந்த டேப் லெட்டில் 9 இன்ச் அளவுடைய 5 பொயின்ட் தொடுதிரை உள்ளது. ஆனால் இந்த டேப்லெட்டில் இருக்கும் மற்ற தொழில்நுட்ப வசதிகளைப் பற்றி அதிகாரபூர் வமான தகவல்கள் இன்னும் வரவில்லை. எனினும் இந்த டேப்லெட் ஜெல்லி பீன் இயங்குதளத்தில் வருவதால் இதில் இருக்கும் சிறப்பு அம்சங்களும் உயர்ந்த தரத்தில் இருக்கும் என்று நம்பலாம். மேலும் இந்த டேப்லெட் உறுதியா கவும் அதே நேரத்தில் தரமாகவும் இருக்கும் என்று நம்பலாம். அதோடு இந்த டேப்லெட் குறைந்த விலையில் வரும் என்று எதிர்பார்க்கலாம்.




## புதிய அறிமுகம்
### Vega R3 Smart

வளர்ந்து வரும் கைபேசி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன் றான Pantech ஆனது தனது புதிய வடிவமைப்பில் உருவான Vega R3 Smart கைப்பேசிகளை அறிமுகப்படுத்தியது.

கூகுளின் Android 4.0 Icecream Sandwich இயங்கு தளத்தில் செயற்படும் இந்தக் கைப்பேசிகள் 1280 x 720 Resolution உடையதும் 5.3 அங்குல அளவுடையதுமான இயற்கையாகவே IPS Pro LCD தொடுதிரையினைக் கொண்டுள்ளது.

மேலும் இதன் Processor-ஆனது Qualcomm Snapdragon S4 வகையைச் சார்ந்ததாகக் காணப்படுகின்றது.

அத்துடன் பிரதான நினைவகமான RAM 2GB ஐ கொண்டுள்ளது, இவற்றுடன் 13 Mexa Pixels உடைய அதி துல்லியமான கமரா இணைக்கப்பட்டுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

இவை தவிர ஏனைய கைபேசி மின்கலங்களை விடவும் குறைந்த நேரத்தில் மின்னேற்றம் செய்து நீண்ட நேரம் பாவனை செய்யக் கூடிய 2600 mAh மின்கலத்தினையும் உள்ளடக்கியுள்ளது.




## மீண்டும் வழக்குத் தொடர்ந்தது அப்பிள்

காப்புரிமை வழக்கில் மறு விசாரணை கோரி சம்சங் நிறுவனமும், கூடுதல் இழப்பீடுகோரி அப்பிள் நிறுவனமும் மீண்டும் வழக்குத் தொடர்ந்துள்ளன. அப்பிள் நிறுவனத் தின் iPhone, iPod ஆகியவற்றின் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட் பங்களை பிரதி எடுத்து சம்சங் நிறுவ னம் தனது Galaxy Smart Phone தயாரிப்புகளில் பயன்படுத்தியதாக, அப்பிள் நிறுவனம் வழக்குத் தொடர்ந் துள்ளது. இரு நிறுவனங்களும் காப் புரிமை தொடர்பாக பரஸ்பர குற்றம் சாட்டி, 10 இற்கும் மேற்பட்ட நாடுக ளில் வழக்குத் தொடர்ந்துள்ளன.




**"அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாண நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் 100 கோடியே 5 லட்சம் அமெரிக்க டொலரை அப்பிள் நிறுவனத்துக்கு சம்சங் நிறுவனம் இழப்பீடாகச் செலுத்த வேண்டும் என தீர்ப்பு வெளியானது."**

அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாண நீதிமன்றத்தில் தொடரப் பட்ட வழக்கில் 100 கோடியே 5 லட்சம் அமெரிக்க டொலரை அப்பிள் நிறுவனத்துக்கு சம்சங் நிறுவனம் இழப்பீடாகச் செலுத்த வேண்டும் என கடந்த ஒகஸ்ட் மாதம் 24ஆம் திகதி தீர்ப்பு வெளியானது. இது அப்பிள் நிறுவனத்துக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதப்பட்டாலும், கூடுதலாக இழப்பீடுகோரி அப்பிள் நிறுவனம் மீண்டும் வழக்குத் தொடர்ந்துள்ளது. அதேசமயம் வழக்கை மறுவிசாரணை செய்ய வேண்டும் எனக் கோரி சம்சங் நிறுவனம் மேல்முறையீடு செய்துள்ளது. இதற்கு முன்னதாக ஜப்பான் நீதி மன்றம் சம்சங் நிறுவனம் மீது அப்பிள் நிறுவனம் தொடர்ந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது குறிப்பிடத்தக்கது.

## பேஸ்புக்கின் புதிய வசதிகள்

உலகளாவிய ரீதியில் அதி களவான பயனர்களை ஆக்கிர மித்துவரும் பிரபல சமூக இணையத்தளமான பேஸ்புக் தனது பயனர்களுக்காக மேலும் ஒரு புதிய வசதியை அறிமுகப் படுத்தியுள்ளது.

அதாவது பேஸ்புக் பயனர் கள் தமது கணக்கின் ஊடாக தேடிய விடயங்களை முற்றாக அழித்து விடும் (delete search history) வசதியே அதுவாகும்.

பயனர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக அமைந் துள்ள இந்த வசதியினை இது வரை காலமும் பல பயனர்கள் எதிர்பார்த்துள்ள நிலையி லேயே அதனை அறிமுகப் படுத்தி பேஸ்புக் நிறுவனம் நன்மதிப்பையும், நம்பிக் கையையும் வென்றுள்ளது.

இதனை பேஸ்புக்கின் Home Page-ல் Activity Log எனும் பகுதிக்கு சென்று செயற்படுத்த முடிவதுடன், முந்தைய தேடல் தொடர்பான தகவல்களை பார்க்கவும் முடி யும்.

## Virus Total நிறுவனத்தை வாங்கியது கூகிள்

Virus மற்றும் Malware Programs& Scan செய்து இலவ சமாக இணையத்தளத்தில் முடிவுகளைத் தரும், Virus Total என்ற நிறுவனத்தினை கூகிள் விலைக்கு வாங்கி உள்ளது.

இணைய முகவரிகள், கணினியின் வன்தட்டில் உள்ள கோப்புகள் என எதைக் குறிப்பிட்டாலும் இலவசமாகவே இணையம் வழியாக Scan செய்து முடிவுகளைத் தரும் நிறுவனமாக Virus Total இயங்கி வருகிறது.

இந்தச் செயற்பாட்டிற்காக 40 இதற்கும் மேற்பட்ட antivirus குறியீடுகளையும், வழிகளையும் இந்நிறுவனம் பயன்படுத்தி வந்தது. தற்போது கூகுள் இதனை வாங்கி யதன் மூலம் Virus மற்றும் Malware Programs-ஐ தேடி அறிவதிலும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் மற்றும் நவீன தொழில் நுட்ப வசதிகளும் கிடைக்கும் என அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும் எங்களை தேடி வரும் வாடிக்கையாளர்களை இணையத்தில் பாதுகாப்பாக வைப்பது தான் எங்களுடைய முதன்மையான நோக்கம் எனவும் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஷ்ட பேராசிரியர் ஒருவரின் மாதச் சம்பளம் 172,227 ரூபா

## இது பிரதம நீதியரசர் பெறுவதை விட பன்மடங்கு அதிகம் என்கிறார் எஸ்.பி

கொழும்பு, செப். 28

நாட்டில் பிரதம நீதியரசர் பெறும் சம்பளத்தை விடப் பன்மடங்கு அதிகமான சம்பளத்தை பல்கலைக்கழக பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் பெறுகின்றனர். சிரேஷ்ட பேராசிரியர் ஒருவருக்கு ஒரு லட்சத்து 72ஆயிரத்து 227 ரூபாவும், சாதாரண கனிஷ்ட விரிவுரையாளருக்கு 67 ஆயிரத்து 369 ரூபா 44 சதமும் மாதாந்த சம்பளமாக வழங்கப்படுகின்றது. வேறு எந்த ஒரு அரச துறை ஊழியர்களும் பெறாத வகையில் ஆகக் கூடுதலான சம்பளத்தை பெறுபவர்கள் பல்கலைக்கழக பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் தான் என்கிறார் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க.

தகவல் ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அமைச்சர் திஸ நாயக்க இதனைத் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டம் தொடர்பாக அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது-

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களில் 95 வீதமானவர்கள் இந்தப் போராட்டத்துக்கு எதிர்ப்பாகவே இருக்கின்றனர். அதிலும் 5 வீதமானவர்கள் மட்டுமே போராட்டம் என்று கூறிக் கொண்டு பாதையாத்திரை வருகின்றனர்.

பேச்சு மேசையில் இணக்கப்பாட்டுக்கு வருபவர்கள் வெளியே வந்த பின் மாறாகப் பேசுகின்றனர். அரசியல் சார்பான அழுத்தங்களே இந்த மாற்றத்துக்கு காரணம். நாம் பேச்சுக்களை முறித்துக் கொள்ளவில்லை. இன்று பாதையாத்திரை செய்பவர்கள் தமது யாத்திரையை முடித்துக் கொண்டு சிறிது இளைப்பாறிய பின் வரட்டும். மீண்டும் பேசத் தயாராகவே இருக்கிறோம்- என்றார்.

அமைச்சர் திஸ நாயக்க இதன்போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பெறும் சம்பள விவரங்களை வெளியிட்டார். -

சிரேஷ்ட பேராசிரியர்- 172,227 ரூபா 55 சதம், பேராசிரியர்- 157,332 ரூபா 10 சதம், துணைப் பேராசிரியர்- 1, 368,55 ரூபா 10 சதம், சிரேஷ்ட விரிவுரையாளர் (1)- 1, 13,755 ரூபா 80 சதம், சிரேஷ்ட விரிவுரையாளர் (2)- 1, 046, 77ரூபா 80 சதம், விரிவுரைளார்- 83,000 ரூபா 70 சதம், கனிஷ்ட விரிவுரையாளர்- 67, 369 ரூபா 44 சதம். இவர்களுடைய சம்பளம் பிரதம நீதியரசரின் சம்பளத்தை விட அதிகமானது. இவர்களுக்கு வழங்கப்படும் விடுமுறையிலும் பாரிய சலுகைகள் வழங்கப்படவுள்ளன எனவும் குறிப்பிட்டார். (த-2)

## அமெரிக்க திரைப்படத்துக்கு யாழ். மாநகர சபையும் கண்டனம்

முஸ்லிம்களை இழிவுபடுத்தும் காணொலிக்கு கண்டனம் தெரிவித்து யாழ்.மாநகர சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முதல்வர் திருமதி ஜோகேஸ்வரி பற்குணராச தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாநகர சபையின் முஸ்லிம் உறுப்பினர்களான எம்.எம்.எஸ். முஸ்தபா, மொகமட் மிரான் சாகிப், ரமீஸ், அஸ்கர், ஹசன் ஆகியோர் உட்பட கைச்சாத்திட்டு சமர்ப்பித்த பிரேரணை எதிரணியினரினதும் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன் இந்தத் தீர்மானம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்துக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. (16-7)

## தெய்வீகப் பேருரை

யாழ்ப்பாணம்.செப்.28

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரத ராஜப் பெருமாள் தேவஸ்தான பூந்தொட்டி உற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் மஹோற்சவ தினங்களில் தினந்தோறும் நடைபெற்று வரும் தெய்வீகப் பேருரை வரிசையில் இன்று காரை எம்.பி அருளானந்தன் ''சிவனும் விஸ்ணுவும்'' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

நாளை சனிக்கிழமை புரட்டாதிச் சனி வார உற்சவமும் நடைபெறவுள்ளதுடன் 'குருஷோத்திர போர் காட்டும் வாழ்வியல் நெறி' எனும் தலைப்பில் சைவப் புலவர் நித்திய தசிதரன் சொற்பொழிவாற்றுவார். (16)

## கோண்டாவில் - இருபாலை வீதி அகலிப்புக்காக மூடப்படுகிறது

யாழ்ப்பாணம், செப்.28

கோண்டாவில் - இருபாலை வீதி அகலிப்புப் பணிகளுக்காக மூடப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தலைவர் ப.வசந்த குமார் அறிவித்துள்ளார்.

எனவே நாளை முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை இப் பாதை ஊடான போக்குவரத்துக்கள் தடை செய்யப்படுவதுடன், குறித்த காலப்பகுதி வரை பலாலி வீதியில் அமைந்துள்ள உட்புறப் பாதையை பயன்படுத்துமாறு அவர் பொது மக்களை கேட்டுள்ளார். (16)

## சாயி சேவா நிலையத்தில் நாளை மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், செப்.28

நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி நிலையத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. எனவே சகலரையும் பங்குபற்றி பயன்பெறுமாறு சாயி சேவா நிலையத்தினர் கேட்டுள்ளனர். (16)




அம்பிகை அடியார்களே!

நாளைய தினமானது எமது ஆலயத்தில் அருள் வாக்களிக்கும் தாயானவள் வாள்ஏறும் நிகழ்வும் மு.ப.10.00 மணிக்கு இந்த அம்பிகையினுடைய வரலாறுகள் அடங்கிய பக்திப்பாடல் வெளியீட்டு விழாவும் அதனைத் தொடர்ந்து பிரபல பாடகர் சாந்தன் அவர்களுடைய இன்னிசைக் கீதங்களும் இடம்பெறும் எனவே பக்த அடியார்கள் திரண்டு வந்து அம்பிகையின் பக்திப்பாடல் வெளியீட்டு விழாவிலும் கலந்து சிறப்பித்து வாள்ஏற்ற நிகழ்விலும் அருட்கடாச்சத்தையும் பெற்றுச் செல்லும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய தர்மகர்த்தா,
சிவத்திரு சி.நவரத்தினம்


## கண்ணீர் அஞ்சலி

### வண. சி. அரியரட்ணம் (அதிபர் போதகர்)

கடந்த 25.09.2012 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்த தென் - இந்தியத்திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத் தின் குருவானவர் வண. சி. அரியரட்ணம் அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளை கண்ணீர் காணிக்கை யாக்குகின் றோம்.

பேராயம்
தென். இந்தியத்திருச்சபை,
யாழ். அத்தியட்சாதீனம்

குறிப்பு: அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை கொழும்பு - தென்-இந்தியத் திருச்சபை ஆலயத்தில் சனிக்கிழமை (29.09.2012) பி.ப 3.00 மணிக்கு இடம்பெறும்.

தகவல்: வண. D.S. சொலமன்
செயலாளர்,
(சி/1558)(8-14) யாழ்ப்பாண அத்தியட்சாதீனம், வட்டுக்கோட்டை

## மரண அறிவித்தல்



### கந்தையா திருக்குமரன்

அனிஞ்சியன் குளம், யோகபுரம் மல்லாவியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி திருக்குமரன் நேற்று (27.09.2012) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கந்தசாமி- காலஞ்சென்ற அருள்மணி தம்பதியரின் அன்பு மகனும், அனிதா, சிவரேகா, ஸ்ரீரங்கன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தன் (வெள்ளை), கர்ணன் ஆகியோரின் மைத்துனரும், வினோஜா, கரணி, சனுஜன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2012) வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அனிஞ்சியன்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
சிவபாலன் (சித்தப்பா)
(இளைப்பாறிய விவசாயப் போதனாசிரியர்)
புவனேஸ்வரி (சித்தி)

அனிஞ்சியன் குளம்,
யோகபுரம் மல்லாவி. (23398)(3.14)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



விமலராஜன் துஸ்மிதா
(கௌதமி பேக்கரி உரிமையாளர்)

விமல்ராஜன் அவர்களின் செல்வப் புதல்வி துஸ்மிதா அவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகள் பெற்றமைக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

(23395)(9.14) கௌதமி பேக்கரி பணியாளர்கள்

காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழில் 17½ நிலப்பரப்பு கொண்ட காணி விற்பனைக்குண்டு
தொடர்பு:- 0770733532, 0750429847
(23392) (15-14)

Specturam Institute

Montessori Classes வயது எல்லை 3+ - 5
ஆங்கில மொழிமூலம் வார இறுதிநாள்களில் வகுப்புக்கள் நடத்தப்படும். (தமிழ், கணிதம், ஆங்கிலம், பொதுஅறிவு)
தொடர்புகளுக்கு - 0776051245, 0773975179
Director Specturam Institute
ஆடியபாதம் வீதி, (medi Care Clinic அருகில்) கொக்குவில் மேற்கு, கொக்குவில். (23393)(9,14)

FRENCH LANGUAGE GENTRE
FRENCH CLASSES பிரெஞ்சு வகுப்புக்கள்
Easy Way to Learn French

யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரத்திலான French வகுப்புக்களை மேற்கொள்ளும் ஒரே ஒரு நிறுவனம்.
ஆர்வம் உள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.
France, Canada செல்ல உள்ளோரும் யாழ்ப்பாணத்தில் உடன் அனுமதியை பெற்றுக் கொள்ளுங்கள்...
ஆரம்பம் : 06.10.2012 சனிக்கிழமை
பல வருடகால அனுபவம் வாய்ந்த ...
ஆசிரியர்: Mr. V.JEGAN (Teaching Trainning in France)
குறிப்பு : யாழ்ப்பாணத்தில் மட்டும் பிரத்தியோக வகுப்புக்கள் (Personal Classes) எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்.
யாழ்ப்பாணத்தில் ....
83, Palaly Road, Kantharmadam, Jaffna.
(பீசா உணவகம் அருகில் உள்ள லேனில்)
தொடர்புகளுக்கு [illegible]
மானிப்பாயில்
Jaffna Road Manipay (பிரதேச சபை முன்பாக)

வளமான எதிர்காலம் உ[illegible]தாக மனமுவந்து வாழ்த்துகின்றோம்



ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகள் பெற்று சாதனைபடைத்த எங்கள் அன்புச் செல்வன்

சிவகுமார் நிசாயீசன்

அவர்கள் இறைவன் அருளால் கல்வியில் மேலும் பல சாதனைகள் படைக்க மனமுவர்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
குலோத்துங்கசேகரம் (பெரியப்பா)
பெரியம்மா, வாணிஅக்கா, கிரன் அண்ணா, அச்சு அண்ணா, தவநிதன் (மாமா), வித்தியா அக்கா, விதுலாஸ்
(சி/3698)(9.14)

திருநெல்வேலியில் அபான்ஸ் வழங்கும் அதிரடிச்சலுகை

மிக மிக குறைந்த ஆரம்பக்கொடுப்பனவுடன் LCD, LED, 3D தொலைக்காட்சிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.



மிகக் குறைந்த ஆரம்பக் கொடுப்பனவுடன். LAP TOP



இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே
* நிபந்தனைக்கு உட்பட்டது
உடன் நாடுங்கள் திருநெல்வேலி அபான்ஸிற்கு
T.P : 021 2220247
269, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்.


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சரஸ்வதி (மீனாட்சி)

வதிரி வீதி இமையாணன் மேற்கு உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சரஸ்வதி (மீனாட்சி) நேற்று (27.09.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் மனைவியும், மகாலிங்கம், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சேதுநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சோதிலிங்கம், சுந்தரலிங்கம், விமலாதேவி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயும், பத்மாவதி, யோகேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற தவனேசன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2012) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வதிரி வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல்
சு.சஜீபன் (பேரன்)
(சி/3696)(9.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்.

தோற்றம் 27 ★ 07 ★ 1924



மறைவு 31 ★ 08 ★ 2012

அமரர்

### மங்கையற்கரசி கணபதிப்பிள்ளை

மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட, கடந்த 31.08.2012 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் மங்கையற்கரசி கணபதிப்பிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை 29.09.2012 சனிக்கிழமை (நாளை) முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மத்திய வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

(சி/3681)(3.14)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சிவநாதபிள்ளை

(முன்னாள் ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க களஞ்சிய முகாமையாளர்)

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிவநாதபிள்ளை நேற்று (27.09. 2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி.தயாளன்
(மகன்)

நாரந்தனை வடக்கு, (23391) (15-14)

## விற்பனைக்கு

பாக்கு சீவும் இயந்திரம்
குளிர்சாதனப்பெட்டி (BD19)
கடைக்கு உகந்தது.
தொடர்புகளுக்கு:-
0778590980

(23378) (15-14)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் குருசோ வீதியில் சகல வசதியுடன் மேல் வீடு வாடகைக்கு உண்டு
தொடர்பு:
0729816327, 0212228363
0774846698

(23376) (15-14)

## வாடகைக்கு

திருநெல்வேலியில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீட்டில் இரு அறைகள் கொண்ட Annex பல்கலைக்கழக மாணவிகளுக்கு வாடகைக்கு உண்டு
தொடர்பு:
075 0436325

(23376) (15-14)

## தவறிவிட்டது

மரியநாயகி அந்தோனி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (505330579V) யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(23374) (9.14)

தொடர்பு- 0750707990

## கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும் சி.விவேகானந்தம் அவர்களின் அன்புத் தாயார் அமரர்

*சின்னத்தம்பி சீதேவி*

அவர்கள் 23.09.2012 அன்று சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

(சி/3682)(3.6.7)

பிரதேச செயலரும்
ஊழியர் நலன்புரிச்சங்க அங்கத்தவர்களும்
பிரதேச செயலகம்,பருத்தித்துறை.

## நடை பஜனை

சின்னக் கதிர்காமம் என அழைக்கப்படும் வெருகலம்பதி சித்திர வேலாயுத சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு 11 ஆவது வருட நடை பஜனை நடைபெறவுள்ளது.

நாளை காலை 7 மணிக்கு திருக்கோணேஸ்வர ஆலயத்திலிருந்து வேல் நடை பஜனை ஆரம்பமாகும். தொடர்ந்து 5 தினங்கள் நடைபெறும் இந்த நடை பஜனை மீண்டும் எதிர்வரும் ஒக்ரோபர் 3 ஆம் திகதி வெருகலம்பதி சித்தி விநாயகர் ஆலயத்தை வந்தடையும். மறு நாள் தீர்த்தம் நடைபெறவுள்ளது.

## சீரடி பாபாவின் பிறந்த தினம்

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சாயி சேவா நிலையத்தில் இன்று காலை 8.30 மணிக்கு சீரடி சாயி பாபாவின் அவதார தினம் நடைபெறுகின்றது.

## காணி விற்பனைக்கு

ஐயனார் கோயிலடி கொடிகாமத்தில் 14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
0778659240,
0778446361

(21532) (15-14)

## ஓட்டோ விற்பனைக்கு

NP QX- xxxx எனும் இலக்கமுடைய சொந்தப் பாவனையுடைய 13000Km ஓடிய பச்சை நிறமுடைய 4 Strok ஓட்டோ விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0774766897

(23383)(9.14)

## மரண அறிவித்தல்

### Dr. கதிரவேலு சோமசுந்தரம்

( ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி RMP)

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், கிளுவனை, கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்த வருமான Dr.கதிரவேலு சோமசுந்தரம் நேற்றுமுன்தினம் (26.09.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும், இரத்தின பூமணியின் (ஆச்சி), அன்புக்கணவரும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் (Lawyer Clerk) அன்பு மருமகனும், தருமரத்தினம் (ஆஸ்திரேலியா), சரோஜினிதேவி (கனடா), துரைரத்தினம் (கனடா), கிருஷ்ண ரத்தினம் (கனடா), மாலினிதேவி (கனடா), குணரத்தினம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற முருகேசு, சுப்பையா கனகசபை, பார்வதிப்பிள்ளை, கதிர்காசிப்பிள்ளை, செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மீரா, ராஜினி, யோகேஸ்வரி, ஞானாம்பிகை ஆகியோரின் அன்புமாமனாரும், திவ்யா, கரிஷ், கஸ்தூரி, காயத்திரி, அம்பிகை, அபிராமி, அநந்தன், சகானா, சாயினி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை 29.09.2012 மாலை 5.00 - 9.00 மணி வரை **No.8911 Woodbine Aue** இல் அமைந்துள்ள **Chapell Ridge Funeral home** இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (30.09.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 - 10.30 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் 1200 **Haines Road, Bowmanvillie on** எனும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
[illegible]

கனடா

## கண்ணீருடன்



கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எமது மன்றத்தின் கலைச் செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்த துணையாளனாகவும், நிர்வாக ஆலோசகராகவும், கணக்காய்வாளனாகவும் பணி செய்த

*செபஸ்தியாம்பிள்ளை சாமிநாதர்*

அவர்கள் 23.09.212 இல் அமரத்துவம் அடைந்ததையிட்டு ஆறாத்துயரடைந்துள்ளோம். அவருக்கு எமது இதயம் கனக்கும் கண்ணீரை காணிக்கையாக்குவதுடன் அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இயக்குநர்,
அங்கத்தவர்கள்
திருமறைக்கலாமன்றம்

(சி/3678) (15-14)

*குறிப்பு:- இன்று பி.ப 2.15 மணியளவில் அமரர் சாமிநாதர்அவர்களின் பூதவுடல் எமது மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்த்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு எமது மன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.*

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### மேதக்க கந்தையா குலசேகரம் பிள்ளை

(J.P)

அன்னை மடியில் 30 ★ 08 ★ 1926



அம்பாள் திருவடியில் 14 ★ 10 ★ 1997

திதி: சதுர்த்தசி

ஆறி இருந்த மரம் அரவணைத்து நிழல் பரப்பி
ஆதரவாய் அகன்று ஓங்கி வளர்ந்த மரம்
பாறி விழுந்து ஆண்டு பதினைந்து
அறியாமல் தெரியாமல் அகன்றதய்யா
ஊறி உடலோடு உயிரோடும் உங்கள்
உணர்வோடும் ஒன்றிவிட்ட விழுபளையாள் ஆலயம்
ஆறுகோடிதாண்டி அன்பில் அழகுகாட்ட
அடியார்கள் உம் புகழ் பேசி ஆசிகேட்க
வீறு கொண்ட உணர்வலைகள் விம்ம
கொடுங்கள் கோடிகோடியாய் என்று கொடுப்பீரே
ஏறுகின்ற அப்புகழே இவ்வாண்டு அஞ்சலியில்
புகழ்ச் செய்தியாக வாழ்த்துகிறோம் வணங்குகின்றோம் ஐயா.

நிரந்தர முகவரி பழமுதிர்சேலை
நாகர்கோவில் றோட்
எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்
தற்போதைய முகவரி. மானிப்பாய் வீதி,
உரும்பிராய்.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை புஸ்பராணி

பிறப்பு 1956 ★ 06 ★ 14



இறப்பு 2002 ★ 09 ★ 18

அம்மா எங்கள் இதயக் கோயிலில்
வாழும் அன்புத் தெய்வமே
பத்து ஆண்டுகள் ஆனபோதிலும்
உங்களைக் காண ஏங்குது எம் உள்ளம்
தெய்வமாகி விட்ட எங்கள் அன்புத்தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி

(சி/1548)(8-14)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும்பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# உலகில் விரைந்து பரவுகிறது உயிர்க்கொல்லி புதிய வைரஸ்

## எச்சரிக்கிறது உலக சுகாதார நிறுவனம்

சில ஆண்டுகளுக்கு முன்பு சார்ஸ் எனும் நோய் உலகம் முழுவதும் பரவி ஏராளமானோரின் உயிரைப் பறித்தது. இப்போது அதே போல் ஒருவித வைரஸ் பரவி வருகிறது. சவுதி அரேபியாவில் இந்த ஆண்டு தொடக்கத்தில் 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் மர்ம நோயால் இறந்தார். அவரை தாக்கிய நோய் எது என்று ஆய்வு செய்தபோது அது புதிய வகை வைரஸ் தாக்குதலால் ஏற்பட்டது என்பது தெரிய வந்தது.

இந்த நிலையில்கட்டார் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் இதே நோய் தாக்கி இருக்கிறது. அவர் சவுதி அரேபியாவில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு லண்டன் சென்றார். அங்கு நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். தற்போது அவருடைய சிறுநீரகம் பாதிக்கப்பட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருக்கிறார். அவரையும் புதிய வகை வைரஸ் தாக்கி இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

அந்த வைரஸை லண்டன் சுகாதார மையம் ஆய்வு செய்தது. இதுவரை மனிதனை தாக்காத புதிய வகை வைரஸ் இது என்று உலக சுகாதார மையம் தெரிவித்து இருக்கிறது. இந்த வைரஸ் மேலும் பரவினால் பெரும் உயிரிழப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக சுகாதார மையம் எச்சரிக்கிறது. இதையடுத்து உலக சுகாதார நிறுவனம் உலகம் முழுவதற்கும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த வைரஸை அழிக்க உடனடியாக மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியும் நடந்து வருகிறது. (3)

# ஆறுமுக நாவலர் நினைவு தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டிகள்

அகில இலங்கை இந்து மாமன்றம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளது. மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இந்தக் கட்டுரைப் போட்டிகளில் ஆண்டு 5 முதல் 8 வரை உள்ள கீழ்ப்பிரிவு மாணவர்கள் "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை என்றும் நினைத்துப் போற்றுவோம்" எனும் தலைப்பில் 150-200 சொற்களுக்கு குறையாமல் கட்டுரைகளை எழுதி அனுப்ப வேண்டும்.

ஆண்டு 9 தொடக்கம் ஆண்டு 11 வரையிலான மத்தியபிரிவு மாணவர்கள் "நாவலர்பெருமான்காட்டிய வழியில் வாழ்வோமாக" எனும் தலைப்பில் 250-300 சொற்களுக்குள் கட்டுரைகளைஎழுதிஅனுப்பவேண்டும்.

மேல்பிரிவாக உள்ள உயர்தரவகுப்பு மாணவர்களுக்கு "நாவலர் பெருமான் ஏற்படுத்திய சமய மறுமலர்ச்சி" எனும் தலைப்பில் 350-500 சொற்களுக்கு குறையாமல் கட்டுரைகளை எழுதி அனுப்ப வேண்டும். போட்டியாளர்கள் ஏ4 தாளில் தமது சொந்த ஆக்கம் என்பதை பாடசாலை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்தி அனுப்ப வேண்டும்.

கட்டுரைகளை ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுச் செயலர், அகில இலங்கை இந்து மாமன்றம், இல 95/1 சேர் சிற்றம்பலம் ஏ காட்டினர் மாவத்தை கொழும்பு-2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3)




அச்சுவேலி வளலாய் காளி கோயில் வருடாந்த பெருந் திருவிழா கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

* * *

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா இன்று மாலை 5.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.45 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். அதே வேளை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பேரணிப் பவனியும் நடைபெறவுள்ளது.

திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெற்று தேர்ப் பவனியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (3-135)

# உனக்குள் தேங்காய்

ஆலயத்திற்கு செல்லும்போது பூஜைத் தட்டில் தேங்காய் முக்கிய இடம் பெறுகின்றது. தேங்காயைப் பார். மேலே பளபளப்பான பச்சை மட்டை. பச்சை மட்டையை உரித்து அகற்றியதும் சிக்கல் நிறைந்த நார்கள். நாரை இழுத்துப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கும் ஓடு ஓட்டுக்குள்ளே வெண்மை நிறத்தில் தேங்காய்ப் பருப்பு. அதனுள்ளே இன்சுவையான இளநீர்.

பளபளப்பைக் கண்டு மயங்கி விடாதீர்கள். உள்ளே பெரும் சிக்கல் காத்திருக்கின்றது. சிக்லைத் தூக்கி வீசி எறி. உள்ளே உறுதியான உள்ளம் காத்திருக்கின்றது. உனக்குள்ளே உன் அறிவை வளர்க்க உணவு காத்திருக்கின்றது. உனக்குள்ளேயும் உனக்காக ஞானத் தாகத்தைத் தீர்க்க தண்ணீர் காத்திருக்கிறது.

உன்னையே ஒருமுறை திரும்பிப்பார். உன்மேற்றோலில் பளபளப்பு. உள்ளே உணர்வுகளைத் தட்டி விடும் நரம்புகள். சதைக் கோளங்கள் இவைகளைத் தாங்கி நடக்க உறுதியான எலும்பு. உள்ளே மென்மையான உள்ளம் அதற்குள் கருணை வெள்ளம்.




உனக்குள் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் உண்டு. தேங்காயின் பச்சை மட்டை மாயாமலம். உரித்து எடுக்கின்ற நார் கன்மமலம். உடைத்து அகற்றுகின்ற ஓடு ஆணவ மலம். இந்த மும்மலங்களும் அகன்றால் சித்த சக்தி என்னும் தேங்காயின் வெண்பருப்புத் தோன்றும். இறைவா எனது மும்மலங்களையும் அகற்றிப் பரஞான ஒளியைக்காட்டி அதனருளால் பரமானந்த அமிர்தத்தை நுகரச் செய்வாயாக என்பதை உணர்த்துவதே ஆலயங்களில் தேங்காய் உடைப்பதன் தத்துவமாகும்.

நன்றி: ஞானச்சுடர்

# யாருக்குப் பிரதமர் பதவி?

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

2010 ஆம் ஆண்டு பஸில் ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்படுவார் எனப் பலர் நம்பினர். மேர்வின் சில்வா கூட ஒரு முறை பஸில் ராஜபக்ஷவையே அதுகுறித்து மஹிந்தவிடம் சிபார்சு செய்திருந்தார். பசில் ராஜபக்ஷ கூட பிரதமர் பதவிக்கான தனது விருப்பை பல தடவைகள் பல விதங்களில் வெளிப்படுத்தி வந்திருந்தார். தாம் ஒருபோதும் பிரதமர் பதவியை வகிக்கப் போவதில்லை என அண்மையில் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்த போதிலும், பிரதமர் பதவி வகிக்க பொருத்தமான ஒருவரை ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் கலந்து பேசித் தெரிவு செய்துகொள்ள இயலுமெனவும் அவர் தெரிவித்திருந்தார். கடந்த ஏப்ரல் மாதத்தில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவே புதிய பிரதமராக நியமிக்கப்படவுள்ளதாக ஒரு கதை உலவிய போதிலும் இதுவரை அத்தகையதொரு அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

புதிய பிரதமர் ஒருவரை நியமிக்கும் விடயத்தில் ஜனாதிபதி மஹிந்த பெரும் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளமை இதிலிருந்து புலனாகின்றது. தமது அரசியல் பாதுகாப்பு, அரசின் உறுதியான இருப்பு மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தவர்களது விருப்பு ஆகிய மூன்று விடயங்களிலும் கவனம் செலுத்தியே புதிய பிரதமராக ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய இக்கட்டுநிலை ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் மிக்க பலம் வாய்ந்த அரசாக விளங்கிய காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான கூட்டணி அரசிலிருந்து கூட்டுக்கட்சிகள் வெளியேறியமையால் இன்று இந்தியகாங்கிரஸ் அரசு வீழ்ச்சியுறும் நிலை உருவாகியுள்ளது.

அதிகாரம் என்பது ஏணியும் பாம்பும் விளையாட்டில் உயரச் செல்வதும் கீழிறங்க நேர்வதுமான பயணமொன்றை ஒத்தது என்பதனை இந்தியாவுக்கு விஜயம் செய்து திரும்பியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த புரிந்துகொள்ளாதிருப்பது ஆச்சரியமே! ஏணியும் பாம்பும் விளையாட்டில் ஏணிமூலம் ஏறிச்செல்ல வாய்ப்பமைவது போன்று பாம்பின் ஊடாகக் கீழிறங்கவும் நேரக்கூடும் . இது அரசியல் அதிகாராத்துக்கும் பொருத்தமானதொன்றே என்பதனை அரசியல் தலைவர்கள் மனதிருத்திச் செயற்படப் பழகிக் கொண்டால் வெற்றியால் மமதையும் தோல்வியால் மனக்கவலையும் ஏற்படாது தவிர்த்துக்கொள்ள இயலும்.

# ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

அண்மையில் நடைபெற்ற ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சைப்பெறுபேறுகள் கடந்த செவ்வாய்க் கிழமை வெளியாகின. இதன்படி பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு:-

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

ஜெ.நிக்சன்- 180, ரீ.பிருந்தன்- 169, டே.துஷாரா- 168, த.ரிஷானி- 166, வே.யதுசன்- 160, ர.பிதுர்ஷனா- 159, ஜெ.அருள்பிரகாஷ்- 158.

**அச்சுவேலி ஆரம்ப பாடசாலை**

சசிஆனந்தம் லதுஷன்- 168, குலேந்திரன் சிஷானுகா- 168, ஜோன்கெனடி பிரசன்னா- 157, சிவசுப்பிரமணியம் மதுஷன் 156, சிற்றம்பலம் ஏகதர்ஷன்- 153, அற்புதராஜா பகீர்ஷானா- 152, அருள்ராசா கிருத்திகா- 150.

**வவுனியா ஓலுமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை**

சுந்தரலிங்கம்தனுஷா- 159, காந்தரூபன் தேனுகாந்- 152

**இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை**

அகிலநாயகம் கோகின்- 168 (மாவட்ட மட்டத்தில் 11), கிரிதாசன் சஞ்சயன்- 146

**வட்டக்கச்சி மகா வித்தியாலயம்**

நந்தகுமார் கவிஞ்சனா- 149

**வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலை**

பத்மநாதன்நிதர்சிகன்- 151

**யாழ் சென் .ஜேம்ஸ் றோ.க. மகளிர் பாடசாலை**

பில்ட்டன் மேரியூலியற்-151

**யாழ் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை**

பொலிசன் சந்தோஸ்- 154

**விசுவமடு மகா வித்தியாலயம்**

ரஞ்சித் துரவி- 183 (மாவட்ட மட்டம் 1), (ச.தூங்கவி- 179 (மாவட்ட மட்டம் 4), க.துவாரகா - 175 (மாவட்ட மட்டம் 7), ம.பவித்திரன்- 173 (மாவட்ட மட்டம் 10), வி. தனுஷ்யா- 168, மு.சஞ்சிகா-165, அ.சரவண்யா- 165, சி.தர்சினி- 159, க.வைஷ்ணஸ்ரீ- 158, தி.நிவேதிகா- 158, மு.சந்திகா- 158, ச.துஷ்யந்தினி- 154, கு.குமணன்- 149, ஜெ.துவாரகா- 149, இ.சங்கீதா- 147, த.நிக்ஷா- 146

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

லோகேஸ்வரன் சிறிஹீரன்-191, கதிரவேற்பிள்ளை காருண்யா-184, விமலதாசன் டனுசிகா- 176, தயாபரன் வைஸ்ணவன் - 175, மனோகரன் விஜிதா- 173, யாதவன் மாதங்கி- 172, பிரணவரூபன் வித்தகி-170, ஜெகரட்ணம் உமாசுதன் -169, சரத் சந்தர் தர்சனா - 169, பரமலிங்கம் திரிகரன் - 169 குலநாதன் தர்மீகன்- 169, ராஜமுகுந்தன் கீர்த்தனா- 168, ஞானசேகரன் ஹம்பீரன்- 163, மோகன் பிரேந்ரா - 162, புஸ்பராஜா கிறிஸ்ரின்- 162, மாதவன் நாகதர்சிகன்- 160, குமரகுரு கீதாஞ்சலி- 159, தில்லைச்செல்வன் தினுஜன் - 158, தவரட்ணம் பகீரதி- 155, சதாணந்தன் ராகுலன்-155, கனகேந்திரன் கணநாதன்- 155, திலகராசா கரிஸ்லன் - 155, சிறீதரன் துவாரகன்- 154, சுதாகரன் யுலக்ஷனா -154, விக்னராஜா அர்ச்சாயினி- 154, விசாகலிங்கம் மேனகன்-154, தயாபரன் அபிஷா- 153, ஜூலியன் நிர்மலராஜ் இஷாக்- 152, மகேஸ்வரன் அனுஷன்- 151, மயூரதன் கேதுசன்- 151, மதியழகன் கஜானன்- 150, வில்வநாதன் தனுகரன்- 150, தேவராஜா ஜனோஜன் - 149

**கிளிநொச்சி மகா வித்தியாலயம்**

தேவராசா சபில்சன் 177 (மாட்டநிலை 1), திவாகரன் அருளினி 175, செல்வானந்தன் குமுதினி 172, லோகநாதன் நிகாருஜன் 170, சிவகாந்தன் மதுரா 170, இராஜகுலசிங்கம் சாதனா 168, ஜோயல்பியசீலன் பிரவிந்தன் 167, அஜித்குமார் அனுசாந்தன் 163, சிவகுமார் பானுஜா 162, மோகன்ராஜ் புகழினி 162, இன்பானந்தன் துவாரகா 160, தேவதாஸ் விதராகி 159, மனோகரன் யதுர்சன் 159, நடராசா தரணிகா 159, இராசேந்திரன் பகீரதன் 157, ஸ்ரீரங்கநாதன் அபிசேகன் 156, ஸ்ரீகாந்தா நிதுசிகா 156, கிருஸ்ணபாகலன் கானரசன் 154, தயாபரன் இளங்கோவன் 153, வசந்தகுமார் சுயாங்கி 152, விஸ்வநாதன் தர்சிகன் 150, வடிவேல் கஜநிஸ்யா 150, சுப்பிரமணியம் செந்தூரகுமரன் 149, செல்வதேவன் நிசிந்தா 149, தவரவி சந்துஷா 148, சத்தியாநந்தன் பதுமிகா 147, சிறிதரன் விக்னேஸ் 147, யுவநேசன் யதுலன் 147

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

விபுசா சிறிகரன் 177, பிரியங்கா லோகதாசன்176, யுசந்தா யூலன்174, எப்சிபா ராஜேஸ்வரன்169, விதுஷிகா விசுவலிங்கம்162, வித்தியா விஜயதாஸ்158, யாழினி மணிவண்ணன்154, நந்தாயினி காந்தராசா154, குமரேஸ்வரன் வஜிதரன்154, தனுஷிகா சேதுபதி152, கருணாகரன் கவிஸ்ணன்152, செல்வக்குமார் பத்மப்பிரியன்151, வினோதவாணி தர்மகுலசிங்கம்149, அனுஷியா கருணாகரன் 148 (3-28-500-51-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணம் கலக்கின காமாட்சி , பற்றீசியன் அணிகள்

**7 இலக்குகள் வித்தியாசத்தில் அரியாலை மத்தியை ஸ்ரீ காமாட்சியும், 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மானிப்பாய் பரிஷை பற்றீசியன் அணியும் மண்டியிட வைத்தன.**

யாழ்ப்பாணம்,செப்.28

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான '2020' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் ஸ்ரீகாமாட்சி , பற்றீசியன் அணிகள் வெற்றியீட்டின.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதன்போது முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிரோஜன் 11 ஓட்டங்களையும், கிருபா 21 ஓட்டங்களையும், நிரோ 11 ஓட்டங்களையும், சுதர்சன் 16 ஓட்டங்களையும் தனது அணி சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி சார்பாக ரதீசன் 3 இலக்குகளையும், பவி , ஹரிவதனன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

123 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணியினர் 14.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை மாத்திரமே இழந்து 126 ஓட்டங்களை எடுத்து, வெற்றிக் கோட்டைதொட்டனர். இதில் அரவிந்தன் 47 ஓட்டங்களையும், பிரணவன் 22 ஓட்டங்களையும், திவாகர் 16 ஓட்டங்களையும் ஹரிவதனன் 16 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அரியாலை மத்திய விளையாட்டுக்கழக அணி சார்பாக நிரோஜன், சத்தியேந்திரன், ஜெரூசன், சுதர்சன் ஆகியோர் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர்.

மற்றொரு ஆட்டத்தில் பற்றீசியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 185 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 50 ஓட்டங்களையும் மிதுபாலன் 40 ஓட்டங்களையும் , முரளி 38 ஓட்டங்களையும், எரிக்பிரதாப் 29 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி சார்பாக நிதர்சன் 2 இலக்குகளையும்,டிசான், சுபாஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

186 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களை மட்டும் பெறமுடிந்தது. இதனால் 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மானிப்பாய் பரிஷை மண்டியிட வைத்தது பற்றீசியன் அணி. இதில் வினோத் 43 ஓட்டங்களையும் சுபதீபன் 31 ஓட்டங்களையும், துவாரன் 19 ஓட்டங்களையும், நிதர்சன் 16 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி சார்பில் சுஜீவன் 5 இலக்குகளையும், நோபட் 2 இலக்குகளையும் ,மிதுபாலன், எரிக்பிரதாப் ஆகியோர் தலா 1 இலக்கினையும் வீழ்த்தினர். (ங-23)

# கொழும்பு என்.ஸி.ஸியை சுருட்டியது யாழ். மத்தி

கொழும்பு என்.ஸி.ஸி. விளையாட்டுக்கழகத்துக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையேயான 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் யாழ். மத்திய கல்லூரி கிரிக்கெட் அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு என்.ஸி.ஸி. அணி 29.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. மத்திய கல்லூரியின் அலன்ராஜின் அற்புதமான பந்து வீச்சை சமாளிக்க முடியாமலேயே என்.ஸி.ஸி. அணி இவ்வாறு சொற்பமான ஓட்ட எண்ணிக்கைக்குள் முடங்கியது.

இதில் தரக 60 ஓட்டங்களையும் , விம்சார 45 ஓட்டங்களையும் , டிவைன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பாக அலன்ராஜ் 5.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களை கொடுத்து 5 இலக்குகளையும், தனுசன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் மேஸ்ராயன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

164 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 29.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகள் வித்தியாசத்தில் என்.ஸி.ஸி. அணியை வீழ்த்தியது.

இதில் திரேசியன் 61 ஓட்டங்களையும் , டினோயன், யூட் , தனுசன் ஆகியோர் தலா 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொழும்பு என்.ஸி.ஸி. கிரிக்கெட் அக்கடமி அணி சார்பாக கமேயிற் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் , சச்சின் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களை கொடுத்து 1இலக்கினையும் கைப்பற்றினர். (ங-23)

# சென்.ஜோன்ஸின் பந்து வீச்சில் வீழ்ந்தது கனகரத்தினம் ம.ம.வி.

யாழ்ப்பாணம், செப்.28

இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடத்தும் பிரிவு 3 இற்கான 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் சென். ஜோன்ஸ் கல்லூரி ''ஏ'' அணிக்கும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அபார வெற்றியீட்டியது.

அண்மையில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. எனினும் சென்.ஜோன்ஸ் அணியின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் கனகரத்தினம் ம.ம.வி. வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் இலக்குகளை பறிகொடுத்தனர். இறுதியில் கனகரத்தினம் ம.ம.வி. அணி 16.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 61 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இதில் பிரசாத் 15 ஓட்டங்களையும் சதீஸ் 17 ஓட்டங்களையும் அடித்து, கனகரத்தினம் ம.ம.வி. அணி ஓரளவு கெளரவமான ஓட்ட எண்ணிக்கையைத் தொட உதவினர்.

பந்து வீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி ''ஏ'' அணி சார்பாக கிலாரன்ஸ் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், லோகதீஸ்வர் 2.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், கானமிர்தன் 3பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டங்களை கொடுத்து 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

62 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி ''ஏ'' அணி 11.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் எட்டு இலக்குகள் வித்தியாசத்தில் இலகுவாக கனகரத்தினம் ம.வி. அணியை வீழ்த்தியது சென்.ஜோன்ஸ்.

இதில் கபில்ராஜ் 12 ஓட்டங்களையும் , கானமிர்தன் ஆட்டமிழக்காது 16 ஓட்டங்களையும், கெளரங்கன் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கனகரத்தினம் ம.ம.வி. அணி சார்பில் சதீஸ் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ங-23)

# வென்றது வல்வை அணி

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதல்கட்ட போட்டிகள் பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையேநடத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களின் 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில்வல்வை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன்கள் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வல்வை விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கணக்கில் விண்மீன்கள் அணியை வீழ்த்தி சம்பியனாகியது. (ங-23)

# தனபாலன் ஞாபகார்த்த கிரிக்கெட் இன்று ஆரம்பம்

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.தனபாலன் ஞாபகார்த்தமாக இலங்கை வங்கி, மற்றும் ''சீமா' ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படும் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான அணிக்கு 6 வீரர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி , வல்வெட்டி சிதம்பரக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி (சிவப்பு அணி), கைதடி நவீல்ட் பாடசாலை, யாழ்.மத்திய கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி(கறுப்பு அணி), பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய 12 அணிகள் இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளன.

ஏ,பி,சி,டி என்னும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. யாழ்.மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் மாலை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள். (ங-23)

# யுனிபைட், செவ்வானம் அணிகளுக்கு அபார வெற்றி

யாழ்ப்பாணம், செப்.28

வவுனியா செவ்வானம் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'வவுனியா பிறிமியர் லீக்' கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்றஆட்டங்களில் யுனிபைட் விளையாட்டுக் கழகம் மற்றும் செவ்வானம் விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

யுனிபைட் விளையாட்டுக் கழகத்துக்கும் ,தமிழ் யூனியன் விளையாட்டு கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யுனிபைட் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இந்த அணி 18 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களை பெற்றது.

இதில் மயூரன் 41 பந்துகளில் 63 ஓட்டங்களையும், நிமலேஸ் 22 பந்துகளில் 34 ஓட்டங்களையும், கஜன் 18 பந்துகளில் 26 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்

பந்துவீச்சில் தமிழ் யூனியன் விளையாட்டுக் கழகம் சார்பாக நிரஞ்சன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், கிரி 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

165 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தமிழ் யூனியன் விளையாட்டுக்கழகம் வெற்றி இலக்கை விடாது துரத்தியபோதும், 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களை மட்டுமே பெற்று 19 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் தமிழ் யூனியன் விளையாட்டுக் கழகம் சார்பாக ஜெசி 37 பந்துகளில் 53 ஓட்டங்களையும், சொரூபன் 16 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யுனிபைட் விளையாட்டுக்கழகம் சார்பாக மயூரன்,பகீ ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக, 63 ஓட்டங்களை அடித்ததோடு 1 இலக்கினையும் கைப்பற்றிய யுனிபைட் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த மயூரன் தெரிவானார்.

செவ்வானம் விளையாட்டுக் கழகத்திற்கும், கலைமகள் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் இடம்பெற்ற மற்றொரு போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது செவ்வானம் விளையாட்டுக் கழகம். அந்த அணியின் இலக்குகள் தொடர்ச்சியாக சரிந்தன. இதனால் செவ்வானம் வீரர்கள் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி, 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் செவ்வானம் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த றேகன் 28 பந்துகளில் 29 ஓட்டங்களையும், சிவானந்தன் 15 பந்துகளில் 14 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கலைமகள் விளையாட்டுக்கழக சார்பாக நிசாந்தன் 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், இருதயராஜ் 19 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

105 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைமகள் விளையாட்டுக்கழகம் 19.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களை மட்டும் பெற்று 7 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழகம் சார்பாக ரவிராஜ் 34 பந்துகளில் 18 ஓட்டங்களையும், ஜெகன் 10 பந்துகளில் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் செவ்வானம் விளையாட்டுக்கழகம் சார்பாக சிவானந்தன் 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் சிவாசலிஸ் 17 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும், சுரேன் 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக செவ்வானம் விளையாட்டுக்கழகம் சார்பாக சகலதுறைப் பெறுபேறுகளை வெளிப்படுத்திய சிவானந்தன் தெரிவானார். (ங-23-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுப்பர் ஓவரில் இலங்கை அணி சார்பில் மஹேலவும், பெரேராவும் களமிறங்க பந்தை வீசினார் ரிம் சவுதி இந்தப் பந்துப் பரிமாற்றத்தில் இலங்கை அணி ஒரு இலக்கை இழந்து 13 ஓட்டங்களைப் பெற்றது. 14 ஓட்டங்களை துரத்திய நியூஸிலாந்தின் கனவுக்கு தடை போட்டார் மலிங்க.



# சுப்பர் ஓவரில் சாதித்தது இலங்கை

**2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்**

நியூஸிலாந்து எதிர் இலங்கை — நாணயச் சுழற்சி: நியூஸிலாந்து

முடிவு: சுப்பர் பந்து பரிமாற்றத்தில் இலங்கை வெற்றி — ஆட்டநாயகன்: டில்ஷான்

நியூஸிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| நிக்கொல் | c திரிமன்னே b தனஞ்சய | 58 | 40 | 3 | 4 |
| குப்தில் | c பெரேரா b தனஞ்சய | 38 | 30 | 6 | 0 |
| பிரண்டன் மக்கலம் | c பெரேரா b அஜந்த மெண்டிஸ் | 25 | 16 | 0 | 2 |
| ரெயிலர் | b குலசேகரா | 23 | 15 | 2 | 0 |
| ஓரம் | c டில்ஷான் b குலசேகரா | 06 | 06 | 1 | 0 |
| நதன் மக்கலம் | b மலிங்க | 03 | 04 | 0 | 0 |
| பிராங்லின் | ஆட்டமிழக்காமல் | 08 | 05 | 1 | 0 |
| வில்லியம்ஸன் | run out (அஜந்த மெண்டிஸ்/சங்கக்கார) | 04 | 04 | 0 | 0 |
| வெற்றோரி | | | | | |
| சவுத் தீ | | | | | |
| மில்ஸ் | | | | | |
| உதிரிகள் | | 09 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| குலசேகரா | 4 | 33 | 2 | 0 |
| மத்தியூஸ் | 2 | 14 | 0 | 0 |
| மலிங்க | 4 | 30 | 1 | 0 |
| அஜந்த மெண்டிஸ் | 4 | 48 | 1 | 0 |
| தனஞ்சய | 4 | 32 | 2 | 0 |
| ஜீவன் மெண்டிஸ் | 2 | 13 | 0 | 0 |

TOTAL - 174/7 (20)
1-57 (குப்தில்), 2-99 (பிரண்டன் மக்கலம்), 3-137 (நிக்கொல்), 4- 154 (ரெயிலர்), 5-159 (ஓரம்), 6-164 (நதன் மக்கலம்), 7-174 (வில்லியம்ஸன்).

இலங்கை

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஜெயவர்தன | c வெற்றோரி b ஓரம் | 44 | 26 | 3 | 3 |
| டில்ஷான் | run out (சவுத் தீ/பிரண்டன் மக்கலம்) | 76 | 53 | 5 | 3 |
| சங்கக்கார | run out (ஓரம்/பிரண்டன் மக்கலம்) | 21 | 14 | 4 | 0 |
| ஜீவன் மெண்டிஸ் | c ரெயிலர் b பிராங்லின் | 08 | 09 | 1 | 0 |
| மத்தியூஸ் | ஆட்டமிழக்காமல் | 12 | 11 | 0 | 0 |
| திஸ்ஸர பெரேரா | b பிராங்லின் | 05 | 03 | 1 | 0 |
| திரிமன்னே | run out (பிராங்லின்/ரெயிலர்) | 05 | 04 | 1 | 0 |
| குலசேகர | | | | | |
| மலிங்க | | | | | |
| அஜந்த மெண்டிஸ் | | | | | |
| தனஞ்சய | | | | | |
| உதிரிகள் | | 03 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| நதன் மக்கலம் | 3 | 25 | 0 | 0 |
| மில்ஸ் | 2 | 15 | 0 | 0 |
| சவுத் தீ | 4 | 44 | 0 | 0 |
| ஓரம் | 3 | 26 | 1 | 0 |
| வெற்றோரி | 4 | 29 | 0 | 0 |
| பிராங்லின் | 4 | 34 | 2 | 0 |

TOTAL - 174/6 (20)
1-80 (ஜெயவர்தன), 2-119 (சங்கக்கார), 3-131 (அஜந்த மெண்டிஸ்), 4- 161 (டில்ஷான்), 5-167 (பெரேரா), 6-174 (திரிமன்னே)

c - பிடியெடுப்பு  b - பந்துவீசியவர்  st - ஸ்ரொம்

20/20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதலாவது சுப்பர் -8 போட்டியில் சுப்பர் ஓவரில் நியூஸிலாந்தை அடக்கியது இலங்கை.

பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அந்த அணியின் நிக்கோலும் குப்திலும் இலங்கை அணியின் பந்து வீச்சை ஒரு கை பார்த்தனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 51 ஆகஇருந்த போது 38 ஓட்டங்களுடன் குப்தில் அறிமுக வீரர் தனஞ்செயவின் சுழலில் வெளியேறினார். தொடர்ந்து வந்த மக்கலம் 2 சிக்ஸர்கள் அடித்துவிட்டு 25 ஓட்டங்களுடன் அடங்கினார். மறுமுனையில் அரைச்சதம் கடந்த நிக்கோலையும் வெளியேற்றினார் தனஞ்சய. அதன்பின்னர் ரெய்லர் 23 ஓட்டங்கள் எடுத்து களத்தை விட்டகல, நியூஸிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை வேகம் மந்தமானது. அந்த அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 174 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பதிலளித்தாடிய இலங்கைக்கு டில்சானும் மஹேலவும் நம்பிக்கையளித்தனர். இருவரும் இணைப்பாட்டமாக 80 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். எனினும் மஹேல (44), சங்ககாரா (21), ஜீவன் மெண்டிஸ் (8) டில்சான் (76) என்று அடுத்தடுத்து வெளியேற நிலைமை சிக்கலானது. இறுதியில் இலங்கை அணியும் 174 ஓட்டங்களையே பெற்றதால் சுப்பர் ஓவர் முறையில் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது.

சுப்பர் ஓவரில் இலங்கை அணி சார்பில் மஹேலவும், பெரேராவும் களமிறங்க பந்தை வீசினார் ரிம் சவுதி. இந்தப் பந்துப் பரிமாற்றத்தில் இலங்கை அணி ஒரு இலக்கை இழந்து 13 ஓட்டங்களைப் பெற்றது. 14 ஓட்டங்களை துரத்திய நியூஸிலாந்தின் கனவுக்கு தடை போட்டார் மலிங்க. அவரின் பந்து வீச்சில் ஓட்டங்களை எடுக்கத் திணறிய நியூஸிலாந்து 7 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இதனால் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சுப்பர் ஓவர் முறையில் இலங்கை அணி வாகை சூடியது. ஆட்ட நாயகனாக டில்சான் தெரிவானார். (ங)

**உதயன்**
**தினமும் வெல்லுங்கள்**
ரூபா. **2000**
கேள்வி 10

இலங்கையின் அறிமுக வீரர் தனஞ்சய சுப்பர் -8 சுற்றில் நியூஸிலாந்துக்கு எதிராக கைப்பற்றிய இலக்குகள் எத்தனை?

..........................................
பெயர்- ..........................................
முகவரி-..........................................
..........................................

- உதயனில் வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து 29.09.2012 ற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.
- உதயனின் யாழ். அலுவலகம், நெல்லியடி, சாவகச்சேரி, கரடிப்போக்குச் சந்தி, வவுனியா, மன்னார் ஜோதி புத்தகசாலை, சிவசாந்தி தேநீர்ச்சாலை-தாழ்வுப்பாடு அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் கூப்பனை இடலாம்.

# கெய்ல் மீண்டும் புயல் சரிந்தது இங்கிலாந்து

பரபரப்பான சுப்பர் -8 சுற்றின் இரண்டாவது ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் இங்கிலாந்தை தோற்கடித்தது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது மேற்கிந்தியத் தீவுகள் அணி. அந்த அணியின் சார்ளஸும், கிறிஸ் கெய்லும் இங்கிலாந்துப் பந்து வீச்சாளர்களைப் பதம் பார்த்தனர். இருவரும் பந்தை அடிக்கடி எல்லைக் கோட்டுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். வழமை போன்று சிக்ஸர் மழை பொழிந்த கெய்ல்(58) அணியின் ஓட்ட எண்ணிக்கை 103ஆக இருக்கும் போது ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய சாமுவேல்ஸ் , பொலாட், சமி ஆகியோர் அடுத்தடுத்து வெளியேற அதிர்ச்சியில் உறைந்தது மேற்கிந்தியத் தீவுகள். பின்னர் பிராவோவும் அன்ட்ரூ ரஸலும் அதிரடியாக ஆட மேற்கிந்தியத் தீவுகள் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 179 ஓட்டங்களைக் குவித்தது. இங்கிலாந்து அணியின் தலைவர் ப்ரோட் 2 இலக்குகளை வீழ்த்தியிருந்தார்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கீஸ் வெற்றர் மற்றும் லூக்ரைட் ஆகிய இருவரையும் ஓட்டம் எதனையும் எடுக்க விடாமல் ஆட்டத்தின் முதல் பந்துப் பரிமாற்றதிலேயே வெளியேற்றி இரட்டை அடி கொடுத்தார் ராம்போல். இதனால் இங்கிலாந்தின் துரத்தல் வேகம் மட்டுப்படுத்தப்பட்டது. பிறிஸ்ரோவும் 18 ஓட்டங்களுடன் வெளியேற இங்கிலாந்தின்கதி அவ்வளவு தான் என்று நினைத்தவர்களுக்கு பதிலடி கொடுத்தனர். இயன் மோர்கன், ஹோல்ஸ். இருவரும் இணைந்து அதிரடியாக ஆடி இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைக் கடந்தனர். ஆயினும் அவர்களால் மேற்கிந்தியத் தீவுகளின் அபாரமான கடைசி நேர களத்தடுப்பால் வெற்றி இலக்கை எட்டவே முடியவில்லை. இறுதியில் 164 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை மேற்கிந்தியத் தீவுகளிடம் தாரைவார்த்தது. ஆட்டநாயகனாக 84 ஓட்டங்களைக் குவித்த சார்ள்ஸ் தெரிவானார். (ங)







**2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்**

மேற்கிந்தியத்தீவுகள் எதிர் இந்தியா — நாணயச் சுழற்சி: மேற்கிந்தியத்தீவுகள்

முடிவு: மேற்கிந்தியத்தீவுகள் 15 ஓட்டங்களால் வெற்றி — ஆட்டநாயகன்: சார்ள்ஸ்

மேற்கிந்தியத்தீவுகள்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சார்ள்ஸ் | c பெயார்ஸ்ரோ b டென்பேர்ச் | 84 | 56 | 10 | 3 |
| கெய்ல் | c பின் b சுவான் | 58 | 35 | 06 | 4 |
| சாமுவேல்ஸ் | c மோர்கன் b புரோட் | 02 | 08 | 00 | 0 |
| பொலாட் | c லூக் ரைட் b பின் | 01 | 05 | 00 | 0 |
| டுவைன் பிராவோ | ஆட்டமிழக்காமல் | 11 | 08 | 02 | 0 |
| சமி | b புரோட் | 04 | 03 | 00 | 0 |
| ருஷல் | ஆட்டமிழக்காமல் | 10 | 05 | 02 | 0 |
| ராம்டின் | | | | | |
| நரைன் | | | | | |
| ராம்போல் | | | | | |
| பத்திரி | | | | | |
| உதிரிகள் | | 09 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பின் | 4 | 26 | 1 | 0 |
| டென்பேர்ச் | 4 | 38 | 1 | 0 |
| புரோட் | 4 | 26 | 2 | 1 |
| சுவான் | 3 | 32 | 1 | 0 |
| பட்டேல் | 4 | 38 | 0 | 0 |
| லூக் ரைட் | 1 | 11 | 0 | 0 |

TOTAL - 179/5 (20)
1-103 (கெயில்), 2-118 (சாமுவேல்ஸ்), 3-128 (பொலாட்), 4-154 (சார்ள்ஸ்), 5-158 (சமி)

இங்கிலாந்து

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| கீஸ்வெட்டர் | c பொலாட் b ராம்போல் | 00 | 02 | 0 | 0 |
| ஹேல்ஸ் | st ராம்டின் b சாமுவேல்ஸ் | 68 | 51 | 5 | 2 |
| லூக் ரைட் | c கெய்ல் b ராம்போல் | 00 | 01 | 0 | 0 |
| பெயார்ஸ்ரோ | c பொலாட் b கெய்ல் | 18 | 29 | 2 | 0 |
| மோர்கன் | ஆட்டமிழக்காமல் | 71 | 36 | 4 | 5 |
| புட்லர் | ஆட்டமிழக்காமல் | 01 | 01 | 0 | 0 |
| பட்டேல் | | | | | |
| புரோட் | | | | | |
| சுவான் | | | | | |
| பின் | | | | | |
| டென்பேர்ச் | | | | | |
| உதிரிகள் | | 06 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ராம்போல் | 4 | 37 | 2 | 1 |
| பத்திரி | 4 | 20 | 0 | 0 |
| நரைன் | 4 | 33 | 0 | 0 |
| சமி | 1 | 13 | 0 | 0 |
| கெயில் | 4 | 27 | 1 | 0 |
| சாமுவேல்ஸ் | 3 | 32 | 1 | 0 |

TOTAL - 164/4 (20)
1-0 (கீஸ்வெட்டர்), 2-0 (லூக் ரைட்), 3-55 (பெயார்ஸ்ரோ), 4-162 (ஹேல்ஸ்)

c - பிடியெடுப்பு  b - பந்துவீசியவர்  st - ஸ்ரொம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# சுனில் நரைனால் எங்களுக்கு மரியாதை



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அவ்வணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் அதிக தரத்தை கொண்டு வருவதாக அவ்வணியின் தலைவர் டரன் சமி தெரிவித்துள்ளார். அத்தோடு சுனில் நரைன் அணிக்கு ஏராளமான நன்மைகளை வழங்குவதாகவும் டரன் சமி புகழ்மாலை சூட்டினார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் புதிய மாயச் சுழற்பந்து வீச்சாளரான சுனில் நரைன் அண்மைக்காலமாக மேற்கிந்தியத் தீவுகளின் அனைத்து வகையான போட்டியிலும் அவ்வணிக்கு அதிகளவிலான இலக்குகளைக் கைப்பற்றி வருவதோடு, எதிரணிக்கு அதிக சவாலையும் வழங்கி வருகிறார்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள டரன் சமி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு அதிக தரத்தைக் கொண்டுவருவதாகத் தெரிவித்ததோடு, சுனில் நரைனை எந்த விதத்திலும் பயன்படுத்தக்கூடியதாக உள்ளதாகத் தெரிவித்தார். ஆரம்ப 'பவர் பிளே' பந்துப் பரிமாற்றங்களில், மத்திய பந்துப் பரிமாற்றங்களில், இறுதி நேரத்தில் எங்கு வேண்டுமென்றாலும் சுனில் நரைனைப் பயன்படுத்தக்கூடியதாக உள்ளமை அணிக்கு மிகவும் உதவியாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி தங்களுடைய முதலாவது 'சுப்பர் 8' ஆட்டத்தில் இங்கிலாந்து அணியைச் சந்திக்கவுள்ள நிலையில் இங்கிலாந்து அணியை வெற்றிகொள்ளலாம் என்று டரன் சமி நம்பிக்கை வெளியிட்டார். குறிப்பாக இந்திய அணிக்கெதிராக இங்கிலாந்து அணி சுழற்பந்துவீச்சில் தடுமாறியதை அடுத்து இங்கிலாந்திற்கெதிரான ஆட்டத்திலும் சுனில் நரைன் தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்த முடியும் என்று டரன் சமி நம்பிக்கை வெளியிட்டார்.

(5)

**நகை தவறிவிட்டது**

கடந்த 20.09.2012 வியாழக்கிழமை அன்று 2 மணிக்கு முல்லைத்தீவு தனியார் பஸ்சில் யாழ்ப்பாணம் பயணம் செய்த பொது 49 கிராம் 600 மில்லி கிராம் நிறையுடைய கல்லுப்பதக்கம் சிவப்பு நிற பெட்டியோடு தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் 0770409484 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
மனம் உவந்து தருபவருக்கு ரூ 50000 சன்மானம் வழங்கப்படும்.
(23396)(3.14)

**CIMA கல்வி @ CAPSTONE**
0771 250 350
No. 154,A/1, Navalar Road, Jaffna.

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N. குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா?, மனஉளைச்சலா ?
எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)
பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P: 072 6816681, 0726816691
(3646) (15-14)

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23606)(3.6.7)

**விசேட கருத்தரங்குகள்**

* திட்டமிடல் சேவை
மட்டுப்படுத்தப்பட்ட திறந்த பரீட்சை சனி, ஞாயிறு 9.00-4.00 மணி வரை
கட்டணம் 1000/=
* கணக்காளர் சேவை
ஆரம்பம்:- ஞாயிறு (30.09.2012) 1.00மணி அடுத்த வாரம்முதல் சனி,ஞாயிறு மு.ப 10.00 மணி தொடக்கம் 4.00மணி வரை 40 மணித்தியால வகுப்பு கட்டணம்1500/=
* முகாமைத்துவ உதவியாளர் கூட்டுறவுப் பரிசோதகர்
ஞாயிறு 12.00 மணி-4.00மணிவரை
* வினைத்திறன் காண் தடைப் பரீட்சை
முகாமைத்துவ உதவியாளர் III சனி 9.00மணி
கிராம சேவையாளர் தரம் III சனி 2மணி ஞாயிறு 12.00மணி
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)
(சி/3686)(3.14)

வெல்லுங்கள் பரிசு Rs.6000 (கற்க மட்டும்)
புதிர் போட்டி
அடுத்து வரும் உருவை தெரிவு செய்க?
A B C D
உங்கள் விடையை MCAI2, A/B/C/D _<Name>,<Nic No> <address> என்பவற்றை type செய்து 775520940 என்ற இலக்கத்திற்கு 29.09.2012 க்கு முதல் அனுப்பி வைக்கவும்.
கணினி கம்பஸ் MCAI CAMPUS
கல்வியங்காட்டில் Supported by Jaffna Computer Society 243, Adiyapatham Road,

**CHEMISTRY S.VASU**
A/L 2014
ஒட்சியேற்றலும் தாழ்த்தலும்
ஆரம்பம்:- 29.09.2012
சனி 12.30pm
Sat, Sun 12.30 - 1.30pm
**NEC**
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர் (பெருமாள் கோவில் அருகில்)
(சி/3694)(3.14)

**PHYSICAL CHEMISTRY**
BY:- அன்பு
ஒரேயொரு பிரிவு மட்டும்.
ஆரம்பம்:- 30.09.2012 ஞாயிறு
11.00 am
Sat, Sun 11 - 12.15
(சி/3685)(3.14)
**THE SCIENCE POINT**
கன்னாதிட்டி வீதி, யாழ்.நகர்.

**CHEMISTRY S.VASU**
A/L 2013
பென்சின் (Benzene)
ஆரம்பம்:- 29.09.2012
சனி 4.30pm
Sat, Sun 4.30 - 6.00pm
**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**FREE Training**
வேலை வாய்ப்பு நிறைந்த
Web Designing
Networking
Multimedia
Type Free <Course><Name> & Sms to 772395895
MCS IT CAMPUS (சி/3687)
324,Palaly road, Jaffna.
Supported by UNDP/JRRP

**பணியாளர் தேவை**

01. கணக்கு பதிவாளர்:-
முன்னனுபவம் உடையவர்கள் மட்டும்
02. கணினி இயக்குநர்:-
ஆகிய பதவிகளுக்கு தகமையுடையோர் பணி நாள்களில் (8.30am - 5.30pm)நேரில் வரவும்.
அஸ்வினி மல்ரி பிளாசா
இல.74, பலாலி வீதி, ராஜா பிளாசா
கோண்டாவில் கிழக்கு.
(23358)(3.14)

**கண்ணீர் அஞ்சலி**

எமது வைத்தியசாலையின் அபிவிருத்தியில் ஆர்வமும், அர்ப்பணிப்பும் மிகுந்த நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த
*மாணிக்கம் சிவநாதபிள்ளை*
அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் கவலை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதோடு குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
ஓம் சாந்தி!
ஊழியர் நலன்புரி சங்கம்,
ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை.
(23388)(3.14)

2102 A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே !!
அனைத்து கணனிக்கற்கை நெறிகளுக்குமான
**September** மாதத்திற்குரிய இறுதிப்பிரிவு
ஆரம்பம்
பிரிவு IV : **29.09.2012** காலை 10.00மணி
இப் பிரிவுகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் மாணவர்கள் ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளும் அதேவேளை Kingston Flash Memory ஒன்றினையும் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாய்ப்பு இப்பிரிவுகளுக்கு மட்டுமே.
மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741
**INSTITUTE OF INFORMATICS STUDIES**
இல 100, மணிக்கூட்டு வீதி , யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831 (சி/3645)

**Web Development and Multimedia** துறையில் கற்கைகளும் தொழில் வழிகாட்டலும்
**மாபெரும் இலவசக் கருத்தரங்கு**
**30.09.2012 ஞாயிறு காலை 9.00 மணிக்கு, யாழ். நாவலர் கலாச்சார மண்டபத்தில்**

- இணையத் துறையில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய அறிமுகமும் குறிப்பிட்ட தொழில்நுட்பங்களில் தேர்ச்சி பெறுவதற்கு கற்கக்கூடிய கற்கைநெறிகள் பற்றிய விளக்கமும்.
- நேர்த்தியான வழிமுறைகளில் இணையம் மூலம் உங்கள் திறமைக்கேற்ப வரையறையற்ற வருமானத்தினை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றிய அறிமுகமும் வழிகாட்டலும் (ஆதாரத்துடன்).
- இணையத் துறையின் எதிர்கால மாற்றங்கள் மற்றும் அனுகூலங்கள் பற்றிய பார்வை. எதிர்கால மாற்றங்களுக் கேற்ப எம்மைத் தயார்ப் படுத்திக் கொள்வது தொடர்பான ஆலோசனை.
- 3D Animation, Multimedia துறைகளில் நவீன உத்திகள் மற்றும் கற்கைகள்
- இந்திய மற்றும் Hollywood திரைப்படங்களில் காண்பிக்கப்படும் 3D Animation, Visual Effects காட்சிகள் தயாரிக்கும் முறைகள்
- முப்பரிமான தோற்றத்தில் கட்டிடங்கள், பொருட்கள், Logo, Title வடிவமைத்தலும் Animation வழங்கலும்
- திரைப்படங்கள், குறும்படங்கள், பாடல் தொகுப்புக்களில் காட்சி ஒழுங்கமைப்பு மற்றும் படத்தொகுப்பு பற்றிய அறிமுகம்
- 3D Animation மற்றும் Multimedia துறைகளில் நிகரற்ற வருமானம் பெறும் வழிகள் ஆதாரங்களுடன்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் !!!*
தொடர்புகளிற்கு:
0750393776, 0779471771
support@websternetworks.lk
பங்குபற்றும் அனைவருக்கும் விசேட சலுகைகள்... காத்திருக்கின்றன..!!!
இணைந்து வழங்குவோர்
Maya DOT VFX & webster networks MAKING DREAMS REALITY
(23372)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org